

பட்டணத்துசுவாமிகள்

உ

திருச்சிற்றம்பலம்.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

அடங்காப் பிரதாபம் பொருந்திய பட்டணத்தார் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டிற்கு, சென்னை தொண்டைமண்டலம் கல்விசாலை பிரதம தமிழ்ப்பண்டிதர் வித்வான் ஸ்ரீ அப்பன் செட்டியார் அவர்கள் மாணாக்கர் ம-ள-ள-ஸ்ரீ. மா. வடிவேலு முதலியார் எழுதிய பொழிப்புரையைப் பொருந்தவே செய்து அச்சிலிடுவித்த சென்னை புரசைவாக்கத்தைச் சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பயகாரு செட்டி வீதி 25-வது நெம்பர் வீட்டிலிருக்கும் **பூ. சு. துளசிங்க முதலியாருக்கு** சகல சுதந்தரமும் கொடுத்திட்டமையால் அது மேற்படி பூ. சு. துளசிங்க முதலி அனுமதியின்றியாவரும் எவ்விதத்திலும் அச்சிடாவண்ணம் பொருந்திய கெவர்மெண்ட் சட்டப்படி (ரிஜிஸ்தர் காபிரயிட்) செய்யப்பட்டிருக்கிறது.

---

இன்னும் அனேகவித புத்தகங்களும், மருந்துகளும், ரப்பர் ஸ்டாம்புகளும், தங்கக்கிலிட் நகைகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், புனுகு ஜவ்வாது முதலிய வாசனைத் திரவியங்களும், தொப்பி தினுசுகளும், பித்ஹாட் என்னும் சடைத்தலை குட்டைகளும் உண்டு. கேட்லாக் தேவையானவர்கள் ½-அணா வேலையில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 1-அணா பெறும்படியான 2-கேட்லாக் அனுப்பப்படும். அதைப்பார்வையிட்டு தேவையானதற்கு எழுதவும்.

**பூ. சு. துளசிங்க முதலியார் அண்டு சன்ஸ்**

சுந்தரவிலாசம் பிரஸ்,

பிரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

1714 (25473)

## பட்டணத்துப் பிள்ளையாருடைய

# சரித்திரச்சுருக்கம்.

ஸ்ரீ சிவபெருமானானவர் முன்னொருகாலத்தில் குபேரனுடைய வேண்டுகோளால், தாம் தென்தேசங்களிலுள்ள க்ஷேத்திரங்களில் ஆன்மகோடிகள் உய்யும்படியாக திருவுளங்கொண்டு, ஸ்ரீபர்வதராஜ புத்திரியோடு இடபவாகனரூடராய் விநாயகர் முதலாகச் சொல்லப்பட்டவர்கள் சூழ்ந்துபோற்றிவர திருவோலக்கங்கொண்டு திருக்கயிலாயத்திலிருந்து எழுந்தருளி, ஸ்ரீ காசி முதலிய திருப்பதிகளைக் கடந்தருளி, அக்குபேரனது குறையை முடிக்கத் திருக்காவிரிப்பூம் பட்டினத்தை யடைந்தருளினார்.

இப்பட்டினமானது மிகவிசித்திரக் காட்சிகளுடையதா யிருந்ததனாலும், அதிலுள்ள வைசியர் வீதி அப்பட்டின விசித்திரங்களைப் பார்க்கிலும் பதினமடங்கு உயர்ந்ததா யிருந்தமையாலும்; தமது தோழனாகிய குபேரனுக்கு அப்பட்டணத்தைவிட்டு நீங்க மனமெழவில்லை இதைச் சிவபெருமானுணர்ந்து, குபேரனைப்பார்த்து "நீ இந்தப்பட்டணத்தில் வாசஞ் செய்ய நினைத்தாயாகையால் இப்பூவுலகத்தில் பிறக்கக்கடவாய்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அச்சிவபெருமான் கட்டளையைத் தலைமேற்கொண்டு திடுக்கிட்டு மிகவும் வருத்தப்பட்டுக் கடவுளை வணங்கி நின்று தேவரீர், அடியேனைப் பிறவிக்கடலில் விழாதவண்ணம் ஆட்கொள்ள வேண்டும். என்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

நகேட்கச் சிவபெருமான் அவ்வாறே ஆகுக! என்று சொல்லித்தமது கயிலையமலைக்குச் சென்றனர்.

அச்சிவபெருமானுடைய உத்தரவின்படி குபேரன் அப்பட்டினத்தில் சிவநேசச் செல்வராயிருந்த, சிவநேயதுப்தருக்கும், ஞானகலை என்பவருக்கும், புத்திரராக அவதரித்துச் சுவேதாரண்யர் என்னும் திருப்பேர் வைக்கப்பெற்று ஐந்தாம் வயதையடைந்து, தந்தையார் சிவபதமடைய அவருக்குச் செய்யவேண்டிய கடன்களை முடித்துப் பின்னர் நல்லாசிரியரிடத்தில் சகலகலைகளையும் ஓதியுணர்ந்து, ஆறும்வயதில் பிறவித்துன்பத்தை நினைத்து நினைத்து வருந்திச் சிவபெருமான் திருவடிகளைச்சிந்தித்து வருகையில் ஓர்நாள் அச்சிவபெருமான் ஒருவிருத்தவேதியராக இவரது கனவில் எழுந்தருளி "நாளைய தினம் திருவோண நக்ஷத்திரமும் பிரதோஷமும் கூடிய சோமவாரமாக விருத்தலால் நீ சுவேதாரண்யர் ஆலயத்திற்குச்சென்று சிவபெருமானைப் பூசித்து வழிபடக்கடவாய்" என்றுசொல்லி மறைய, அவ்வாறே மறுநாட்சென்று பூசித்து நிற்கையில் கனவில் தோன்றிய சிவபெருமானே ஞானாசாரியராய்த் தம்மைத்தேடி வந்தடையவும், அவரால் சிவதீக்ஷை செய்யப்பெற்று அவரால் கொடுக்கப்பட்ட தங்கப்பெட்டகத்தைத் திறந்து அதினுள்ளிருந்த ஸ்படிகலிங்கமூர்த்தியையும், மாகதவிநாயக மூர்த்தியையுங்கண்டு, மிக்க ஆச்சரியமடைந்து ஞானாசாரியரைவணங்கி அவருடைய உத்திரவின்படி நல்லதீர்த்தமாடி அம்மூர்த்தங்களைப் பீடத்தில் எழுந்தருளப்பண்ணி விதிப்படி பூசை செய்து முடித்து, ஆசாரியர் முதலியோருக்கு உணவிட்டுத்தாயும் தாமுமுண்டு மகிழ்ந்து தமதிடத்திருந்த செல்வம் யாவையும் சிவபூஜாவிஷயத்திலும் சிவனடியார் விஷயத்திலும் செலவிட்டபடியால் மறு குருபூஜைக்குப் பொருளில்லாமையைப் பற்றித் தமது தாயினிடத்தில் சொல்லிவருந்தி, இருவரும் துயிலுங்கையில், சிவபெருமான் கனவிற்றோன்றி "நீவருந்தற்க, நம்மில்லத்தில் வெகு திரவியமிருக்கின்றது, அதைக்கொண்டு உன் குறையை முடிப்பாயாக" என்று சொல்லி ம



சிவசருமரும் சுசீலையும் சிவபிரானருளிய குழந்தையைக் காணுதல்.

றைந்தனர். பின்னர் சுவேதாரண்யர் விழித்தெழுந்து பொழுதுவிடிந்தவுடன் அப்பொருள்களைக்கண்டு, அவற்றைக்கொண்டு தமது குறைகளை முடித்துத்தமக்கும் பதினாறாமாண்டில் அக்காவிரிப்பூம் பட்டினத்தில் தம்மரபிற்கொத்த மரபினரான சிவசிதம்பர செட்டியாருக்கும், சிவகாமியம்மைக்கும் பிறந்த சிவகலை என்னும்பெண்ணைவிவாக முடித்து இல்லறநடாத்திக் குலத்தொழிலை விர்த்திசெய்து பட்டணத்துச் செட்டியார் என்னும் சிறப்புப்பெயரையும் பெற்றுவாழ்ந்து வயது முப்பதாகவும் மகப்பேறின்றி திருவிடைமருதூரரைக் குறித்து விரதங்களியற்றி வந்தனர்.

அத்திருவிடைமருதூருடைய சிவபெருமான் தன்னைப்பூசிக்கும் சிவசருமர் என்னும் ஆதிசைவப் பிராமணனுடைய தரித்திரத்தை நீக்கும்பொருட்டு அவ்வேதியர்பால் பல அதிசயங்களைக் காட்டிக் கடைசியில் அச்சிவசருமரும், சுசீலையும் நித்திரை செய்கையில் அவர்களுடைய கனவில் சிவபெருமான் தோன்றி ‘நாம் காருண்யாமிர்தத் தீர்த்தக்கரையின் கீழண்டை வில்வ விருக்ஷத்தின் கீழ் மகவுருக்கொண்டிருப்போம் நீங்கள் அம்மகவை யெடுத்துக்கொண்டு காவிரிப்பூம் பட்டினத்தில் மகவின்மையால் வருந்தித்தவம்புரியும் சுவேதாரண்யனிடத்தில் கொடுப்பீர்களானால், அவன் அம்மகவி னெடைப்பொன் கொடுப்பன், அதைக்கொண்டு உங்கள் தரித்திர நீங்கி வாழ்வீராக’’ என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். அங்ஙனமே சிவசருமர் அக்குழவியைக்கண்டு எடுத்து அப்பட்டினத்தின் ஓர் சோலையில் தழைகளில் அக்குழவியைக் கிடத்திச் சற்றிளைப்பாறியிருந்தனர்.

இவ்வாறே சிவபெருமான் சுவேதாரண்யர் சிவகலை இவர்களிருவர் கனவிற்றோன்றி சோலைக்கண்ணிருக்கும் குழந்தையைப்பெற்றுக்கொள்ளும் வகையையும் அதற்கு விலைகொடுக்கவேண்டிய அளவையும் சொல்லி மறைந்தனர்.

அவ்வாறே சுவேதாரண்யர் சோலையிற்போய் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டுவந்து அக்குழவியைப் பெற்றுக்கொண்டு அதின்

எடைக்குசசரியாகத் திரவியத்தைக்கொடுத்து சிலநாள் வைத்திருந்து பிறகு தமது தேறிலேற்றி அவர்களுடைய ஊருக்கநுப்ப அவர்களும் தமது ஊரையடைந்து சிவனடியார்களுடனுண்டு வாழ்ந்திருந்தனர்.

மேற்படி சுவேதாரண்யர் இங்ஙனம் கிடைக்கப்பெற்ற புத்திர னுக்கு **மருதப்பிரான்** என்னும் திருநாமமிட்டுப் புத்திரோற்சவம் கொண்டாடினர் இங்ஙனமாய்மருதப்பிரான் தமது விளையாட்டுப்பரு வத்தில் அனேகமான அற்புதங்களைச் செய்து நல்லாசிரியனிடத்தில சகலகலைகளையும் சிலநாளிலேயே கற்றறிந்தனர். இவ்வாறு சிப்பரு வத்திலேயே பலவகையான அதிசயங்களை யெல்லாம் செய்து பதிறெ றும் வயதளவாச சுவேதாரண்யராகப் பிறந்திருக்கிற குபேரனுக்கும், சிவசருமருக்கும் மோக்ஷமளித்தற்பொருட்டு நினைத்துத் தம்தந்தை யிடம் சென்று "நான் தீவாந்திரங்களிற்போய் வாணிபஞ் செய்து பொருளீட்ட வேண்டுகின்றேனென்றுசொல்லி" உத்தரவுபெற்று தூர் தீவிற்சென்று தாம்கொண்டுபோன சரக்குகளையெல்லாம்விற்று லாதி யக்கேடி அப்பொருள்களை யெல்லாம் சிவசம்பந்தமான காரியத்தி லேயே செலவிட்டனர். பிறகு தம்முடன்போன வணிகசசிறார்களோ டும் கப்பலிலேறிவந்து வழியில் பல அற்புதங்களைக்காட்டித் தம்மூ ரடைந்தபோது தாங்கொண்டுவந்த எருமுட்டைகளையும் தவிட்டுமூ ட்டைகளையும் தந்தையார் கண்டு கோபமுடையவராகித் தம்புதல்வ ரானமருதப்பிரானை ரிட்டுக்காப்பியில் வைத்துப்பின்னர் பார்க்கப் போனபோது அவர் அங்கில்லாமையால் மனம் வருந்தி நின்றனர்.

இங்ஙனம் காணுமற்போய்விட்டமருதப்பிரானுர் திருவிடைமரு தூரில் தம்மைப் பூசித்துவரும் சிவசருமர் முன்தோன்றி அவரைக் குடும்பத்தோடு ஐக்கியஞ் செய்துக்கொண்டு தாம் சிவலிங்கத்தினிட மாக மறைந்தருளினா, இது நிற்க.

அச்சாவிரிட்டும் பட்டினத்தாரான சுவேதாரண்யர் தம்புத்திர னைக் காணுமையால் வருந்திருக்கையில் தமது மனைவியார், ஒரு



குழந்தையை சுவேதாரணியனிடம் விலை கொடுத்துப் பொன்பெறுதல்.



மருதப்பிரான் வாணிபஞ் செய்யப் படகேறிச் செல்ல

சிறு பெட்டியை அவர்முன் கொண்டுவந்து வைத்து "இதனை நாங்கள் வந்தவுடன் கொடுக்கும்படி நம்புத்திரன் கொடுத்துவிட்டுப்போயினன்" என்றுசொல்லிக்கொடுக்க, அச்சுவேதாரணியர் அதைத்திறந்து பார்க்க அதனுள் ஒருகாதற்றவூசியும் ஓலைச்சீட்டொன்றும் இருந்தது. அதில் ஓலைச்சீட்டையெடுத்து வாசிக்க "காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே" என்று எழுதியிருப்பதைப் பார்த்து, தாய்க்கு ஒருவழியான ஆறுதலைச்சொல்லித் துறந்து வெளிவர, மனையிலிருந்து ஏங்க அவ்வம்மைக்குச் சில ஞானங்கள் கற்பித்து [illegible] செய்து, தமதுபொக்கிஷாதிபதியான சேந்தனாருக்கு நமதுபொருள்களைச் சூறையாடும்படி அஞ்ஞாபித்து அவ்வூர்ப்புறத்திலுள்ள பொதுமண்டபத்திற் போயிருந்தனர்.

அவ்விடத்தில் சாதியார்களெல்லாம் கூட்டம் கூட்டமாகப் போக அதற்கு "யாடுங்கு நீராங்கு" என்பதுமுதலிய திருப்பாடல்களைப் பாடி மௌனமடைந்திருந்தனர்.

அதன்பின்னர் அவ்வூராரையன் வந்து பலவாறான நியாயங்களைச்சொல்ல அதையும் மறுத்துப் பசியெடுத்தால் பிச்சையேற்றுணவு பேரானந்தத்தில் மூழ்கியிருந்தனர்.


இவரது சுற்றத்தார் இவர் விஷயத்திற்செய்த குற்றங்களையும் தன்தமக்கையார்செய்த பெருமிடையூற்றையும் ஒருவாறாக நீக்கிப் பிச்சையேற்றுண்டும், ஞானநிஷ்டை கூடியும் வருகின்ற காலத்தில் தமது அன்னையார் தேகவியோகமடைய மயானத்திற்குக் கொண்டு போன சுற்றத்தார்கள் அஞ்சியோடும்படி அங்கனம் சென்று அவர்களடுக்கிய சிதையைத் தள்ளிப் பச்சைவாழைமட்டை கொண்டுவந்து சிதையடுக்கி அதன்மேற் றம்முடைய தாயைக்கிடத்தி, "ஐயிரண்டு" என்னும் முதற்குறிப்பினையுடைய வெண்பா முதலாகப்பாடித் தகனகிரியைகளை முடித்து அங்கிருந்தும் திருவிடைமருதூருக்குச் சென்று திருப்பாடல்கள்பாடி, அங்கிருந்தும் பலதலங்களிற் சென்று பாடிவருகையில் திருவாரூரடைந்து சந்நியால் உயிரிழந்த ஒருவனை மீண்

யுயிர்பெற்றெழச்செய்து, பாண்டியநாடடைந்து திருப்பாடல்பாடி திருமுருகன் பூண்டில் பிச்சைகேட்கப் பெருங்குற்றஞ் செய்தவன் போல், அடியுண்டு "இருந்துமிடந்தேடி" என்னும்செய்யுளை அங்ஙனம்பாடி மற்றுமுள்ள திருப்பதிகளும் சென்று சுவாமியைத் தரிசித்துப்பதிகம்பாடி உஞ்சேனைமாகாளமடைந்து அவ்வூரில் அந்தப்புரத்திலுள்ள கணபதியாலயமடைந்து ஞானநிஷ்டை கூடியிருக்கையில் அவ்வூரராஜனான பத்திரகிரி தன்வீட்டில் களவுபோனதைத்தேடும் வழியாக இப்பட்டினத்தாரைக்கண்டு இவரேதிருடினவரென்று பலர்சொல்லக்கேட்டு அவரைப்பலவகையாக ஹிம்சிக்க எதற்கு அஞ்சாதிருந்தனர், பின்னர் அவ்வரசன் ஆஞ்ஞைப்படி இடப்பட்ட கழுமரத்தைப்பற்றச் செய்து அவ்வரசனைப் புனிதனாக்கி அவனுடன் மருதூரிற்சந்தித்த நாயைக் காசிராஜன் மகளாகப் பிறக்கச் செய்து பின்னர் அப்பத்திரகிரிஅரசன் மூலமாகவே அப்பெண்ணையும் அவ்வரசனையும்மோக்ஷத்திற் புகச்செய்து மிகவும் வருந்திச சிவபெருமானைக்குறித்து எம்பெருமானே! "இன்னும் எப்பொழுது உன்னுடைய திருவடிநிழல் கிடைக்கப் பெறுவேனோ" என்றுபலவாறாக வருந்தியிருந்து சிவபெருமானுடைய ஆஞ்ஞையைத் தமது சிரமேற்கொண்டு சேந்தனாரைத் தளையினின்றும் விடுவித்துத் திருவொற்றியூரடைந்து பலவகையான உருவங்களைப் பலநாள் காட்டியிருந்து ஒருநாள் தம்முடைய உடலை உண்மையிலேயே மறைத்து அப்படி மறைக்கப்பட்ட தம்முடலை நீத்துச் சிவலிங்கவுருவாகக் காட்டித் திவ்வியதேகம் பெற்றுச் சிவபெருமான் சந்நிதியடைந்து அவர் ஆஞ்ஞையால் முன்போலவே குபேரனாகிச சிவபெருமானைப் பணிந்து அவரிடத்திலேயே யிருந்தனர்.

அவர் மனைவியாரும் அப்போதே தமது பொய்யுடலை நீத்துஅவருடைய திருவடி நீழலை யடைந்தனர்.

சரித்திரச்சுருக்கம்

முற்றிற்று.



திருவொற்றியூரில் பட்டினத்தாரை சிவலிங்கமாகக் காட்டல.

மகாமகோபாத்யாய,
வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20.

உ

கடவுள் துணை.

## பட்டணத்துப் பிள்ளையார்

அருளிச்செய்த

# திருப்பாடற்றிரட்டு

## மூலமும்-பொழிப்புரையும்

முதலாவது

## கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

• (பொழிப்புரை) சிவபெருமான் என்னும் திருப்பெயரை உடையவனை, செவந்த பொன்னம்பலத்தில் நடனஞ்செய்கின்றவனை, மனமே! துதிசெய்யக்கடவை (அப்படி துதிசெய்வதைவிட்டு,)

அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க

(பொ-ரை) பிசாசுபோன்ற பொய்யாகிய உலக வாழ்வையும் அலைகின்ற காற்றைப்போன்ற உடம்பையும் பாதுகாவா திருப்பாயாகவும், (ஏனென்றால்,)

பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமாம் புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்

(பொ-ரை) பிறந்தவைகளெல்லாம் சாகின்றன; செத்தவைகளெல்லாம் பிறக்கின்றன; வெளிப்பட்டவைகளெல்லாம் மறைகின்றன; மறைந்தவைக ளெல்லாம் வெளிப்படுகின்றன; பெருத்தவைகளெல்லாம்சிறுக்கின்றன; சிறுத்தவைகளெல்லாம்பெருக்கின்றன; தெரிந்தவைகளெல்லாம்மறக்கின்றன; மறைந்தவைகளெல்லாம்தெரிகின்றன; சேர்ந்தவைகளெல்லாம் பிரிகின்றன; பிரிந்தவைகளெல்லாம் சேர்கின்றன; தின்றவைக ளெல்லாம் மலமாகின்றன; தரித்துக்கொண்ட (உடைகளெல்லாம்) அழுக்காகின்றன; விரும்பினவைகளெல்லாம் வெறுக்கப்படுகின்றன; வெறுப்பவைகளெல்லாம் விரும்பப்படுகின்றன; என்று (சொல்லுகின்ற) இவைகளையெல்லாம் தெரிந்து கொண்டாய் ஆகையால் (அல்லாமலும்)

பிறந்தன பிறந்தனபிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக்கொன்றன
தின்றனை யனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பின யனைத்து மனைத்து நினை யோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை

சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றென் றொழியா தூற்றனை யன்றியும்

(பொ-ரை) (உலகத்தில் இதுவரைக்கும்) பிறந்துள்ள ஜென்மங்களிலெல்லாம் எல்லா உயிர்களையும் நீகொன்றாய்; அவைகளும்உனனைகொன்றன, அவைகளை யெல்லாம் நீதின்றாய், அவைகளும்உன்னை தின்றன, எலலாவற்றையும் நீபெற்றாய், அவைகளும் உன்னைப் பெற்றன, எல்லாவற்றையும நீபாதுகாத்தாய், அவைகளும்உனனைப் பாதுகாத்தன, செல்வம் வந்தபோது சந்தோஷித்தாய், தரித்திரம் வந்தபோதுவருத்தப்பட்டாய், சொர்க்கலோகத்தில் இருந்தாய், நரகத்தில் கிடந்தாய், இவ்வுலகத்தில் இன்ப துன்பங்களை அநுபவித்தாய், (ஆகையால் மேலே சொன்னவைகளில் ஒவ்வொன்றையும விட்டு விடாமல் அநுபவித்தாய்) அல்லாமலும்,

புற்புதக் குரம்பை துச்சி லொதிக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பூளையும் நீரும் புறப்படுமொரு பொறி
பீளுங் குறுப்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவிழு மொரு பொறி
உமிழ் நீர்கோழை யொழுகு மொரு பொறி
வளியு மலமும் வழங்கு மொரு வழி
சலமும் சீயுஞ் சரியு மொரு வழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்படாறும்
சட்டக முடிவிற் சுட்டெனும் பாகும்
உடலுறு வாழ்க்கையையுள்ளுறத் தேர்ந்து

(பொ-ரை) நீர்க்குமிழிபோல் (நிலையில்லாமல்) அருவருக்கத் தக்கதாய் இருந்துவிளங்குகின்ற சரீரத்தைக் கருங்கல்லைப்பார்க்கிலும் பலமுடையதாக நினைத்தாய், (அப்படிநினைத்த) இந்தஉடம்பில் ஒரு பொறியில் பீளையும் சலமும் வெளிப்படும், ஒருபொறியில் குறும்பிவெளிப்படும், ஒருபொறியில் சளியும் சலமும் இழியும், ஒரு பொறியில் எச்சிலும்கோழையும் ஒழுகும், ஒருவழியில் அபானவாயுவும் மலமும் வெளிப்படும்? ஒருவழியில்சலமும் சீயும் ஒழுகும் அல்லாமலும் உள்ளிருந்து வெளிவரைக்கும் நாறும் முடிவில்சுட்ட எலும்பாகும், (ஆகையால்) இப்படிப்பட்ட உடம்போடு கூடியவாழ்வை மனதில்நன்றாய்த் தெளிந்து (இதுநமக்குத் துணையல்லவென்று உணர்ந்து)

கடிமலர் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவர விருவினை மலமற
வரவொடு செலவற வருளற விருளற
இரவொடு பகலறவிகபற மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ்சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்கு நெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

(பொ-ரை) வாசனைபொருந்திய கொன்றைப்பூமாலையைத் தரித்த சடாபாரத்தையுடைய கடவுளை, நீங்காத சுகத்தைக் கொடுக்கின்ற

சிவபோகத்தை? (நீ அடையத் தருந்த) நிழலாகக்கொண்டு (அந்தநிழலில்) அழியாத குணத்தோடு இருந்து எனதென்னும் மமகாரமும், ஒருபொருளை நினைப்பதும், நல்வினை தீவினைகளும், ஆணவ கன்ம மாயைகளும், பிறப்பு இறப்புக்களும், மயக்கமும் அஞ்ஞானமும் இரவும் பகலும், இம்மை மருமைகளும், ஒழியும்பொருட்டு (தன்போல் வேறொருவரையும் சொல்லக்கூடாத) ஒப்பற்றமுதல்வனை, சிதம்பரத்தில் வெளிப்படையாய்க் காணப்படுகின்ற சோதிசொரூபமானவனை சிற்றம்பலத்திற்குத் தலைவனை, ஆநந்தத்தாண்டவஞ் செய்கின்றவனை நெருப்பைக்கண்ட அரக்கைப்போல நெகிழ்ந்துருகி, திருச்சிற்றம்பலம் என்கிற சிதாகாசத்தில் விளங்குகின்றசிவபெருமானை மனமே! நீ துதி செய்யக் கடவாய். சிவபெருமான் என்னும் திருப்பெயரை யுடையவனை, செவந்தபொன்னம்பலத்தில் நடனஞ்செய்கின்றவனை மனமே நீ துதிசெய்யக்கடவாய். (எ-று.)

## இரண்டாவது
# கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் விண்ணுட னுடுங்
காதலுங் கருத்துமல் லாலின் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித்தங் கோழை குடிபுகுஞ்சீறூர்

ஊத்தைப் புன்றோ லுதிரக்
நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலை திடருள்
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றிற் பறக்குங் காணப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப் பாணன் றைக்குஞ்சட்டை
ஈமக் கனலி விடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி
பவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய்நடக்கும் வடிவின் முடிவிற
பிணமாய்க் கிடக்கும் பிண்டம்பிணமே
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்ட கண்காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்

அமையு மமையும் பிரானை யமையும்
இமைய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக்கழகே.

(பொ - ரை) அங்கும் இங்குமாக அலைகின்ற ஐந்துதிருடர்கள் கலகஞ்செய்து அழிக்குங்காடு, சலமும்மலமும் நிறைந்தபெரியபெட்டி, நல்வினை தீவினைகளைச்சேர்த்துவைத்தற் கிடமான சிறியபெட்டகம் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்கிற மும்மலங்களும் வாசஞ்செய்கின்ற சிறியவூர், ஊத்தையோடுகூடிய அற்பத்தோலாலும், இரத்தப்பந்தத்தாலும், (உருவாகத்தோன்றும்) துர்நாற்றத்தையுடைய பாண்டம், நான்கு முழம் நீளமும், ஒன்பது துவாரமுமுள்ள (ஒருமரத்துண்டு) பேய்ச்சுரைச்செடி பயிராகுந்தோட்டம், புழுதிமிகுந்த பெரிய சுடுகாட்டுமேடை, ஆசைஎன்கிற கயிற்றினால் ஆடுகின்றபம்பரம், நீங்காமல் என்றும் வந்துகொண்டேயிருக்கும் நோய்க்கு இடம். ஓடுகின்ற கப்பல் நீங்கா மயக்கத்தையுடைய அழியுங்கூண்டு, சோற்றை அடைத்து உபயோகிக்குந் துருத்தி, தூற்றுகின்றபதர், காற்றில் பறக்கின்ற கானப்பட்டம், ஏற்படுத்திய அளவின்பிரகாரம் எமனால் வெட்டப்பட்டகட்டை, நான்கு முகங்களையுடைய பிரமனால் தைக்கப்படுஞ் சட்டை, சுடுகாட்டு நெருப்புக்கு இடுகின்ற விருந்து, காமத்தீயில் கறுகிப்போகின்ற உலர்ந்தஇலை, புழுக்களால் கிண்டப்படுகின்ற கிழங்குத்தோல், பாவமாகிய துளிர் ஏறுவதற்காக வைத்திருக்கும் கொழுகொம்பு, முன்னர்விவாகத்தோடு நடந்து பின்னர் பிணமாய்ப் படுக்கும் பிண்டம், (செத்தபிறகு) ஊரினுள்ளே இருக்கக்கூடாத துன்பம், காற்றுக்கு எதிர்ப்பட்ட பூளையலர், காலையில் உதயமாகும் சூரியனுக்கு எதிர்ப்பட்ட கொடியபனிக் கூட்டம், ஆகாயத்தில்தோன்றுகின்ற இந்திரவில், சத்தஞ்செய்கின்ற மட்பினுடைய ரூபத்தின் அரியநிழல், நீரினிடத்தில் உண்டாகும்முட்டை, நீரின்மேல் எழுதும்

எழுந்துநித்திரைசெய்யும் கனவிற்கண்டகாக்ஷி (அந்தக்காக்ஷியிலும்) பொல்லாததாகிய மாய்கையையுடையகளங்கமென்னும் இத்தேகமானது எம்பெருமானே! எனக்குவரும். (ஆகையால்) அந்தத்தேகம் வாராதபடி தடுத்துக் காதுவரைக்கும் நீண்டிருக்கிறகலகத்தைச் செய்கின்ற கண்களையுடைய பெண்களிடத்தில துன்பத்தோடு நாடுகின்ற ஆசையும் எண்ணமுமல்லாமல் உன்னுடைய இரண்டு திருவடித்தாமரைகளையும் (சிரசின்மேல) சூட்டிக்கொள்வதற்காகப் பாக்கியஞ்செய்யாத சங்கடம்மிகுந்த அடியேன் பக்கத்திலிருந்து பார்வதாதேவியார் வாழ்த்துசசொல்லி ஏத்தும்படியாக நடிக்கின்ற ஆநந்தக் கூத்தை அடியேனுக்குக் காட்டி ஆண்டுகொள்ளுதல் உன்னுடைய திருவருளுக்கு அழகாகும். (எ-று.)

## மூன்றாவது
# கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடங்கிய சிவனே யடைக்கலம்

(பொ ரை) தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைய அதிலிருந்தும் உண்டான ஆலகாலவிஷத்தை அழகியகழுத்தில் இருக்கச்செய்தசிவபெருமானே! நான்உன்னை அடைக்கலமடைந்தேன்,

அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக்காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுணின்னடைக்கலம்

(பொ - ரை) எல்லாவற்றையும் அடக்கும் தொழிலில் வல்லமையுடைய கொல்லுந் தொழிலைச் சுபாவமாகப்படைத்திருக்கும் எமனைக்காலால் உதைத்து அடக்கிய கடவுளே! நான் உன்னை அடைக்கல

உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்
திடக்கையி லடக்கிய விரைவநின் னடைக்கலம்

(பொ - ரை) எல்லா உலகங்களையும் படைத்திருக்கின்ற பிரமதேவனது தலையைக்கிள்ளி இடதுகையில் தாங்கியிருக்கின்ற தலைவனே! நான் உன்னை அடைக்கலமடைந்தேன்;

செய்யபொன் னம்பலச் செல்வநின் னடைக்கலம்

(பொ - ரை) செவந்த பொன்னம்பலத்திலிருக்கும் செல்வனே! நான் உன்னை அடைக்கல மடைந்தேன்;

ஐயநின் னடைக்கல மடியநின் னடைக்கலம்

(பொ - ரை) ஐயனே! (எனக்கு வேறோர்துணை யில்லாமையால்) அடியேனாகிய நான் உன்னை அடைக்கல மடைந்தேன்;

மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருளறிய வழக்குறு மனனும்
ஆணவமலத் துதித் தலைந்தலைந் திடு
நிணைவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு மழுக்கறு மிவரும் பொச்சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகலுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் பணிப்பும்
முக்குண மடமையு மைம்பொறி முயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரொனுங் குருகுவிட் டோடுங் குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்

கொழுந்தசை மேய்ந்து மெழுக்குவிழுங் குடிலைச்
செழும்பெழு வுதிரச் சுறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற் கோணிகைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தைப்
புலராக் கவலை விலைமரப் பொதும்பை
ஆசைக்கயிற்றி லாடும்பம் பரத்தை
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக்காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்கு
சாமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக்கரைசேர் கெடுமரக் கலத்தை
இருவினை வியங்கொடு மியங்குபுற்கலனை
நடுவன் வந்தழைத்திட நடுங்கிடும்யாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
னடிமலர்க்கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுஞ்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யுடைக்கல மடைக்கலம்

மறையவா தில்லை மன்றுணின்றாடிக்
கருணைமொண்டலையெறி கடவுளேயடைக்கலம
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேததப்
பாசிழைக்கொடியொடு பரிந்தருள்புரியும்
எமபெருமானின னிணையடிகசப்பயம
அம்பலத்தரசே யடைக்கலமுனகசே.

(பொ-ரை) மனம்போகும் வழியிலேயேபோய் என்னை அலைத்து நடுகின்ற கனவுபோலொதத இந்தவாழ்வும், உயர்ந்த பொருள்களை ஆராய்ந்தறியாத குற்றம்பொருந்திய மனமும், ஆணவம என்கிற மலததில் பிறந்து அதிலேயே பூசிக்கொணடு தவழ்கின்ற நிலத்தில் இருசகும் புழுவைப்போல நெளிகின்ற சிந்தையும், மிகுந்த பாவமும், (பலபேர்களால்) பழிக்கப்படுகின்ற எண்ணமும், தவறிப்போவதும், பொறுமையும், மறதியும், கவடும், பொய்யும், குறியும் மிகுந்த கோபத்தால் உண்டாகும் விரோதமும், கொலையும், இழிவான அஞ்ஞானமும், அசசமும், நிசசயமும், நடுக்கமும், இராசத, தாமத, சாததுவீக குணங்களினுடைய அறிவில்லாமையும், மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறிகளின் வாசமும், தரிததிரமும, நோயும், (ஆகிய இவைகளெல்லாம் கூடி) வருத்தப்படுத்துகின்ற தேகத்தை, உயிர் என்கிற பக்ஷியானது விட்டு விட்டு ஓடிப்போகும் கூண்டை, எலும்பாலும் நரம்பாலும் கட்டப்பட்டதும் தோலால் பூசப்பட்டதுமாகிய ஒழுகும் குடிசையை செழுமையான உதிரத்தையுடைய சிறிய புழுக்கள் நெளியும் கூண்டை, மலம் நிறைந்த பாண்டத்தை, புலால் சரக்கைக் கொண்டிருக்கும் கூடையை, ஒழியாத துன்பங கொடுக்கும் சோற்றுக்குழியை, கொலைசெய்வதற்குரிய பல ஆயுதங களும் சேர்ந்திருக்கும் கூண்டை, மிகுந்த வெறுப்பையுடைய பலவகைப்பட்ட வினைசசரக்குகளாகிய குப்பையை, கோள்சொல்லுதல் என்னும் சரக்குகள் சிந்துகின்ற துவாரம் பொருந்திய கோணியை,

கோபமாகிய நெருப்பை மூட்டுகின்ற கொல்லனுடைய (உலைக்களத்தி லுள்ள துருத்திபோன்ற) துருத்தியை,சத்த,பரிச.ரூப,ரச,கந்தம் என்கிற ஐம்புலன்கள் என்னும் பக்ஷிகள் குடிகொள்ளுகின்ற கூண்டை, நீங்காத வியசனமாகிய மரங்கள் நெருங்கியிருக்கின்ற சோலையை, ஆசையென்கிற கயிற்றினால் ஆட்டப்படும் பம்பரத்தை, காசுக்கும், பணத்துக்கும சுழலாநிற்கும் காற்றாடியை, மனிதர்களுடைய வினைக்குத் தகுந்தபடி மறைந்து மறைந்து வருகின்ற சக்கரத்தை, கொடிய வெளியில் உருட்டிய தேர்க்காலை பாவமாகிய சரக்குகளோடு ஞானம் என்கிற சமுத்திரத்தில் புகுந்து காமமாகிய காற்றானது எழுந்து அலைக்கக்கெட்ட வழியாகிய கரையில் சேர்கின்ற கொடியகப்பலை, நல்வினை, தீவினை என்றுசொல்லும் இருவினை விலங்குடனே சஞ்சரிக்கும் யானை, எமனானவன் வந்து கூப்பிடும்போது பயப்படுகின்ற (மேலேசொன்ன இலட்சணங்களோடு கூடின) தேகத்தைப் பிணமாகச் சீழே தள்ளிப்போட்டு உயிராகிய நான் வெளியில் புறப்பட்டுப் போகும்பொழுது உன்னுடைய திருவடித்தாமரைகளில் அபயமடையும்பொருட்டு உன்னையடைக்கலமடைதல் வேண்டும் ஆகாயத்திலுள்ள மேககர்ச்சனைபோல் ஆர்ப்பரித்து எழுகின்ற கடியநடையையுடைய வெள்ளிய ரிஷபவாகனரூடராகிய கடவுளே! நான் உன் அடைக்கலம். இமைக்காத பார்வையையுடைய தலைவனே! நான் உன் அடைக்கலம். அன்பர்களுக்கு எளியவனே, அடைக்கலம்! அடைக்கலம்!! மூவாயிரம் பிராமணர்கள் வாழ்கின்ற சிதம்பரத்தின்கண் சிற்றம்பலத்தில் திருநடனஞ்செய்து திருவருளாகிய அலையை வீசுகின்ற தெய்வக்கடலே! நான உன்னடைக்கலம், தேவர்களும், முனிவர்களும் வந்திருந்து துதிசெய்யும்படி பார்வதாதேவியோடும் எழுந்தருளியிருந்து உயிர்களுக்கு அருள்செய்கின்ற எம்பெருமானே! உன்னுடைய இரண்டு திருவடிகளுக்கும் அபயமானேன் அம்பலத்திற்குத் தலைவனே! (நான் வேறொரு தெய்வத்தினிடத்தில் அடைக்கலமடையாமல்) உன்னிடத்திலேயே அடைக்கலமடைந்தேன், (ஆகையால் நீயே என்னை ஆண்டருள்செய்யவேண்டும்) (எ-று)

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை-20.



## நான்காவது
# கோயிற்றிருவகவல்.

திருமாற் பயந்த திசைமுகனமைத்து
வருமேழ்பிறவியு மானிடத்துதித்து
மலைமகள்கோமான் மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானுடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமாக்க டெளிவுறக்கேண்மின்

(பொ - ரை) விஷ்ணுவினால் (புத்திரனாகப்) பெறப்பட்ட பிரம தேவன் சிருஷ்டித்து வருகின்ற ஏழு சன்மங்களும் மானிட சென்மத்திலேயே பிறந்து, பார்வதாதேவியின் தலைவனாகிய சிவபெருமானது திருவடிகளை வணங்கி விளங்குகின்ற சிவபதவியை யடையாமல் வீணாகப் பெண்களைப்பார்த்துப் புகழ்ந்து கொண்டாடுகின்ற மனிதர்களுக்கெல்லாம் நான் (சில விஷயங்களை எடுத்துச்சொல்வேன். அப்படி நான் சொல்லும் விஷயங்களை) ஓ மனிதர்களே! நீங்கள் தெளிவாகக்கேளுங்கள், (அவை எவையென்றால் பெண்களினுடைய)

முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும்
உள்ளங்காலைப் பஞ்செனவுரைத்தும்
வெள்ளெலும்பாலே மேவியகணைக்கால்
துள்ளும்வராலெனச் சொல்லித்துதித்தும்
தசையுமெலும்புந் தக்கபுன்குறங்கை
இசையுங்கதலித் தண்டெனவியப்பியும்

நெடுமுடங்கி நின்றிடுமிடைபைக்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் வழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் சீப்பாய்ந்தேறி
உகிராற்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்

(பொ-ரை) முள்ளிலும், கல்லிலும் நடக்கின்ற உள்ளங்காலை செம பஞ்சு என்று சொல்லியும், வெள்ளை எலும்பினால் ஆகிய கணைக்காலை யாரல்மீனென்று! சொல்லியும், சதையும், எலும்பும் தகுந்த வாறாக அமைந்திருக்கின்ற அற்பத்துடையை இசைந்த வாழைத்தண்டென்று சொல்லியும், நீண்ட உடம்புகளை யெல்லாம் சுமந்துகொண்டிருக்கும் இடுப்பை உடுக்கை யென்றும், பிடியளவான தென்றும் சொல்லிப் புகழ்ந்தும், மலமும், நீரும், கொழுப்பும் அலைந்துகொண்டிருக்கும் வயிற்றினை ஆலிலையென்று சொல்லியும், சிலந்திப்புற்றுப் போல் வெளிப்பட்டு பார்வைக்கு முன்னே எழுந்து குவிந்து பரந்து சிவடிந்து நகத்தாற் கீற உலர்ந்து உள்ளே உருகிப் பலபேர் சிரிக்கும் படி (சிலகாலத்திற்குள்) நீண்டு வற்றிப்போகின்ற முலைகளைப் பார்த்து தாமரைமொக்கு என்று சொல்லியும், அழிகின்றகாமத்தால் குருடாயிருக்கிறவர்களுக்கே நான் எடுத்துச் சொல்லுவேன். (இப்படி சொன்னதினால் மோனத்தில் உள்ளவர்களுக்கு நான் சொல்லவர வில்லை என்பது கருத்து.)

நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டவும்பிசையவு முதவியிங்கியற்றும்

அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தைப்
பாரினிலினியகமு கெனப்பகர்ந்தும்
வெப்புமூத்தையு மேவியவாயைத்
துப்புமுருக்கின் றாய்மலரென்றும்
அன்னமுங்கரியு மசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும்
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும்
கூரியமூக்கைக் குமிழெனக்கூறியும்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குறும்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டின் வளமெனவாழ்த்தியும்
கையுமெண்ணெயுங் கலவாதொழியில்
வெய்யவதரும் பேனும்விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண்முகிலென்றும்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகவாசல்

(பொ-ரை) நீட்டுதற்கும், முடக்குதற்கும், மிகுந்த பொருள்களை வாங்குதற்கும், ஊட்டுதற்கும், பிசைவதற்கும், உதவியாய் (அக்காரியங்களை யெல்லாம்) இவ்விடத்தில் செய்கின்ற அழகிய கைகளைப் பார்த்துக் காந்தட்பூ வென்று சொல்லியும், வேர்வையும் அழுக்குஞ் சேர்ந்துள்ள கழுத்தை பாக்குமரமென்று சொல்லியும், வெப்பு நாற்றமும், ஊத்தையுமுள்ள வாயை பவழமென்றும், முருக்கம்பூவென்றும் சொல்

லியும், சோற்றையுங் கறியையும் மென்று தின்னும் பற்களை முத்தென்றுசொல்லியும், சலமும், சளியும், இருந்திருந்து ஒழுகுகின்ற கூர்மையான மூக்கைக் குமிழம்பூ வென்று சொல்லியும், சலமும் பீளையும் என்றும் வந்தடையும் கண்களைப் பார்த்து நீலோற்பலமலர் என்று சொல்லியும், குறும்பி, குடிகொண்டிருக்குங் காதை வளமானவள்ளைத்தண்டென்று சொல்லியும், கையில் குழைப்பிய எண்ணெயைத் தடவா விட்டால் கொடிய சுண்டுகளும், பேன்களும் உண்டாகும்படி தலையோட்டில் முளைத்திருக்கும் சிக்கோடு கூடிய மயிரை மேகக் கூட்டமென்று சொல்லியும் (இப்படிப்பட்ட உவமானச்) சொற்களால் பல வகையாகப் புகழ்ந்து நீங்கள் விரும்பிப்போகின்ற நரகவாசலானது!

தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயும்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடைவழி தொளைபெறுவாசல்
எண்சாணுடம்பு மிழியும் பெருவழி
மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்
நச்சிக்காமுக நாய்தானென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயில்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் சவலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடவையைமூடி
உண்ணீர்பாயு மோசைச்செழும்பின்
மால்கொண்டறியா மாந்தர்புகும்வழி
நோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேறுஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி

மலஞ்சொரிந்திழியும் வாசற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாசல்

(பொ-ரை) தோலும், மாமிசமும் சேர்ந்து சீவழிகின்ற காமப்பாழியாம்; கருக்கள் உண்டாகத்தக்க கழனியாம்; தூமையொழுகுகின்ற வழியாம்; தொல்லையையுடைய வாசலாம்; எட்டுஜாண் அளவுள்ள உடம்பானது வெளிப்படும்படியான பெரிய வழியாம்; உலகத்தில் காமத்தை ஒழிக்கின்ற மறைவிடமாம்; அதைவிரும்பி ஆசையுடையவனு யிருக்கத்தக்க மத்தியிலுள்ள பெரியவாசலாம்; சடையில் சந்திரனைத்தரித்த சிவபெருமானுடைய திருவருளில்லாதவர்கள் இருந்துதிரிகின்ற சவலையான பெரிய வழியாம்; இது புண்ணாகுமென்று அதைப்புடவையால்மூடவும் உள்ளிருந்துஞ் சலத்தைக்கக்குகின்ற செவந்தபுண்ணும்; சிவபெருமானது திருவருளை அறியாதவர்கள் மயக்கங்கொண்டு புகுகின்ற வழியாம்; நீங்காத காமநோயைத் தம்மிடத்தில் பெற்றிருக்கும் அற்பர்கள் போகின்றவழியாம்; தர்க்கத்தையும், செருக்கையுமடைந்த காமவான்களால் அடையப்படும் சிறிய படுகுழியாம்; பெண்ணும் ஆணும் பிறப்பதற்கு இடமான பெரிய வழியாம்; மலமானது வெளிப்பட்டிழிகின்ற வாசலுக்குச் சமீபமாக யிருந்து சலம் வெளிப்பட்டிழியும் தண்ணீர் வாசலாம் (ஆகையால் இப்படிப்பட்டதன்மையதாகிய)

இத்தைநீங்க ளினிதெனவேண்டா
பச்சிலையிடினும் பத்தர்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முந்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

(பொ-ரை) இந்தக் காமக்குழியை உலகத்தவர்களே! நீங்கள் சுகமுடையதென்று நினைத்து அந்த வழியில் செல்லவேண்டாம். (அப்படி செலவதில் மோக்ஷசாதனத்திற்குக் கெடுதி யுண்டாகும் ஆகையால் மேல்சொன்னபடி யெல்லாம்) போகத்தைக் கொடுக்கும் பெண்களைப் புகழ்வதைவிட்டு அன்பர்கள் பசிய இலையைப்போட்டுப் பூசித்தாலும் அவர்களுக்கு மனமிரங்கிச் சிவபதவியான மோக்ஷத்தைக்கொடுப்பவனும் மோட்சத்திற்குத் தலைவனும், அழியாதமுதல்வனும், அண்டரண்டங்களையும் ஈரேழுபதினான்கு உலகங்களையும், சிருஷ்டித்த காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பர நாதனும் (தன்னைப் போல் வேறொரு தெய்வமில்லாமல தானே தெய்வமாயிருக்கும்) தன்னந்தனியனும் ஆகிய சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் வணங்குங்கள். (அப்படி வணங்குவீராஜல் அவன் உங்களுக்குப் பிறவாநெறியைக் கொடுப்பான் என்பது குறிப்பு.)

# திருவேகம்பமாலை.

அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன
மறந்தானறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற் [னே.
றிறந்தான்பெருமையை என்சொல்லுவேன்கச்சி யேகம்ப

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! வீட்டை நீங்கிய துறவியானவன் தருமம் செய்பவனைப்பார்க்கிலும் கோடிபங்கு உயர்ந்தவனாவான்; மனத்தைநீங்கிய துறவி (முன் வீட்டை நீங்கியவனைப் பார்க்கிலும்) நூறுகோடிபங் கதிகமாவான்

(இப்படியிருக்கையில்) வஞ்சனை முழுமையும் நீங்கும்படி கற்று ஞானத்தோடிருந்து இருவினைகளும் நீங்கி மனமிறந்த ஞானியின் பெருமையை நான் எவ்வளவென்று சொல்லுவேன். (எ-று)

அந்த மூவர்களுடைய செய்கையில் சிறிதேனும் என்னிடத்தில் இல்லாமையால் நான் உஜ்ஜீவிப்பது அருமை. ஆகையால் நீயே முன்னின்று என்னைப் பாதுகாத்தருள்வாய் என்பது குறிப்பு. (க)

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுந் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற்சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார்மயானங் குறுகியப்பா
லெட்டியடிவைப்பரோ விறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! சேர்ந்து அணைப்பதற்குரிய ஸ்திரீகளும், பிள்ளைகளும், வெட்டிமுறித்துக் கீழே தள்ளிவிடுகின்ற மரத்தைப்போல என்னுடைய உடம்பை எமனென்பவன் தள்ளிவிட்டால், (சுற்றத்தார்களுடனேகூடி) பறைகொட்டிச் சத்தித்து சுடுகாடு சேர்ந்தும் அழுவார்கள். (அப்படி அழுவதே தவிர அச்சுடுகாட்டுக்கு) அப்புறத்தில் ஓரடியாயினும் எட்டிவைக்கக் கூடுமோ? கூடாது. (எ-று)

பெண்டு, பிள்ளைகள் முதலியயாவரும் எனக்குத் துணையல்ல, நீயே துணையாம். ஆகையால் என்னைக் காப்பாற்றி யருள்செய்வாய் என்பதாம். (உ)

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத்
தப்புறந்தன்னி லசையாமன்முன்வைத் தயல்வளவி
லொப்புடன்சென்று துயினீத்துப்பின்வந் துறங்குவளை
யெப்படிநானம்புவே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! (விவாககாலமுதல்) கையைப்பிடிப்பதற்குச சுவாதீனமுடைய புருஷனானவன் தூங்கும்போது (தன்மேலிருக்கும்) அவனுடைய கையை எடுத்து அசையாதபடி அப்புறத்தில் வைத்து வேறே ஒரு வீட்டுக்குப்போய் (களவியலின் லட்சணத்தை அநுபவித்து) சோரநாயகனிடத்திலிருந்து நித்திரைசெய்து பிறகு அவனிடத்திற்கு வந்து (முன்படுத்திருந்ததுபோலவே படுத்துக்கொண்டு) தூங்குங் குணமுடைய பெண்களை நான் எப்படி துணையானவர்கள் என்று நம்புவேன். (எ-று)

இப்படி சோரத்தன்மை வாய்த்தும் வாய்க்காமலும் இருக்கும் பெண்கள் ஆசையால் படுகுழியில் வீழ்ந்தழிவதே நிச்சயமாகையால் அவர்களை நான் விரும்பேன் என்பது கருத்து. (௱)

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவை நன்னார் தப்பினாற்
றன்னாலுமாடிச் சலித்திடுமோவந்தத் தன்மையைப்போ
லுன்னாலியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா
லென்னாலிங் காவதுண்டோ விறைவா கச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நல்ல நாரினால் இணைக்கப்பட்டிருக்கிற சூத்திரத்தையுடைய பொம்மையானது அந்த நார் அறுந்தாலும் தவறினாலும் தானே சற்றுநேரம் ஆடிப்பின் விசையடங்க நின்றுவிடுவதுபோல, உன்னால் நானும் (உலகத்தில்) திரிகின்றேனேயொழிய நான் உன்னைப் பிரியும் பக்ஷத்தில் என்னால் ஆகுங்காரியம் ஏதாயினும் ஒன்று உண்டோ? இல்லை. (எ-று)

எல்லாஞ் சிவன்செயலே யென்பதுகருத்து. யேனென்றால் சிவன் அந்தந்த உயிர்களுக்கு உள்ளிருந்து அவ்வவ்வுயிர்களை ஆட்டுகின்றான் ஆகையால்,

சிவன் ஆட்ட உயிர்கள் ஆடுகின்றன என்பதற்கு உதாரணம்:—

"ஆட்டுவித்தா லாரொருவ ராடாதாரே
யடக்குவித்தா லாரொருவ ரடங்காதாரே
யோட்டுவித்தா லாரொருவ ரோடாதாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடாதாரே
பணிவித்தா லாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தா லாரொருவர் காணுதாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே"

என்னும் அப்பர்சுவாமிகள் திருவாக்கானுணர்க. (ச)

நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமு மைந்தரும்வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம்வெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே! வீடும், பொன்னும், பெண்சாதியும், சாதியாரும், பிள்ளைகளும், வாழ்க்கையும், அழகிய உடம்பும் ஆகிய இவை எல்லாம் வெளியில் வேஷங்காட்டி மயக்கத்தை யுண்டுபண்ணத்தக்கவைகளே, (ஆகையால் அம்மயக்கத்தை நீக்கி அருள்செய்யத்தக்கவை (நல்லவர்களுடைய சினேகமும், உன்னுடைய பூசையில் விருப்பமும், ஞானமுமே அல்லாமல் வேறு உறுதிநிலையுண்டோ? இல்லை. (எ-று)

உன்னுடைய அருளைக்கொடுப்பவை நல்லாரிணக்கம் முதலியவையாம், மயக்கத்தைத் தருபவை அகம், பொருள் முதலியவையாம். ஆகையால் உன்னுடைய அருளைக் கொடுப்பவைகளே எனக்கு வேண்டும் என்பது கருத்து. (ரு)

பொல்லாதவனெறி நில்லாதவனைம் புலன்கடமை
வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற்
செல்லாதவனுண்மை சொல்லாதவனின் திருவடிக்கன்
பில்லாதவன்மண்ணி லேன்பிறந்தேன்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே! மிகவும் கொடியனுகவும், சன்மார்க்கத்தில் வாசஞ்செய்யாதவனுகவும், சத்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களாகிய ஐம்புலன்களை அடக்காதவனுகவும், ஞானநூல்களைக் கற்றுக்கொள்ளாதவனுகவும், உன்னுடைய திருத்தொண்டர் குழாத்துள்கூடி நட்பாயிராதவனுகவும், என்னதீங்கு நேர்ந்தாலும் பேசவேண்டிய உண்மையைப் பேசாதவனுகவும், உன்னுடைய திருவடிகளிடத்தில் அன்பில்லாதவனுகவும் இவ்வுலகத்தினிடத்தில் நான் பிறந்தது எற்றுக்கோ? அறியேன்.

ஆன்மாவானது ஒரு தேகத்தோடு கூடி உலகத்தினிடமாக வருவது மேற்சொன்ன சன்மார்க்கமுதலியவைகளை அடைவதற்கேயாம். அப்படி நான் அந்தச் சன்மார்க்கமுதலியவைகளை அடையாமையால் இந்தச் சென்மத்தால் எனக்கோர் பிரயோசனமும் இல்லை ஆகையால் கழிந்த நாள்போக இனியேனும் எனக்கு நீயே அருளளித்து ஆளவேண்டும் என்பது கருத்து. (௬)

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங்குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! உயிர்கள் உலகத்தில் பிறக்கும்போதே செல்வத்தைக்கொண்டு

வந்ததில்லை, அப்படிபிறந்து சிலகாலம் வாழ்ந்து சாகும்போதும் அதைத்தங்களோடு கூடக்கொண்டு போவதுமில்லை ஆகையால், இவ்விரண்டிற்கும் மத்தியில் கிடைக்கும் இந்தச் செல்வத்தைச் சிவபெருமானால்கொடுக்கப்பட்டதாமென்றுநினைத்து இரப்போர்க்குக் கொடுக்காமலே வாணாளை வீணாகக் கழித்துச் சாகின்ற குலாமருக்கு நான் என்ன சொல்லுவேன். (எ-று)

நாம் உலகத்தினிடமாகப்பிறந்து செல்வம்கிடைத்தபோது அப்பிறப்பினா லடையத்தக்க பயனாகிய தர்மத்தைச் செய்யவேண்டும் என்பது கருத்து. (எ)

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையாவிசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசாரமிப் பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம் வைத்தாயிறைவா கச்சியேகம்பனே.

(பொ - ரை) என்னுடையதலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! எனக்கு உணவைப்பற்றிய துககம் முன்னே உண்டாகும். அதுதீர்ந்தால் பொருளைப்பற்றிய துக்கமாம். அதுவும் நீங்குமானால் பெண்கள்மேல் மனம் செல்லுதலாகிய துக்கமாம். இப்படி பலநாளும் துக்கப்படும்படியாக எவ்வளவு வருத்தத்தை எனக்குக் கூட்டிவைத்தாய். அவ்வருத்தங்களை யெல்லாம் நீக்கியருள்வதென்றோ! (எ-று) (அ)

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நில்லாப்பிழையு நினையாப்பிழையு நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நான் ஞானநூல்களைக் கற்காதகுற்றத்தையும் அதைச் சிந்தி

க்காத குற்றத்தையும், மனமிளகிக் கரைந்து தன்வசமற்றிராத குற்றத்தையும், அப்படி இருப்பதற்கான மார்க்கத்தை எண்ணிப்பாராத குற்றத்தையும், உன்னுடைய பஞ்சாட்சரத்தை வாயாற்சொல்லாத குற்றத்தையும், அவற்றைச சூக்குமைவாக்கால் தியானிக்காத குற்றத்தையும், இன்னுமுள்ள வேறு குற்றங்களையும் பொறுத்துத் திருவருள் செய்யவேண்டும். (எ-று) (கூ)

மாயநட்போரையு மாயாமலமெனு மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன்சென்றுபின் றாதையைக்கூடிப்பின் றாயைமறந்
தேயுமதேநிட்டை யென்றானெழிற் கச்சியேகம்பனே.

(பொ-ரை) அழகினையுடைய காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! (என்னை அடிமைகொண்டு ஆளுதற்பொருட்டு எழுந்தருளிவந்த மௌனகுரியன்) வஞ்சனையையுடைய சிநேகரையும் ஒழியாத ஆணவமென்னும் பெண்களையும் நீக்கித்துறவறம் பூண்டு உண்மையருளாகிய சத்தியோடு கூடிச்சென்று பிறகு தகப்பனாகிய சிவபிரானைக்கூடிப் பிறகு தாயைமரந்து பொருந்தி யிருப்பதே மௌனநிஷ்டையாகும் என்று உபதேசித்தான். (எ-று)

ஆனாலும் என்னை அவ்வுபதேச வழியில் நிறுத்தி அதனைக்கூடும்படி காத்து ரக்ஷிக்கவேண்டியவன் நீயே என்பது குறிப்பு.

தாயுடன்கூடி என்றது—குண்டலி சத்தியோடுசென்று சிவத்தினிடத்தைச்சேர்தலை. சிவத்தைச் சேர்ந்தபிறகு குண்டலி தோன்றவில்லையாகையால் "தாயை மறந்து" என்றும் கூறினார். (ய)

வரிக்கோலவேல்விழி யாரனுராக மயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத் தஞ்சுஞ்சொலேன் றமியேனுடல்

1718(6543)



நரிக்கோ கழுகு பருந்தினுக்கோவெய்ய நாய்தனக்கோ
வெரிக்கோவினை யெதுக்கோ விறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! அழகிய கண்களுடைய பெண்களுடைய மாய்கையில் அகப்பட்டு அவர்களைப் புகழ்வேனே யொழிய உனக்குரிய பஞ்சாக்ஷரதியானத்தை ஒருபோதுஞ் செய்தேனில்லை. ஆகையால் அடியேனுடையதேகமானது நரிக்கு இரையாகுமோ? கழுகினுக்கு இரையாகுமோ? பருந்தினுக்கு இரையாகுமோ? கொடிய நாய்க்கு இரையாகுமோ? நான் அறியேன். (எ-று) (கக)

காதென் றுமூக்கென் று கண்ணென் றுகாட்டியென் கண்ணெதிரே
மாதென் றுசொல்லி வருமாயைதன்னை மறலிவிட்ட
தூதென்றெண்ணுமற் சுகமென் றுநாடும்த் துர்ப்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! காதுகளையும், மூக்கையும், கண்களையும் காட்டி என் கண்முன்னே நான்தான் பெண்என்று சொல்லிக்கொண்டு வரும்மாயையை எமனால்விடப்பட்ட தூதென்று நினைக்காமல் சுகந் தரத்தக்கதாமென்று எண்ணி மயங்கும் என்னுடையதுர்புத்தியை என்னவென்று எடுத்துச்சொல்வேன். (எ-று)

பெண்ணாசை கொடிதாயினும் அதையே நன்மையுடையதாக எண்ணும் என்புத்தியைச் சீர்திருத்தி ஆட்கொள்ளவேண்டும் என்பது கருத்து. (கஉ)

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! (எனக்கு) ஊர்துணையல்ல; சாதியார் துணையல்ல; தாய்தகப்பன்மாரும் துணையல்ல; பெண்சாதிதுணையல்ல; பிள்ளைகள் துணையல்ல; சிறப்புதுணையல்ல; பொருள்துணையல்ல; இன்னும் ஊரிலுள்ளவருந்துணையல்ல; (ஆகையால் இவைகள்நீங்கிய) உன்னுடையதிருவடிகளே எனக்குத் துணையாகும் ஆகையால் அந்தத் திருவடிகளை எனக்குக் கொடுத்தருளவேண்டும். (எ-று) (௧௫)

சீறும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரைகண் டிலேனிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! கொடுமைமிகுந்த தீவினையே பெண்ணுருபங்கொண்டு திரண்டுருண்ட முலையும், சதையுமாகவர, அந்தப் பெண்ணுருவில ஒரு அங்கமாகவிருக்கும் மலமும் இரத்தமும் இழிகின்ற பெரிய குழியைவிட்டு ஏறி வெளியேவரும்படியான கரையைக்காணவில்லையே? ஈதென்னவிபரீதமோ அறியேன்! (எ-று)

இச்செய்யுள் பெண்ணாசையினின்றும் நீங்கப் பலவகையான பிரயத்தனப்பட்டும் என்றால் முடியவில்லை, ஆகையால் நீயே என்னை அதினின்றும் நீக்கியருளல் வேண்டும் என்பதை விளக்குகின்றது.

பொருளுடையோரை செயலினும்வீரைப் போர்க்களத்தூ
டெருளுடையோரை முகத்தினுந்தேர்ந்து தெளிவதுபோ
லருளுடையோரைத் தவதிற்குணத்தி லருள்ளன்பி
லிருளறுசொல்லினுங் காணத்தகுங்கச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! செல்வமுடையவர்களை அவர்களுடைய செய்கைகளாலும்,

வீரத்தன்மையுடையவர்களை யுத்தத்தினாலும், தெளிந்த அறிவுடையோர்களை அவர்களுடைய முகக்குறியினாலும், இவர்செல்வமுடையவராக இருக்கலாம்; இவர் மகாபராக்கிரமத்தை யுடையவராக இருக்கலாம் என்று உணர்ந்து கொள்வதுபோல, இவர்கள் திருவருள் கிடைக்கப்பெற்றவர்கள் என்பதை அவர்களுடைய தவமேம்பாட்டாலும், நற்குணத்தாலும், மன்னுயிர்மேல் கடாட்ச வீட்சண்ணியமுள்ளமையாலும், இதோப சாரங்களாலும், இனியவசனங்களாலுந்தெரிந்துகொள்ளப்படும். (எ-று)

இங்ஙனமிருத்தலால் நான் மேற்கூறிப்போந்த பலவகை நற்குணங்களில் ஒன்றிற் சிறிதேனும் இல்லாதவனாக விருக்கின்றேன் என்பதை நீயேயறிவாய் ஆகையால் நான் அப்படிப்பட்டவனாக இருந்தாலும் திருவருள்செய்யவேண்டியவன் நீயேயாம் என்பது கருத்து.

இதனைச், "சிவன்செயலாலே யாதும் வரும்" என மேலோர் கூறிய வாக்கியத்தானறிக. (கரு)

பருத்திப் பொதியினைப் போலேவயி றுபருக்கத் தங்க
டுருத்திக்க றுசுவை போடுகின் றார் துறந் தோர்தமக்கு
வருத்திய முதிடமாட்டா ரவரையிம் மாநிலத்தி
லிருத்திக்கொண் டேயிருந் தாயிறைவா கச்சி யேகம்பனே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! பருத்திப்பஞ்சின் சுமையைப்போல் வயிறானது பெருக்கும்படி அவ்வயிற்றில் அறுசுவையோடு கூடியபண்டங்களைப்போட் டடைக்கின்றார்களே யொழிய, இல்லறத்தினின்றும் நீங்கிய துறவிகளுக்குப் போசன மளிக்கமாட்டார்கள், ஆகையால் அப்படிப்பட்ட உலோபிகளை இவ்வுலகத்தின் கண் ஏன் வைத்திருக்கின்றாய். (எ-று)

சீக்கிரத்தில் அவர்கள் நகரத்துக்குச் செல்வது அவசியமாயிற்றே என்பது குறிப்பு.

உலகத்தார் தாங்கள் தின்னுவதையே பார்க்கிறார்களே யொழிய துறவிகளுக்கு அமுதளிக்க விரும்பார் என்பது கருத்து.

அறுசுவை என்றது - கைப்பு, புளிப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்பன. (கசு)

பொல்லாவிருளகற் றுங்கதிர்கூகைகையென் புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடு மாறொக்குமே யறிவோருளத்தில்
வல்லா ரறிவா ரறியார் தமக்கு மயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! ஞானனந்தப் பெருவெள்ளமானது கொடிய இருட்டினை சேதித்துத் தள்ளுஞ் சூரியனைவன் கூகை என்கிற ஒருவகைப்பட்சியின் கண்ணுக்கு இருளாயிருப்பதைப் போலத் (தங்கள் தங்கள் மலமயக்கத்திற்கு ஈடாகத்தெரிந்துகொள்ளக் கூடியதாகவும் கூடாததாகவும் இருக்கும்) ஏனென்றால், ஞானமுதிர்ச்சியுள்ளார் அறிவார், அந்தமுதிர்ச்சியில்லார் மயங்குவார் ஆகையால் இவையெல்லாம் அகக்கண் புறக்கண்களது விபரீத வுணர்ச்சியாலேயாம். (எ-று) (கஎ)

வாதுக்குச்சண்டைக்குப் போவார்வருவர் வழக்குரைப்பர்
தீதுக்குதவியுஞ் செய்திடுவர் தினந்தேடியொன்று
மாதுக்களித்து மயங்கிடுவார் விதிமாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தா ரிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே இவ்வுலகத்தி லுள்ளார் வாதாடவும், சண்டைசெய்யவும், வழக்கிடவும்போவதும்வருவதுமாக யிருப்பார்,

தீயகாரியங்களுக்கு உபகாரியமுஞ்செய்வார் இவர்களுடைய ஆயுள் முடியும் வரைக்கும் தினந்தோறும் பொருள்தேடி ஒருபெண்ணுக்குக் கொடுத்தழித்து மயங்காநிற்பர். ஆகையால்; இவர்கள் இவ்வுலகத்தில் பிறந்தது எற்றுக்கோ; அறியேன். (எ-று)

இவ்வுலகத்தார் பிறந்ததொன்றுக்காக அதைவிட்டு வாணாளை வீணாளாக்கிப் பெண்கள் மயக்கத்தினால் அலைகின்றார்கள் என்பது கருத்து. (கஅ)

ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்ப ருற்றுப்பெற்ற
தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்க
ளாயார்பிறர்க்குப காரஞ்செயார்தம்மைபண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்ன போயென்னகாண் கச்சிஏகம்பனே.

(பொ-ரை) காஞ்சிபுரத்தில எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! (உலகத்தில் சிலர்) எப்பொழுதும் பொய்யே பேசுவார், பெரியோர்களை நிந்தனை செய்வார்கள், கஷ்டப்பட்டுப் பெற்றதாயைப் பலவகையாக வைவார்கள், அநேகமாகக் கொடிய தீமைகளைச்செய்வார்கள், சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்யமாட்டார்கள், அந்நியர்களுக்கு உபகாரஞ்செய்யார்கள், தம்மைவந்து அடுத்து யாசித்தவர்களுக்கு ஒருபொருளையும் கொடார்கள். அப்படிப்பட்டவர்கள் இவ்வுலகத்தில் இருந்தாலென்ன பயன் போனால் என்னநஷ்டம். (எ-று) தாய்கஷ்டத்தோடு பெற்றவள் என்பதை;

"தக்கதசமதி தாயொடு தான்படுந்
துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்"

என்று மாணிக்கவாசகப்பிரான் அருளிச்செய்தமையானறிக. ()

அப்பென்றும் வெண்மைய தாயினுமாங்கந் நிலத்தியல்பால்
தப்பின்றியேகுண வேற்றுமைதான்பல சார்தலினாற்

செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ள சீவனிலு
மிப்படியேநிற்ப னெந்தைபிரான் கச்சியேகம்பனே.

(பொ-ரை) எனக்குத் தந்தையொப்பானும், எம்பெருமானுமாகிய காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரேஸ்வரனை கடவுள் ஜலமானது எப்பொழுதும் வெண்மையுடையதாக யிருந்தாலும்அது தங்கியிருக்கின்ற நிலங்களின் வேறுபாட்டால் பலவகையான நிறங்களைப் பெருவதுபோல அபக்குவ ஆன்மாக்களிடத்தில் மறைவாகவும் பக்குவ ஆன்மாக்களிடத்தில் வெளிப்படையாகவும் இருப்பான். ()

ஆகையால் அவ்வெஞ் சிவபெருமானுடைய சர்வவியாபகத்திற்குக் குறைவின்னை என்பது குறிப்பு.

தண்ணீர் நிலவேறுபாட்டால் நிறபேதம் அடைகின்றது என்பதை;

"நண்ணீர் நிலநலத்தால் தக்கோர்குணங் கொடையால்
கண்ணீர்மைமாறுக் கருணையால்—பெண்ணீர்மை
கற்பழியாவாற்றுல் கடல்சூழ்ந்த வைகயத்துள்
அற்புதமா மென்றே யறி."

என்னும் ஔவையார் திருவாக்கானு முணர்க. (உ௰)

நாயாய்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந்
தாயார்வயிற்றி னரராய்ப்பிறந்துபின் சம்பன்னராய்க்
காயமரமும் வறளாங்குளமுங் கல்லாவுமென்ன
வீயாமனிதரை யேன்படைத்தாய் கச்சியேகம்பனே.

(பொ-ரை) காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நாய்ச்செனனம் மெடுத்தாலும் அந்த நாயானது நல்லவேட்டையாடல் செய்து (அதைவளர்ப்பவர்க்கும், மற்றவர்க்கும்) நன்மையை உண்டாக்கும். (அப்படியல்லாமல்) நரமனிதர்களாய்த் தாயார்

வயிற்றினின்றும் பிறந்து பிறகு செல்வமுடையவர்களாகிக் காயாத மரத்தைப்போலவும், ஜலமில்லாக் குளத்தைப்போலவும், கல்லால் செய்த பசுவைப்போலவும், அன்னியர்களுக்கு ஒரு பிரயோஜனத்தையும் உண்டுபண்ணா மனிதரை (தருமஞ்செய்யாதமனிதரை) நீ சிருஷ்டித்தது எற்றுக்கோ? அறியேன். (எ-று)

மானிடப்பிரவியிற் பிறந்தோர் மற்றோர் மனமகிழத் தருமஞ்செய்யவேண்டியது அத்தியாவசியமாயிருக்க அதைச் செய்யாதவர்களை நீ உண்டு பண்ணினது ஏனோ என்பது கருத்து.

தருமம் செய்யவேண்டியது அத்தியாவசியம் என்பதை;

"நின்றனநின்றன நில்லாவெனவுணர்ந்
தொன்றினவொன்றின வல்லேசெயிற்செய்க
சென்றனசென்றன வாழ்நாள்செறுத்துடன்
வந்ததுவந்தது கூற்று"

என்னும் நாலடியாரா னறிக. (உக)

ஆற்றிற்கறைத்த புளியாக்கிடாமலென் னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம் பற்றுமையா புரமூன்றெரித்துக்
கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய்குன்ற வில்லுடையா
யேற்றுக்கொடியுடையா யிரைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) திரிபுரங்களையும் தகித்து எமனை ஆட்கொண்டருளிய திருவடிகளையுடையானே, மேருமலையாகிய வில்லினையுடையானே, இருஷபக்கொடியையுடையானே, என்னுடைய தலைவனே; காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எகாம்பரக்கடவுளே, அடியேனுடைய அன்பு யாவற்றையும் ஆற்றிலே கரைக்கப்பட்ட புளியைப்போல் செய்துவிடாமல் காத்து என்னை மோக்ஷவீட்டுக்கு அனுப்பும்படியாகச் சித்தம் வைக்கவேண்டும். (எ-று)

ஆற்றிலே கரைக்கப்பட்டபுளி, தன்னுடைய புளித்தலாகிய பிர யோசனத்தை அடையாதவாறுபோல என்னுடைய அன்பால்அடைய வேண்டிய உன்னை எனக்குக் காட்டாமலிருக்க வேண்டாம் என்பது கருத்து. (எ-று) (உஉ)

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னைக்
கண்ணால்வெருட்டி முலையான்மபக்கிக் கடிதடத்துப
புண்ணாங்குழியிடைத் தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனை மறந்தே னிறைவா கச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே; காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே; ஒரு மாயாபிசாசானது பெண்ருபங் கொண்டுவந்து என்னைப் பிடித்துக் கொண்டு தன்னுடைய கண்க ளால் என்னை மருளச்செய்து, முலைகளால் மயக்கத்தைக் கொடுத்து அல்குலாகிய துன்பம் மிகுந்த குழியில் தள்ளி என்னுடைய அறிவா கிய பொருளை அபகரித்துக் கொண்டமையால், உன்னைச் சற்றே னும் நினைக்காமல் மறந்துவிட்டேன். (எ-று)

ஆகையால் அப்படிப்பட்ட குழியினின்றும் என்னை வெளிப்படு த்தி அருளாகிய கரையில் சேர்ப்பது உனது கடமையே யாகும் என் பது கருத்து. (உங)

நாவாரவேண்டும் விதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்தால்
சாவேனென்றேயிருந் தொக்கவுண்பார்கள் கைதான்வரண்
போய்வாருமென்றுநடுத்தலைக்கேகுட்டும் பூவையருக்[டாற்
கேவார் தலைவிதியோ விரைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே; காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே; செல்வம் உள்ளபொழுது நாவினால் நன்மையான வார்த்தைகளைச் சொல்வார்கள், நான் உன்னைப் பிரிந் தாலோ யிறந்துபடுவேனென்று சொல்லிக் கூடவிருந்து பொசிப்பார்

கள் பின்னர் செல்வம் நீங்கினால் (உமக்கு இங்கொன்றும்வேலையில்லை) போய்வாரும் என்று சொல்லித் தலையில் குட்டி யனுப்புவார்கள். (ஆகையால்) இப்படிப்பட்ட செய்கையையுடைய பெண்களுக்குப் பொருளைக் கொடுக்கின்றார்களே இது வென்னை? அவர்களுடைய தலைவிதியோ? அறியேன். (எ-று)

செல்வம் கிடைத்தபோது சற்பாத்திரத்தில் தருமஞ் செய்யாமல் வேசிகளுக்கீந்து வருந்துகின்றவர்களைப்போல் என்னையும் செய்துவிடாமல் நற்கதிக் காட்படுத்த வேண்டும் என்பது கருத்து. (உ௪)

கல்லார்சிவகதை நல்லோர்தமக்குக் கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்னபடி
நில்லாரறத்தை நினையாநின்றமை நினைவிற்சற்று
மில்லாரிருந்தென் னிறந்தென புகல்கச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! சிவசம்பந்தமான கதைகளைக் கல்லாமலும், நல்லவரிடத்தில் கனவிலும் மெய்சொல்லாமலும், பசித்து வந்தவர்களுக்கு அன்னங் கொடாமலும், குருசொன்ன உபதேசத்தின்படி நிற்காமலும், தருமகாரியங்களை எண்ணாமலும், உன்னுடைய திருநாமங்களைச் சிறிதேனும் மனதில் நினையாமலும் இருப்பவர்கள் இவ்வுலகத்தின் கண் இருந்தாலும் பயனொன்று மில்லை. (எ-று) (உ௫)

வானமுதத்தின் சுவையறியாதவர் வண்கனியின்
றேனமுதத்தின் சுவையெண்ணல்போலத் தனித்தனியே
தேனமுதக்கின் றெளிவாயஞானஞ் சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவை நன்றல்லவோ கச்சியேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக் கடவுளே! தேவாமிர்தத்தினுடைய ருசியை உணரப்பெறாதவர்கற்பக விருக்ஷத்திலுண்டாகும் பழத்தினுடைய ருசியை எண்ணிப்பார்ப்பது

போல, தேனைப்போலும் பாலைப்போலும் தெளிவாயிருக்கின்ற ஞானம் கொஞ்சமுங் கிடைக்கப்பெறாதவர்களுக்கு அவர்களால் உண்ணப்படுகின்ற அமுர்தத்தின் ருசி நல்லதல்லவோ? ஆம். (எ-று)

ஞானஞ்சிறிது மில்லார்க்கு மற்றப்பண்டங்கள் நன்மையையுண்டு பண்ணத்தக்கதாக முடியும் என்பது கருத்து. (௨௬)

ஊற்றைச்சரீரத்தை யாபாசக்கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச் சோறிடுந்தோற்பையைப் பேசரிய
காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே
யேற்றுத்திரிந்துவிட்டே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நாறுகின்ற சரீரமும் ஆபாசமாகிய பொருளைக் கொட்டிவைக்கும் வீடும், தசைநிறைந்த துவாரத்தோடு கூடிய துருத்தியும், சோற்றைப்போட்டு அடைத்து வைக்கும் தோலாற்செய்யப்பட்டுள்ள பையும் சொல்லுதற்கரிய காற்றினால் நிறையப்பட்டுள்ள நிலையில்லாத பாண்டமுமாகிய இந்த வுடம்பை யெடுத்து அதின்மேல் அதிக பற்றாக விருந்து திரிந்து என்காலத்தை வீணாக்கினேன். (எ-று)

நான் இதுகாறும் உன்னைத் துதிப்பதைவிட்டு என் தேகத்தின் மேல் வைத்த வாஞ்சையால் காலத்தை வீணாக்கிக் கொண்டேன் என்பது கருத்து. (௨௭)

சொல்லால்வருங்குற்றஞ் சிந்தையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியநூ
லல்லாதகேள்வியைக் கேட்டிடுந்தீங்குக ளாயவுமற்
றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக் கடவுளே! நான் பேசும்போது என்சொற்களால் வருங்குற்றங்களை

யும், நான் பலகாரியங்களையும் எண்ணுவதால் வரும்
யும், என்னால் செய்யப்பட்ட பொல்லாத தீவினையினால் உண்டாகும் பாவத்தையும், பாபநூல்களாற் சொல்லப்படும் கேள்வியைக் கேட்கின்ற தீமைகளையும், இன்னுமுள்ள வேறு குற்றங்களையும்பொறுத்து எனக்குத் திருவருள் பாலிக்கவேண்டும். (எ-று)

பலகாரணவழியாக என்னைச்சேரும் பாவங்களை யெல்லாம் போக்கி என்னைப் புனிதமாக்கி உனது திருவடிகளுக் குரியவனாக்கித் திருவருள் பாலிக்கவேண்டும் என்பது கருத்து. (உ அ)

முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கேசெயும் பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நல்ல பசுமஞ்சளை எண்ணெய்யோடு சம்பந்தப்படுத்தி முகத்திற் பூசி மினுக்கிக் காலில் ஒருவகையாகச் சத்தம் கொடுக்கின்ற மோதிரத்தைத் தரித்து, முகத்தில் ஒருதிலகமணிந்து, காதில் பித்தளையோலைச் சுருளைச் சுத்தித்துப்போட்டுப் பகற்பொழுதின்கண்ணே வெளிமயக்கத்தைக் கொடுக்கும் பெண்கள்மீது நானடைந்துள்ள இஷ்டத்தை நீயே நீக்கியருளல் வேண்டும். (எ-று)

பலவகையான ஆபரணங்களைப் பூண்டு வெளிமயக்கத்தையே செய்கின்ற பெண்ணாசையை நீக்கித் திருவருளுக்கிலக்காக்கி என்னை ஆட்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

வெளிமயக்கம் என்றது உட்புறத்தின்கண் இம்மயக்கமில்லை என்பதை வெளிப்படுத்துகின்றது. (உ கூ)

பிறந்துமண்மீதிற் பிணிமையகுடிகொண்டு பேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின் மேன்மையலாகிப்புன் மாதருக்குட்

பிறந்துழன் றேதடு மாறிப்பொன் றேடியப் பாவையர்க்கீந்
திறந்திடவோ பணித்தாயிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! இவ்வுலகத்தில் பிறந்து பலவியாதிகளையும் அநுபவித்து, பேரின்பாநுபவத்தை மறந்து, சிற்றின்பத்தின் மேல் மயக்கத்தை யடைந்து, அற்பப்பெண்களிடத்தில் வைத்த அவாவினால் திரிந்து தடுமாறித் திரவியஞ் சம்பாதித்து அப்பெண்களுக்கே கொடுத்துக் கடையில் இறந்துபடவோ நீ சிருஷ்டித்து ஏவியது. (எ-று)

கடவுளே! நீ சிருஷ்டித்து ஏவியது பெண்கள்மீது ஆசைப்பட்டு அவர்களுக்காகப்பணம் தேடிக்கொடுத்து வீணே யிறந்துபடவோ! என்பது கருத்து. (கூ0)

பூதங்களற்றுப் பொறியற்றுச்சாரைம் புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்றுக்
காதங்கரணங் களுமற்றவானந்தக் காட்சியிலே
யேதங்களைந்திருப்பே னிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! பூதங்களும், ஐம்பொறிகளும், ஐம்புலன்களும், குணங்களும், பேராசையும், பின்னும், முன்னும், கரணங்களும் ஆகிய இவைகளெல்லாம் நீங்கிய பேராநந்தக் காட்சியிலே (என்னுடைய அஞ்ஞானங்களையெல்லாம் உன்னால் நீக்கியருளப்பெற்று) அமர்ந்திருப்பேன். (எ-று)

பூதமுதலியவை யொழிந்தவிடமே பேரானந்தமாகையால் அவ்விடத்தில் உன்னுடைய திருவருட்பாலிப்பால் அமர்ந்திருப்பேனே யொழிய என்னுடைய சுதந்திரத்தால் இல்லை என்பதுகருத்து. (கூக)

நல்லாயெனக்கு மனுவொன் றுதந்தருண் ஞானமில்லாப்
பொல்லாரெனைக்கொன்று போமெம்பொழுதியல் பூசைசெபஞ்

171865 47)



சொல்லாற்நற்கோயி னியமம்பலவகைத் தோத்திரமு
மெல்லாமுடிந்தபின் கொல்லுகண்டாய்ச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! எனக்குமிக்க நன்மையை விளைவிப்பவனே! எனக்கோருத்தரவுகொடுத்தருளவேண்டும் அதுயாதென்றால். அறிவில்லாமையால் பொல்லாதவனுயிருக்கின்ற என்னைக் கொன்றுவிடும்பொழுது, பூசை, ஜெபம், கோயில், நியமம், பலவகைப்பட்ட தோத்திரம், ஆகிய இவைகளெல்லாம் முடிந்தபின்பு கொல்லவேண்டும் என்பதேயாம்.

கடவுளே! பூசை, ஜெபதபமுதலியவை முடிந்தபின்பு நான் இறந்து படும்படியான வரத்தைத் தந்தருளவேண்டும் என்பதுகருத்து.()

சடக்கடத்துக்கிரை தேடிப்பலவுயிர் தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண் டிருமாந்திருந்து மிகமெலிந்து
படக்கடித்தின் றுழல் வார்கடமைக்கரம் பற்றிநம
னிடக்கடிக்கும்பொழு தேதுசெய்வார்கச்சி யேகம்பனே.

(பொ - ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! இந்த உடலினுக்கு ஆகாரந்தேடிப் பலவுயிர்களைக் கொன்று தின்று கர்வித்துத் திரியும் மானிடர்களை யமன் அடித்துக்கொண்டு போம்போது அவர்கள் என்னசெய்யவல்லவர்கள். (எ-று)

ஈண்டு, பலவுயிர்களை அடித்துக்கொன்று தின்று மகிழ்ந்தவர்களை ஆண்டு யமன் அடித்துக்கொண்டு போவதுண்மை, ஆகையால் அப்படிப்பட்ட செய்கைக்குள் என்னையும் அகப்படுத்தாமல் கருணைக்குரியவனுக்கி ரக்ஷிக்கவேண்டும் என்பது கருத்து. *(௫௫)

நாறுமுடலை நரிப்பொதிச்சேற்றினை நான்தினமுஞ்
சோறுங்கறியுநிரப்பியபாண்டத்தைத் தோகையர்தங்

கூருமலமு மிரத்தமுஞ்சேரும் குழியில்விழா
தேறும்படியருள்வா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! நாறுகின்ற உடம்பும், நரியின் விருந்தான பொதிச்சோறும், நான் தினந்தோறும், சோற்றாலும், கறியாலும், திரப்பிவைக்கப்பட்ட பாத்திரமுமாகிய (என்னுடைய) தேகத்தைப் பெண்களுடைய மலமும், இரத்தமும் சேர்தற் கேதுவாகிய பெருங்குழியில் விழாமல் (சிவப்பேறாகிய கரையில்) ஏறும்படி திருவருள் பாலிக்கவேண்டும். (எ-று)

நாடன் சிற்றின்பத்தை விட்டுப் பேரின்பத்தை அடையும்படி திருவருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (கூச)

சொக்கிட்ட ரமனைப் புக்குட்டிருடிய துட்டர்வந்து
திக்குற்றமன்னரைக் கேட்பது போற்சிவ நிந்தைசெய்து
மிக்குக்குருலிங்க சங்கமநிந்தித்து வீடிச்சிக்கு
மெச்குப்பெருத்தவர்க் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே.

(பொ-ரை) காஞ்சீபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! ஓரரசன் அரண்மனைக் குள்ளே புகுந்து திருடிய துஷ்டர்கள் மீண்டும் அவ்வரசன் சமூகத்தில் வந்து யாசிப்பதுபோல, பலவகையாகச் சிவநிந்தைசெய்து, குரு, லிங்க, சங்கமங்களைத் தூஷித்து, மோக்ஷத்தைவிரும்பி விகுர்திஞானம் பெற்றவர்களுக்கு நான் என்ன சொல்லுவேன். (எ-று)

அங்ஙனம் எதையும் நிந்திக்காத என்னை எந்தவிதத்திலாயினும் அடிமைகொள்ள வேண்டும் என்பது கருத்து. (கூரு)

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக்கப் [ நிந்த
பொருந்தார்வளம்பெற வாழ்வார்நின்னுமத்தைப் போற்றி

மருந்தாமுலைபங்க ரென்றரப்பாதக ரம்புவியி
லிருந்தாவதேதுகண்டா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடையதலைவனே! காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! உண்ணாமுலையை இடது பாகத்தில் கொண்டுள்ள சிவபெருமானே! என்று உன்னுடைய திருநாமத்தைத் தினமும் துதிசெய்யாதபாவிகள், விருந்தாக வந்தவர்களுக்கு அன்ன மளியார், தாங்கள் மாத்திரம் செம்மையாக வாழ்வர் இப்படிப்பட்டவர்கள் உலகத்தின்கண் ணிருந்தமையால் பயன் என்னே? (எ-று)

உலோபிகளால் என்னபயன் என்பது கருத்து. (௩௬)

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்ளபடி
வல்லானறிந்துள னென்றுணராது மதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலே யென்பர்காண்கச்சி யேகம்பனே.

(பொ-ரை) காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே! எல்லாநூல்களையும் வாசித்தறிந்திருந்தும், நமக்குள்ள அளவைச் சிவபெருமான் அறிந்துளான் என்று அறியாமல் புத்திகலங்கி மருண்டு, விதிப்படி துக்கப்பட்டுப் பின் (ஒருவகையாய்த் தெளிந்து) இவையெல்லாஞ் சிவனது செயலேயாம் என்றுசொல்வார். ஈதென்ன அறியாமையோ அறியேன். (எ-று)

எல்லா நூல்களையும் கற்றகலைஞானிகளையும் மாயைவந்து மயக்குவது சுபாவமென்பார், இங்ஙனம் கூறினர். (௩௭)

பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவர் பூவையன்றோ
டன்னைநினைந்து வெகுவாயுருகுவர் தாரணியி
லுன்னைநினைந்திங் குனைப்பூசியாத வுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டா யிறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடையதலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரக்கடவுளே! சிவபெருமானாகிய உன்னைச்சிந்தித்துத்துதித்துப் பூசைசெய்யாத கொடியர்களெல்லாம், திரவியத்தின்மேல் ஆசை அதிகரித்து அதைத்தேடுவார்கள்; மாதர்களை நினைந்து நினைந்து அவர்களுக்காகக் கரைவார்கள்; ஆகையால் அப்படிப்பட்ட மனிதர்கள் இவ்வுலகத்தின்கண் இருப்பதினால்பயன்என்னை? எ-று

சிவசிந்தனையில்லாத் தீயோர் திரைகடலுலகில் ஜீவித்திருப்பதினால் ஒருபயனுமில்லை என்பது கருத்து. (௫அ)

கடுஞ்சொலின் வம்பரை யீனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பவமே செயு நிர்மூடர் தம்மைக் குவலயத்து
நெடும்பனைபோல வளர்ந்து நல்லோர்த நெறியறியா
விடும்பரையேன் வகுத்தா யிறைவா கச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடையதலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே! கொடியவார்த்தையாடுகின்ற வம்பர்களையும், ஈனத்துவம் உடையவரையும், முரடர்களையும், மதனலீலா விநோதிகளையும், கொடியபாபங்களையே செய்துவருகின்றமூடர்களையும், இப்பூமியின்கண் நீண்டபனைமரம்போல் வளர்ந்து நல்லவர் ளது நன்மார்க்கங்களை உணராததுட்டர்களையும் நீ உண்டாக்கியதெற்றுக்கோ? அறியேன். (எ-று)

சிவபத்தி, அடியார்பத்தி சிறிதேனுமில்லாமல் தீமையையே தம்மிடத்து இருப்பிடமாக வைத்திருக்கிறவர்களைச் சிருட்டித்ததற்குக் காரணம் யாதோ? அறிந்திலேன் என்பதுகருத்து. (௫௯)

கொன்றேனனேக முயிரை யெல்லாம்பின்பு கொன்றுகொன்
தின்றேன தன்றியுந் தீங்குசெய்தே னது தீர்கவென்றே [று
நின்றேனின் சன்னிதிக் கேயதனாற்குற்ற நீ பொறுப்பா
யென்றே யுனை நம்பினே னிறைவா கச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற யேகாம்பரக்கடவுளே! நானே! அனேக ஜீவராசிகளையெல்லாம் கொன்றேன். அதன்றியும் அவைகளையும் தின்றேன் வேறு தீமைகளையும் பலபடசெய்தேன். (இங்ஙனம்செய்தமையால உண்டான) பாவங்களெல்லாம் நீங்கும்படி உன்னுடைய திருச்சந்நிதியில் நின்று நீ அவைகளையும் பொறுத்துக்கொள்வாயென்று பலமுறை முறையிட்டுக்கொண்டு உன்னை நம்பினேன். நீ அங்ஙனமே செய்து என்னைக் காப்பாற்றவேண்டும். (எ-று)

கொல்லாவிரதம் தெரிந்திருந்தும் மயக்கவாசனையால் கொன்ற என்பாவத்தை நீக்கிப் பதந்தருளல்வேண்டும் என்பதுகருத்து. (௪௰)

ஊரிருந்தென் நல்லோரிருந்தென் னுபகாரமுள்ள
பேரிருந்தென் பெற்றதாயிருந்தென் யடப்பெண்கொடியாள்
சீரிருந்தென்னற் சிறப்பிருந்தென்ன வித்தேயத்தினி
லேரிருந்தென்வல்லவா விறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) சர்வவல்லமையுடையானே! என்னுடையதலைவனே! காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரகடவுளே! இந்த உலகத்திலே ஒருஊரும், நல்லவர்களும், நன்றியுடையவர்களும், பெற்றதாயாரும், பெண்சாதியும், சிறப்பு, யோர்களும் ஆகிய இவைகளெல்லாம் இருந்தாலும் (உன்னுடைய அருளில்லாவிடின்) என்னடயன்.

நீ அவ்வருளைச் சீக்கிரத்தில் தந்தருள வேண்டும் என்பதுகருத்து. (௪௧)

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லாலெறியப் பிரம்பாலடிக்க களிவண்டுகூர்ந்
தல்லார்பொழிற்றில்லை யம்பலவாணர்க்கோ ரன்னைபிதா
வில்லாததாலல்லவோ விறைவாகச்சி யேகம்பனே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் யேகாம்பரக்கடவுளே! ஒருவன் வில்லினால் அடிக்கவும், ஒருவன் பிரம்பினால் அடிக்கவும் நேரிட்டது யேனென்றால், வண்டுகள் மதுவையுண்டு வெறிகொண்டு ரீங்காரம் செய்தற்கேதுவாகிய சோலைசூழ்ந்த சிதம்பரத்தில எழுந்தருளி யுள்ள அம்பலவாணர் என்னும் சுவாமிக்குப் பெற்ற தாய் தகப்பன்மார் இல்லாத குறைவால் அல்லவோ?

வில்லாலடித்தவன்-அருச்சுனன், செருப்பாலுதைத்தவன்-கண்ணப்பன், கல்லாலெறிந்தவன் - சாக்கியன், பிரம்பாலடித்தவன் - பாண்டியன். (சஉ)

## விருத்தம்.

அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ
வப்பனெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னையெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளையெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னையெத்தனை யெத்தனை சென்மமோ
மூடனாயடியேனு மறிந்திலே
னின்னமெத்தனை யெத்தனை சென்மமோ
வென்செய்வேன் கச்சி யேகம்பநாதனே.

(பொ-ரை) காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் யேகாம்பரக்கடவுளே! பூர்வத்திலே நான் எத்தனைஜென்மங்கள் எடுத்தேனோ? அப்படி எடுக்கப்பட்ட ஜென்மங்களில் என்னைப்பெற்றெடுத்த தாய்மார்கள் எத்தனைபேரோ? தந்தையர்கள் எத்தனைப்பேரோ? பிறகு பெண்

சாதியாக வந்தார்கள் எத்தனைபேரோ? பிள்ளைகள் எத்தனைபேரோ ஆசையால் அம்மட்டிலொழியாமல் எனக்காக இன்னும் எத்தனை ஜென்மங்கள் இருக்கின்றனவோ? இவற்றையெல்லாம் நாயினும் கடைப்பட்ட மூடனாகிய நான் அறிந்தேனில்லையே. (ஆகையால் எனக்கு வினைப்பாகுபாட்டால் வரப்படும் ஜென்மங்களைநீக்கி உன்திருவருட் பிரகாசத்தை யருளல்வேண்டும் என்பதுகுறிப்பு.)

எடுக்கும் ஜென்மங்கள்தோறும், தாய்மாரும், தந்தையரும். பெண்சாதி பிள்ளைகளும் பலவாக விருத்தலின் "அன்னையெத்தனை நாதனே" என்றார். (க)

## திருத்தில்லை.

காம்பிணங்கும்பணைத் தோளார்க்கும்
பொன்னுக்குங் காசினிக்குந்
தாம்பிணங்கும்பல வாசையும்விட்டுத்
தனித்துச் செத்துப்
போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப்
புரண்டினிமேற்
சாம்பிணங் கத்துதையோ
வென்செய்வேன் றில்லைச்சங்கரனே.

(பொ-ரை) சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கும் சங்கரப்பெருமானே! மூங்கிலையொத்த தோட்களையுடைய பெண்கள்மீதும் பொருள்களின்மீதும் பூமின்மீதும் வைத்துள்ளபலவகையான பற்றுகளையும் விட்டுத் தனியே இறந்துபட்ட பிணத்தைச் சுற்றிக் கூட்டமாகக் கூடிப்புரண்டு இனிமேல் சாகவிருக்கின்ற பிணங்களெல்லாம் கத்துகின்றனவே இதற்கு நான் என்னசெய்வேன். (எ-று)

பணைத்தோளார்க்கும் பொன்னுக்கும் காசினிக்கும் என்றது பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசைகளை. உயிர்கள் இறக்கும்பொழுது இம்மூன்றாசைகளையும் விட்டுவிடுவது சுபாவமாகையால் இங்ஙனம் கூறினார்.

செத்தபிணத்தை இனிசாகும்பிணங்கள் சுற்றியழுவதினால் பயனில்லையென்பார் "இனிமேற்சாம்பிணம் கத்துதையோ வென்செய்வேன்" என்றார்.

இதனை, "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார்வருவரோ மாநிலத்தீர் — வேண்டாம்
நமக்குமதுவழியே நாம்போமளவும்
எமக்கென்னென் றிட்டுண்டிரும்." என்பதினாலறிக. ()

சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைக ளிறங்கிடுந்தீவினை யெப்பொழுது
நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா
லூறிடுங்கண்க ளுருகிடுநெஞ்சமென் னுள்ளமுமே.

(பொ-ரை) சதா நீறுபூத்த திருமேனியோடு சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய நடனத்தைதரிசித்தால், உலகத்தார் அன்னமளிப்பார்கள்; குப்பைக்காடானதுவஸ்திரமளிக்கும்; அன்பர்களைக்கண்டவுடன் கைகள் அஞ்சலிசெய்யும்; தீவினைக ளெல்லாம் நீங்கும்; கண்கள் மகிழ்ந்தூறும்; மனமும் சித்தமும் கரைந்து மகிழும். (எ-று)

சிற்றம்பலவர் நடனதரிசனம் இங்ஙனம் பலவகை நன்மைகளை விளைப்பது உண்மையாகலான், மனமே! நீ எப்பொழுதும் அவரது நடனதரிசனமே செய்துகொண்டிருப்பாய் என்பது கருத்து (உ)

அழலுக்குள் வெண்ணெ யெனவேயுருகிப் பொன்னம்பலத்
நிழலுக்குணின்று தவமுஞற்றுமவ னிட்டோமின்னார் [கார்

குழலுக்கிசைந்த வகைமாலைகொண்டு குற்றேவல்செய்து
விழலுக்குமுத்துலை யிட்டிறைத்தேனென் விதிவசமே.

(பொ-ரை) சிதம்பரத்தின் கண்ணே தாண்டவஞ் செய்யாநின்ற எம்பெருமானது திருவடி நிழலிலிருந்து, அக்கினியிற்பட்ட வெண்ணெயைப்போல் கரைந்து தவஞ்செய்யாமல், பலராலும் இகழப்படுகின்றபெண்களது சிறப்பினையோர்மாலையாகப்பாடி அவர்களுக்குக் குற்றேவல் செய்து, ஒருபிரயோசனத்தையும் தராத விழாலரிசிக்கு முத்தால் உலைவைத்து இறைத்தவன் போலாயினேன் அந்தோ! இது என்னுடைய தலைவிதியேயாம். (எ-று)

எம்பெருமானுக்கு வேண்டிய தவஞ்செய்யாமல் பெண்களிடத்தில் பெருங்களிகொண்ட நான் என்வாறுய்வேன் என்பது கருத்து.

ஓடாமற்பாழுக் குழையாமலோர முரைப்பவர்பாற்
கூடாமனல்லவர் கூட்டம்விடாமல் வெங்கோபநெஞ்சி
னடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ-ரை) சிதம்பரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! வீணைகாரியங்களின் பொருட்டு ஓடாமலும் உழைக்காமலும் பால் பற்றிப் பேசுகின்றவர்களுடன் சிநேகியாமலும், சாதுசங்கத்தைப்பிரியாமலும், கொடுமையை விளைக்கும் கோபத்தை மனத்தில் வையாமலும், நன்மையினின்றும் நீங்காமலும், இன்றைக்கு வேண்டுமே, நாளைக்குவேண்டுமே என்கிற எண்ணத்துடன் செல்வத்தைத் தேடாமலும் என்றும் அழிவற்ற பேராநந்தச் செல்வத்தை தந்தருளவேண்டும். (எ-று)

• எம்பெருமானே! சிவாநந்தப்பேருகிய செல்வத்தை அடியேனுக்குக் கொடுத்தருளவேண்டும் என்பதுகருத்து. (சு)

Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

பாராமலேற்பவர்க் கில்லையென் றுமற் பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள் வந்தணுகாமன் மனமயர்ந்து
பேராமற்சேவை பிரியாமலன்பு பெறாதவரைச்
சேராமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ-ரை) சிதம்பரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! முன்பின் பார்க்காவண்ணம் என்னையடைந்துயாசிப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாமலும், குற்றங்களைச் சொல்லிக்கொண்டு திரியாமலும், பாவங்கள் என்னைசசேராமலும், மனஞ்சோர்ந்து சஞ்சரியாமலும், நினது திருவடிசேவையிலிருந்து பிரியாமலும், அன்பைப்பெறாத அறிவீனர்களைச் சேராமலும் இருக்கத்தக்க பேரானந்தச் செல்வத்தைக் கொடுத்தருளவேண்டும். (எ-று)

இதன் கருத்து வெளிப்படை. (ரு)

கொல்லாமற் கொன்றதைத்தின்றுமற் குத்திரங்கோள்களவு
கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவிலும்பொய்
சொல்லாமற்சொற்களைக் கேளாமற்றோகையர் மாயையிலே
செல்லாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே.

(பொ-ரை) சிதம்பரத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! ஓருயிரையுங்கொல்லாமலும், அங்ஙனங்கொன்றதைத்தின்னாமலும், குத்திரம், கோள், களவு முதலியவற்றைக் கற்றுக்கொள்ளாமலும், வஞ்சகரோடு சிநேகியாமலும், கனவிலும் பொய்சொல்லாமலும், அப்படிப்பேசும் பொய்ச்சொற்களைக் கேளாமலும், பெண்கள் மயக்கத்தில் செல்லாமலும் இருக்கத்தக்க பேரானந்தச் செல்வத்தைக் கொடுத்தருளவேண்டும். (எ-று) (சு)

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய்வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்

படிசார்ந்தவாழ்வை நினைபபதல்லாற்பொன்னி னம்பலவ
ரடிசார்ந்துநாமுய்ய வேண்டுமென்றேயறி வாரில்லையே.

(பொ - ரை) மனமே! இவ்வுலகத்தின்கண் அரசர்களாயுள்ளவா களும் இன்னுமுள்ளவர்களும் கடைசியில் ஒரு பிடிசாம்பராய் வெந்து மண்ணாய் விடுவதைப் பார்த்திருந்தும், இவ்வுலகத்தில் வாழவேண் டியதையே நினைக்கின்றார்களே யொழிய, சிதம்பரத்தில் நடனஞ்செ ய்கின்ற சிவபெருமானது திருவடிகளைச் சேர்ந்து நாம் பிழைக்கவே ண்டும் என்று அறிந்து நடப்பவரில்லையே? இதற்கு நாம் என்னசெய் வோம். (எ-று) (எ)

காலையுபாதி மலஞ்சலமாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமாமுற் சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காமமாமிவை மாற்றிவிட்டே
யாலமுகந்தரு ளம்பலவாவென்னை யாண்டருளே.

(பொ - ரை) ஆலகாலவிஷத்தை யமிர்தமாகக்கொண்டு திருமிடற் றடக்கிய சிதம்பரதேவனே! எனக்குக் காலையில் நிகழ்வன மலமும் சலமுமாகும், உச்சிக்காலத்தில் நிகழ்வனபசியும், தாகமுமாகும் இர வில் நிகழ்வன நித்திரையும், காமமும் ஆகும், (ஆகையால்) இவைக ளாற்பயனில்லையென் றுணரப்பெற்றேன். நீ அவைகளை நீக்கிஎன்னை உன் திருவடிகளுக்குப் பாத்திரனுக்கிக் கொள்ளல்வேண்டும். (எ-று)

ஆயும்புகழ்த்தில்லை யம்பலவாண ரருகிற்சென்றாற்
பாயுமிடபங் கடிக்குமரவம்பின் பற்றிச்சென்றாற்
பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும் பின்றொடரப்
போயென்செய்வாய்மனமே பிணக்காடவர் போமிடமே.

(பொ - ரை) ஓ மனமே! யாவராலும் ஆராயப்படுகின்ற சிதம்பரத் தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய சமீபத்திற் சென்றால் ரிஷபமானது பாயா நிற்கும்; பாம்பானது கடிக்கும். ஆகையால் நீ

அவருக்குப் பின்னே சென்றாலோ, பேய்க்கணங்களும் சிவகணங்களும் பூதகணங்களும் உன்னைப் பின்தொடர்ந்து மருட்டும்; ஆகையால் நீ அவரிடத்திற்போய் என்னசெய்வாய். (ஒன்றுஞ்செய்யமாட்டாய் ஏனென்றால்) அவர்போகின்ற இடமாயுள்ளது சுடுகாடு ஆகையால். (எ-று) (கூ)

ஓடுமெடுத்தத ளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்ள
வீடுகடோறும் பலிவாங்கியேவிதி யற்றவர்போ
லாடுமருட்கொண்டிங் கம்பலத்தேநிற்கு மாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்ன காண்சிவகாம சவுந்தரியே.

(பொ - ரை) சிவகாமசுந்தரி என்னும் திருப்பெயர்பூண்டு எழுந்தருளியுள்ள பார்ப்பதாதேவியே! ஓட்டையெடுத்து, தோலாகிய வஸ்திரத்தையும் தரித்துத் திரிந்து வீடுகள்தோறும் பிச்சையெடுத்துத் திக்கில்லாமையாற் பரதேசிகளானவர்கள்போல் திருவருளை முன்னிட்டுச் சிதம்பரத்தின்கண்ணே நடனஞ்செய்யா நிற்கின்ற சிவபெருமானை நீ தேடுதற்கு நியாயம் என்னையோ? நான் அறிகிலேன்.

சத்தியானவள் சகல உயிர்களையும் பெற்றுப்பாலித்துப்பின் அவரவர்கள் வினைக்கீடாகச் சங்காரஞ்செய்யவேண்டுங் காலத்தில் எம்பெருமானாகிய சிவனைத்தேடவேண்டி அவசரமுள்ளதாதலால், "அம்பலத்தேநிற்கு மாண்டிதன்னைத் தேடுங்கணக்கென்னகாண் சிவகாமசவுந்தரியே" என்றார். இதனை,

"சுற்றுநெடுநேமிச் சுவர்கிசையகெட்டுச
சுவர்க்கா னிருத்தி மேருத்
தூணொன்று நடுநட்டுவெளி முகடுமூடியிரு
சுடர்விளக் கிட்டுமுற்ற
வெற்றுபுன லிற்கழுவு புவனப்பழங்கல
மெடுத்தடுகிப் புதுக்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னை நீபன்முறை
யிழைத்திட வழித்தழித்தோர்"

மகாமகோபா...
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20.



"முற்றவெளியிற்றிரியு மத்தப்பெரும்பித்தன்
முன்னின்று தொந்தமிடவும்
முனியாதுவைகலு மெடுத்தடுக்கிப்பெரிய
மூதண்ட கூடமும்
சிற்றில்விளையாடுமொரு பச்சிளம்பெண்பிள்ளை
செங்கீரையாடி யருளே
தென்னற்குமம்பொன்மலை மன்னற்குமொருசெல்வி
செங்கீரையாடி யருளே"

எனக் குமரகுருபரசுவாமிகள் திருவாக்காலறிக.

இங்ஙனமன்றி யாதொரு செல்வமும் தனக்குச் சுவாதீனமாக வைத்திராத சிவபெருமானை நான் பேரானந்தச் செல்வத்தை விரும்பித் தேடுவது எற்றுக்கு என்று உரைத்தலுமாம். (ம)

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானு மிங்கொன்றோடொன்
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை [றை
காட்டுவிப்பானு மருவினைப்பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே.

(பொ - ரை) ஓ மனமே! சிதம்பரத்தின் கண்ணே உயிர்களை உண்பிக்கிறவனும், உறங்குவிக்கிறவனும், ஒருபொருளோடு ஒரு பொருளைக் கூட்டுவிப்பவனும், அநுபவிப்பனும், நல்வினை தீவினைகளைக் காட்டுவிப்பவனும், இருவினைகளாகிய பாசக்கயிற்றின் வழியாக உயிர்களை ஆட்டுவிப்பனுமாகிய சிவபெருமானென்னும் திருநாமமுடையவன் ஒருவன் இருக்கின்றான். அவனைச் சதாதியானிக்கக்கடவை.

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெரலாம்வைய மேழளந்த

நெடியோனும் வேதனுங் காணுதநித்த நிமலனருட்
குடிகாணுநாங்க ளவர்காணு மெங்கள் குலதெய்வமே.

(பொ - ரை) நாங்கள் சத்த உலகங்களையும் அளந்த விஷ்ணுவும், பிரமனுங்காணுத என்றும் அழியாதவனும், பரிசுத்தனும், ஆகிய சிவபெருமானது அடியேங்களாவோம். அவரோ எங்களுக்கு குலதெய்வமாவார். ஆகையால் அவர் அன்பர்களுக்கு எளியவர், சிதம்பரத்தில் வாழ்பவர், அவருடைய திருவடிகளை வணங்கினுல் என்று மழியாத செல்வமாகிய வரத்தைப்பெற்றுக் கொள்ளலாம். (எ-று) (கஉ)

தெய்வச்சிதம்பர தேவாவுன்சிந்தை திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பன மாமன்னர்வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண்டலீகர்தம் மேடையெங்
கைவைத்தநாடக சாலையெங்கேயிது கண்மயக்கே. [கே

(பொ - ரை) சிதம்பரத்தின்கண்ணே வாழ்கின்ற சிதம்பர நாதன் என்னும் திருப்பெயரினைவாய்ந்த சிவபெருமானே! உன்னுடையமனமானது சற்றுத்திரும்பி விடுமானல் அரசர்களுடைய வாழ்வும் அவ்வாழ்தலுக்குரித்தான தேசங்களும்எங்கே? செல்வங்களெங்கே? மண்டலாதிபதிகளுடைய மேடைமாளிகைகள் எங்கே? நடனசாலைகள் எங்கே? ஆகையால் எல்லாம் கண்களுக்கு மயக்கத்தைத் தருவனவே யொழிய மெய்யல்ல. (எ-று) (கங)

உடுப்பானும்பாலனை முண்பானுமுய்வித் தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந்தேகியென் றேற்பானுமேற்கக்கொடாமனின்
றடுப்பானுநீயல்லையோ தில்லையானந்தத் தாண்டவனே. [று

(பொ - ரை) சிதம்பரத்தின்கண்ணே நடனஞ்செய்கின்ற நடராஜனே! உடுப்பவனும், பாலுஞ்சோறுமாகப் புசிப்பவனும், ஒருவரைப்

பிழைக்கப்பண்ணிப்பின்பு கெடுப்பவனும், கேட்பவனும், தானங்கொ டுப்பவனும், பிச்சையெடுப்பவனும் கொடுப்பவர்களைத் தடுப்பவனும் ஆகிய எல்லாஞ்செய்யவல்லவன் நீயேயல்லவா. (எ-று)

இச்செய்யுள் எல்லாம் சிவன்செயல் என்பதை விளக்குகின்றது. ()

வித்தாரம்பேசினுஞ் சோங்கேறினுங்கம்ப மீதிருந்து
தந்தாவென்றோதிப்பவுரிகொண்டாடினுந் தம்முன்றம்பி
யொத்தாசைபேசினு மாவதுண்டோதில்லை யுண்ணிறைந்த
காத்தாவின்சொற்படி யல்லாதுவேறில்லை கன்மங்களே.

(பொ - ரை) அவரவர் கருமங்கள் சிதம்பரத்தின்கண்ணே எழுந் தருளியிருக்கும் சிவபெருமானுடைய சொற்படியேயல்லாமல் வேறு வழியில் நடவாதாகையால், பெருக்கப்பேசினாலும், சோம்பியிருந்தா லும், கம்பமேல் இருந்து சுற்றிவருதலாகிய பவுரியென்கிற ஒருவகை க்கூத்தாடினாலும், தாமும், தம்பியும் மற்றுமுள்ளாரும் ஒருமிக்கச் சேர்ந்து ஆசையானவார்த்தைகளைப்பேசினாலும் சிவானந்தப்பேற்றிற் குரியகாரியம் ஏதாயினும், ஆவது இருக்கின்றதோ? இல்லையென்றபடி.

இசசெய்யுள் அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதை விள க்குகின்றது. (கரு)

பிறவாதிருக்க வரந்தரல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
வறமார்புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாண் மருந்துனக்கே.

(பொ - ரை) ஓ மனமே! சிவபெருமானவர் உனக்குப் பிறவாம லிருக்கும்படி வரங்கொடுக்கவேண்டும் (அங்ஙனம் கொடாமல்) உல கத்தின்கண் பிறந்து விட்டாலோ, சாகாமலிருக்க மருந்திருக்கின் றது (அது எந்தமருந்தென்றால்) தருமங்குடிகொண்டமையால் புகழ்

விளங்குகின்ற சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள அம்பலவாணருடைய திருவடித்தாமரைகளை மறவாதிருப்பாயானால் அதுவே உனக்கு நல்ல மருந்தாகும். (எ-று)

உனது பிறவியை யொழிக்கத்தக்க மருந்து சிவபிரானது திருவடிகளேயாம் என்பது கருத்து. (கசு)

தவியாதிருநெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்
பவியார்ந்திருக்கின்ற ஞானாகரனைப்புராந்தகனை
யவியாவிளக்கைப்பொன் னம்பலத்தாடியை யைந்தெழுத்
செவியாமனீசெவித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே. [தாற்

(பொ - ரை) ஓ மனமே! நீ துன்பப்படாதிருப்பாயாக. (ஏனென்றால்) சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சங்கரனும், ஞானமே திருமேனியாக வுடையவனும், என்றும் கெடாத விளக்குப்போல் வானும், என்னுடைய சிற்றம்பலத்தில் நடனஞ் செய்கின்றவனுமாகிய சிவபெருமானை நீ பஞ்சாட்சரத்தைக்கொண்டு செபியாமற் செபிப்பையானால் என்றும் பிறப்பதற் கிடமிராத மோக்ஷமானது உனக்குக் கைகூடும். (எ-று)

நீ பஞ்சாட்சரதியானத்தைச் செய்யவேண்டிய முறைப்படி செய்தால் மோக்ஷமடைவாய் என்பது கருத்து. (கஎ)

நாலின்மறைப்பொருளம்பலவாணரை நம்பியவர்
பாலிலொருதரஞ் சேவிக்கொணுதிருப்பார்க்கருங்கல்
மேலிலெடுத்தவர் கைவிலங்கைத்தைப்பர் மீண்டுமொரு
காலினிறுத்துவர் கிட்டியுந்தாம்வந்து கட்டுவரே.

(பொ - ரை) நான்கு வேதங்களினுட் பொருளாயுள்ள அம்பலவாணர் என்னுந் திருப்பெயருடையவரை நம்பி அவரை ஒருதரமாயினும் சேவைசெய்யா திருப்பவரை எமதூதர்கள் கருங்கல்லை மேலாக

11C4(2843)



எடுக்கச செய்து அவர்களுடைய கையில் விலஙகையிட்டு மறுபடியும் ஒற்றைக்காலில் நிறுத்துவதன்றியும் சமீபத்தில் போய் மற்றைய உறுப்புகளையும் கட்டுவார்கள். (எ-று)

ஆகையால் சீக்கிரத்தில் சிவபெருமானை வணங்கித் தேகத்தாலாகும் பயனை யடையவேண்டும் என்பது குறிப்பு. (கஅ)

ஆற்றோடுதும்பை யணிந்திடுமம்பல வாணர்தம்மைப்
போற்றாதவர்க்கடை யாளமுண்டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவிசற்றுச் சுகமற்றுச்சுற்றத் துணியுமற்றே
யேற்றாலும்பிச்சை கிடையாமலேக்கற் றிருப்பார்களே.

(பொ - ரை) கங்காநதியையும், தும்பைமலரையும் தாங்கி நடனஞ்செய்கின்ற சிவபெருமானைப் பூசியாத பாவிகள் அடையாளங்களுடனகூடியிருப்பார்கள். (அவையாவை யென்றால்) இந்தப்பூமியின்கணணே சோறு கிடையாமலும், சுகமில்லாமலும், உடலிற் சுற்றத்துணியில்லாமலும், இரந்தாலும் பிசசை அகப்படாமலும், துக்கத்துடன் இருப்பதே அடையாளமாகக் குடியிருப்பார்கள். (எ-று)

இச்செய்யுள் எல்லாம் சிவன் தருதலால் அவனை வணங்காதவர் இங்ஙனமாயதன்மையை யடைவார்கள் என்பதை விளக்குகின்றது.

அத்தனைமுப்பத்து முக்கோடிதேவர்க் கதிபதியை
நித்தனையம்மை சிவகாமசுந்தரி நேசனையெங்
கத்தனைப்பொன்னம் பலத்தாடுமையனைக் காணக்கண்க
ளெத்தனைகோடி யுகமோதவஞ்செய் திருக்கின்றனவே.

(பொ - ரை) செல்வனும், தேவர்களுக்கெல்லாம் தலைவனும், என்றும் அழியாதவனும், என் தாயாகிய சிவகாம சுந்தரிக்குக் கணவனும், எம்பெருமானும் பொன்னம்பலத்தில் நடனஞ்செய்யும் தலைவனுமாகிய சிவபெருமானைத் தரிசிக்கும்பொருட்டு என்னுடையகண்கள் எத்தனையோகோடி யுகங்களாகத் தவஞ்செய் திருக்கின்றன. (எ-று)

அப்படியிருந்தும் அந்தத் தரிசனம் எப்பொழுது கிடைக்குமோ ஈான அறிந்திலேன் என்பது குறிப்பு. (உ0)

## திருச்செங்காடு

நெருப்பானமேனியர் செங்காட்டி லாத்தி நிழலருகே
யிருபபார்த்திருவுள மெப்படியோவின்னமென்னையென்னக்
கருப்பாசயக்குழிக் கேதள்ளுமோகண்ணன் காணரிய
திருப்பாதமேதருமே தெரியாது சிவன்செயலே.

(பொ - ரை) எல்லாம் சிவன்செயலே யாகையால் அவர் இனன மும் என்னை, தாயின் கருப்பாசயக் குழியிலேயே தள்ளுவாரோ? அன்றி, விஷ்ணுவால் காணப்படாத திருவடிகளில் தள்ளி அவை களைக் கொடுப்பாரோ, இவ்விரண்டில் ஒன்றும் எனக்குத் தெரியவி ல்லை (ஏனென்றால்) செவந்த திருமேனியை யுடையவரும் திருச செஙகாடென்னும் திவ்விய க்ஷேத்திரததில் ஆத்திமாத்தின கீழ் எழு ந்தருளி யிருப்பவருமாகிய சிவபெருமானுடைய திருவுள மெப்படி யிருக்கின்றதோ? ஆகையால், (எ-று)

தாயின் கருப்பாசயக்குழியில் தள்ளுவாரோ என்பது பிறக்கச் செய்வாரோ என்னும்பொருட்டு. (க)

## திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகி விடுகின்றபோதொன்று வேண்டுவன்
செய்யுந்திருவொற்றி யூருடையீர்திரு நீறுமிட்டுக் [யான்
கையுந்தொழும்பண்ணி யைந்தெழுத்தோதவுங் கற்பியுமே.

(பொ-ரை) திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள தியாகப் பெருமானே! சிலேஷ்மம் மேலிட்டுக் கண உள்ளிட்டு அறிவுகுலைந்து மெய்யாகிய தேகம் விழுஞ்சமயத்தில் நான் செய்யவேண்டியதாகிய ஒரு வார்த்தைகேட்கின்றேன். (அஃது என்னவென்றால்) விபூதியுத்தூளனம்செய்து கைகுவித்துப் பஞ்சாக்ஷர தியானஞ்செய்யுமபடியாக நீ எனக்குக் கற்பிக்கவேண்டும் என்பதேயாம். (எ-று)

அறிவானது கெட்டுத் தேகம் விழுப்போம்சமயத்தில் செய்யவேணடியது இன்னதென்று தெரியாமல் மயஙகுவேனுகையால் நீ அப்பொழுது மேல் நான் கேட்டுக்கொண்டவற்றை அறிவுறுத்த வேண்டும் என்பது கருத்து. (க)

சுட்டப்படுவாரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான்
றிட்டப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பி
னடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக் கிழிப்பதுவே

(பொ-ரை) ஓமனமே! பிரமனால் எழுதப்பட்டுள்ள லிபியைக்கிழித்துச சுகத்தையடைவது எஙஙன மென்றால், வேறொருவரால் எரிக்கப்படாத திரிபுரத்தையும் எரித்த பெருமானும், தியாகபெருமானுமாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள வலிமைதஙகிய பெரியமதில்களால் சூழப்பட்ட திருவொற்றியூரின் வீதியில் நடப்பவர்களுடைய அழகிய திருவடிகள் நம்முடைய் தலைமேல் படும்படியாக செவ்வனே யுருண்டு கிடப்பதேயாம். ஆகையால் நீ இதையறிந்து அங்ஙனம் செய்வையானல் முத்திப்பேறு எளிதிற் கைகூடும் என்பதேயாம் இது குறிப்பு.

இங்ஙனம் சொன்னமையால் அக்காலத்தில் திருவொற்றியூர்வாசிகளெல்லாம் தபமகிமையுடையார் என்பது வெளிப்படுகின்றது (பு

## திருவிடைமருதூர்.

காடே திரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தைசுற்றி
யோடே யெடுத்தென்ன வுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோ
ராடேயிடைமரு தீசர்க்குமெய்யன்பர் நாரியர்பால் [ர்
வீடேயிருப்பினு மெஞ்ஞானவீட்டின்ப மேவுவரே.

(பொ-ரை) ஓமனமே! மனத்தின்கண் அன்பில்லாதவர்கள், காட்டையே இருப்பிடமாகக்கொண்டு அதனிடத்தில் வசித்தாலும், காற்றையே ஆகாரமாகப் புசித்தாலும் கந்தையான வஸ்திரங்களை அரையிற்சுற்றி ஓட்டையெடுத்துக்கொண்டு பிச்சையெடுத் துண்டாலும் என்னபயன்? ஒன்றுமில்லை. பொன்றுட்டையளாவும் மதில்களால் சூழப்பட்ட திருவிடைமருதூரிலிருக்கும் மருதீசரிடத்தில் உண்மையான அன்பைச் செலுத்துவோர்கள் வீட்டின்கண் ணிருந்து பெண்களோடு கூடியிருந்தாலும் மெய்ஞ்ஞானமாகிய மூத்திவீட்டில் அநுபவிக்கவேண்டிய சுகத்தைஅடைவார்கள். (எ-று)

அன்பில்லார் காட்டிலிருந்தாலும் பயனொன்றுமில்லை. அன்புள்ளார்வீட்டிலிருந்தாலும் பயனுண்டு என்பதுகருத்து. (க)

தாயும்பகைகொண்ட பெண்டிர்பெரும்பகை தன்னுடைய
சேயும்பகையுற வோரும்பகையிச் செகமும்பகை
யாயும்பொழுதி லருஞ்செல்வநீங்கிவிங் காதலினாற்
றேயுநெஞ்சேமரு தீசர்பொற்பாதஞ் சுதந்தரமே.

(பொ-ரை) வருந்துகின்றமனமே! அருமையாகத் தேடிச் சேகரிக்கப்பட்ட செல்வமானது போய்விட்டால் பெற்றதாய், பெண்சாதி, தன்னுடையபிள்ளைகள், சுற்றியார், உலகத்தார் ஆகியஎல்லாரும்பகை வராவார்கள் ஆகையால் என்றும் ஒரேதன்மையாக இருக்கும் நம்மு

டைய மருதீசருடைய அழகிய திருவடிகளே நமக்குச்சுவாதினமான அழியாத பொருளாயுள்ளவை. (ஆகையால் அத்திருவடிகளையேசதாதி யானஞ்செய்யக்கடவை. (எ-று)

உலகத்தில் செல்வம் நீங்கினல் யாவரும் பகையாவா ராகையால் சிவபிரானைத் துதிசெய்வாய் என்பது கருத்து (உ)

## திருக்கழுக்குன்றம்.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோ நகர்நடுவோநல மேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிட
நீடோய்கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

(பொ - ரை) ஆகாயத்தை அளாவுகின்ற திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் ஈஸ்வரனே! அடியேனுடையதேகமானது விழப்படும் இடமாவுள்ளது, காடோ, அக்காட்டின் உறுப்புகளில் ஒன்றாகியசெடியோ, கடலின் பக்கங்களோ, நாடோ, பட்டணமோ, அப பட்டணத்திற்கு நடுவோ, நன்மைமிகுந்த வீடோ, அன்றிப் புறந்திணணையோ, அறியேன், ஆனாலும் அக்காலத்தில் என்னுடைய உயிர்க்குந்துணையாக இருப்பது உன்னுடைய திருவடிகளேயாம். (ஆகையால்) எந்த இடத்தில் என்தேகம் விழுந்தாலும் என்னை உன்திருவடிகளிடத்தில் அன்பனுக்கிக்கொள்வது உன்னுடைய சர்வகாருணணியத்தின் கடமை என்பதுகுறிப்பு. (க)

## திருக்காளத்தி.

பூத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு

செத்துக்கிடக்கும் பிணத்தருகேயினிச் சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்ன காண்கயிலாபுரிக் காளத்தியே.

(பொ-ரை) தென்கயிலாயமென்று சொல்லுகின்ற திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் காளத்திநாதரே! (தாயின் வயிற்றிடமாகப்) பத்துமாதம் இருந்துபின்பு இப்பூமியில் பிறந்துவளர்ந்து நல்ல வஸ்திரங்கள் ஆபரணங்கள் முதலியவைகளைத் தரித்து சிற்றின்பம முதலியவற்றில், ஓடியாடித் திரிந்தபிறகு மாண்டுகிடக்கும் ஒருபிணத்தினிடத்தில் இனிமேல் மாளும்பொருட்டாக இருக்கின்ற பலபிணங்கள் கூடிக்கொண்டு கத்துகின்ற விதமென்னவோ? அறியேன்.

இறந்துகிடக்கும் பிணத்தைப்போல் நாமும்போகவேண்டுமேயொழிய இவ்வுலகத்தில் நிற்பதுஇல்லையே யென்று உணர்ந்துகாளத்திநாதனை வணங்காமலிருக்கின்றனரே இது என்னவோ தெரியவில்லையே என்பது இரக்கக்குறி.

பொன்னாற்பிரயோஜனம் பொன்படைத்தார்க்குண்டு
பொன்படைத்தோன்
தன்னாற்பிரயோசனம் பொன்னுக்கங்கேதுண்டத்
தன்மையைப்போ
லுன்னாற்பிரயோசனம் வேணதெல்லாமுன்
டுனைப்பணியு
மென்னாற்பிரயோசன மேதுண்டுகாளத்தி
யீச்சுரனே.

(பொ-ரை) திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! பொன்னைப்பெற்றுள்ள செல்வர்களுக்கு அப்பொன்னினாற்பல பிரயோசனங்களிருக்கின்றன; அவர்களால் அப்பொன்னுக்கு ஒரு பிரயோசனமுமுண்டோ? இல்லை. அதுபோல உன்னைச்சார்ந்

டாங்கநமஸ்காரம்பண்ணி வணங்கும் எனக்கு உன்னால் அநேகபிரயோசனங்களுள்ளன. என்னால் ஏதாயினும் ஒரு பிரயோசன முண்டோ? இல்லை என்றபடி. (எ-று)

இப்படியிருப்பதால் என்னைச்சிவபோக வின்பத்தி லமிழ்த்திமுத்திபேற்றைத் தந்தருளல் வேண்டும் என்பது குறிப்பு. (௨)

வாளான்மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிக் கண்ணிடந்தப்பவல்லேனல்லனினிச்சென்
றாளாவதெப்படியோ திருக்களத்தி யப்பருககே.

(பொ - ரை) வாளைக்கொண்டு (அருமையாகப்பெற்ற) பிள்ளையை அரிந்து கடவுளுக்கு ஊட்டவல்லமை யுடையேனல்லன்; மனையாள் செய்துகொண்ட சபதத்தை மேற்கொண்டு இளம்பிராயத்தையெல்லாம் கழிக்கச் சக்தியுடையேனல்லன்; அருமையான திருத்தொண்டுசெய்து ஆறுநாட்களில் கண்ணைப்பிடுங்கி சிவபிரானது கண்ணில் அப்பிவைக்கச் சக்தியுடையேனல்லன்; (ஆகையால் நான் இனிமேல் திருக்காளத்தியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு அடிமைப்படுவது எப்படியோ? அறியேன். (எ-று)

இம்மூத்திறத்தில் ஏதேனுமொன்றைச் செய்யவும் சக்தியிலலாதவனான நான் சிவபெருமானது திருவடிக்குப் பாத்திரனாவது எப்படி? என்பது கருத்து.

வாளான்மகவரிந்தது: சிறுத்தொண்ட நாயனாரிடத்தில் நிகழ்ந்தமை. மனையாள்சபதஞ்செய்து கொண்டது: திருநீலகண்டநாயனாரிடத்தில் நிகழ்ந்தமை. நாளாறில் கண்ணிடந்தது! கண்ணப்ப நாயனாரிடத்தில் நிகழ்ந்தமை. (௫)

மூப்போதுமன்னம்புசிக்கவு தூங்கவுந் மோகத்தினாற்
செப்போதிளமுலை யாருடன்சேரவுஞ் சீவன்விடு ...

மப்போதுகண்கலக் கப்படவும்மமைத் தாயைய்யனே
யெப்போதுகாணவல்லேன் றிருக்காளத்தி யீச்சுரனே.

(பொ-ரை) திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! என் தந்தையே! (ஒருநாளைக்கு) மூன்றுவேளையும் போஜனம் பண்ணவும், நித்திரைசெய்யவும், மாயாவிகாரத்தால் பெண்களிடத்தில் கல்வி செய்யவும், உயிர் இறந்துபடுந்தருவாயில் தூக்கப்படவுமே ஏற்படுத்தினாய். ஆகையால் நான்இப்படிப்பட்டவைகளை யெல்லாம் ஒழித்து உன்னுடைய திருவடித்தாமரைகளை எப்பொழுது தரிசிக்கப்பாத்திரனுவேனோ! (எ-று)

இரைக்கேயிரவும் பகலுந்திரிந்திங் கிளைத்துமின்னு
ரரைக்கேயலைக் குழியருகே யசும்பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந் தமியேனையாண்டருள் பொன்முகலிக்
கரைக்கேகல்லா நிழற்கீழமர்ந்தருள் காளத்தியே.

(பொ-ரை) பொன்முகரி நதிக்கரையிலும், கல்லாலமரத்தின் நிழலிலுமே சதா எழுந்தருளியிருக்கின்ற திருக்காளத்தி நாதரே! நான் இரவும் பகலும் ஆகாரத்தின் பொருட்டே திரிந்திளைத்துப் பின்னர் பெண்களுடைய முடைவீசும் சலமொழுகா நின்ற அரையினிடமாகப் பட்சம்வைத்துத் திரிகிறேன். ஆகையால் என்னை நீயே பாதுகாத்தருளவேண்டும். (எ-று) (௫)

நாறுங்குருதிச் சலதாரை தோட்புரை நாடொறுஞ்சீ
யூறுமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப் பந்தரங்கத்துள சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சுரனே.

(பொ - ரை) திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கின்ற காளத்தி நாதனே! நாற்றம் வீசுகின்ற இரத்தமானது ஒடிக்கொண்டேயிருக்கும் வாய்க்காலும், தோலால் புரைக்கப்பட்டதும். தினந்தோறும்

சியானது கசிந்து கொண்டேயிருக்கும் மலக்குழியும், காமத்துவார மும், ஒளித்து வைத்திருக்கப்பட்டதான புண்ணும், சதைப்பிளப் பானதுமான மறைவிடத்திலேயிருந்து அநுபவித்தற்குரிய சிற்றின் பத்தை விட்டுக் கரையேறத் தகுந்தபதவி அடியேனுக்கு அநுக்கிர கஞ் செய்வாய். (எ-று) (கூ)

## கைலாயம்.

கான்சாயும்வெள்ளி மலைக்கரசே சின் கழனம்பினை
னூன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய் கருவூரனுக்கா
மான்சாயச்செங்கை மழுவலஞ்சாய வளைந்தகொன்றைத்
தேன்சாயநல்ல திருமேனிசாய்த்த சிவக்கொழுந்தே.

(பொ-ரை) திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் தலைவனே மார்க்கண்டேயருக்காகத் தங்கள் திருக்கரங்களிலிருக்கின்ற மான் மழுக்கள் சாயவும், தரித்திருக்கிற தேனொடுகூடிய கொன்றை மலர் மாலை சாயவும், நல்ல திருவுடலைச் சாய்த்து (எமனை உதைத்தருள்த ள்ளிய) சிவபெருமானே! (நீ இங்ஙனம் செய்தமையால்) எனக்கும் வரவிருக்கின்ற பிறவியை நீக்கி என்னையுமாட்கொள்ள வேண்டும்.

இல்லந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துதின்று
பல்லுங்கரையற்று வெள்வாயுமாயொன்றிப் பற்றுமின்றிச்
செல்லும்பொருளு மிழந்துசுகானந்தத் தூக்கந்திலே
யல்லும்பகலு மிருப்பதென்றோ கயிலாயத்தானே.

(பொ-ரை) திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெரு மானே! நான் இல்லறத்தைவிட்டுத் துறவியாகிப் பசி நேரிட்டகா லத்தில் பிச்சையெடுத்துத்தின்று பற்கள்கறைநீங்க வெறும்வாயனாகி யாதொன்றினும் பற்றுதலில்லாமல் சொற்களையும் அதன் பொரு

ள்களையும் நீங்கிச் சுகாநந்தம் உதயமாகுதற்குரிய தூங்காமற்றூங்குதலான தூக்கத்திலே சதா இருந்து அநுபவிப்பது எந்தக்காலமோ அறியேன். (உ)

சினந்தனையற்றுப் பிரியமுந்தானற்றுச் செய்கையற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வனந்தலிலென் றிருப்பே னத்தனே கயிலாயத்தனே.

(பொ - ரை) பெருஞ்செல்வனே! திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானே! கோபமும், ஆசையும், செயலும், நினைப்பும், மறப்பும் (ஆகிய இவைகளெல்லாம்) நீங்கி ஒரு சிந்தனையும் இல்லாதவனாய்த் தனியேயிருந்து சுகோதயமாதற்குறிய பேராநந்தத் தூக்கத்திலே எக்காலத்தில் அமர்ந்திருப்பேன். (எ-று) (௩)

கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று க
தையாடுடுத்துநின் சன்னிதிக்கேவந்து சந்ததமு
மெய்யாரநிற்பணிந் துள்ளேயுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவென் றோலமிடுவதென் றோகயி லாயத்தானே.

(பொ-ரை) திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே? பிச்சையிடும் அன்னத்தை கையாற்பெற்றுப் புசித்துக் கரித்துணியைத்தைக்காமலே யுடுத்து உன்னுடைய திருக்கோயிலின்கண் வந்து எப்பொழுதும் உன்னைப் பணிந்து மயிர்க்கூச் செரியும்படி என்னுடைய தலைவனே! என்றுமுறையிட்டு என் எண்ணத்தைச் சொல்லிக்கொள்வது எப்பொழுதோ? (எ-று) (௪)

நீறார்த்தமேனியு ரோமஞ்சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க்கசிந்து கசிந்தேயுருகிநின் சீரடிக்கே

மாறுந்தியானமுற் றுனந்தமேற்கொண்டு மார்பிற்கண்ணீ
ராறுப்பெருகக்கிடப்பதென்று கயிலாயத்தனே.

(பொ-ரை) திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! திருநீற்றைத் தரித்திருக்கும் அடியேனுடைய உடம்பானது மயிர்க்கூச்செறியவும், மனமானது கசிந்து உருகவும் உன்னுடைய சிறந்த திருவடிகளிடத்தில் என்றும் நீங்காத தியானத்தை வைத்து இன்பமேலிட்டுக் கண்களினின்றும் வரும் ஆநந்த பாஷ்பமானது மார்பின் வழியாகத் தாரை தாரையாய் இழியவும் நான் பரவசமாகி இருப்பது எந்தக்காலமோ? (எ-று) (ரு)

செல்வரைப்பின்சென்று சங்கடம்பேசித் தினந்தினமும்
பல்லினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக் காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பே னத்தனேகயி லாயத்தனே.

(பொ-ரை) பேரானந்தச்செல்வனே! திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நானோ, பணமுள்ளவர்களைப் பின்தொடர்ந்து பலவகையான சங்கடங்களை முறையிட்டுச் சதா அவர்களோடு உபசாரமாகச் சிரித்துப் பரிதவிக்கின்றேன். (அங்ஙனம் அநுபவிக்குந் துன்பத்தை நீக்கி) சுகாநந்த வெல்லையில் போய் நான் ஏகாந்தமாய் ஆகக்கூடிய இடத்தின்கண் எப்பொழுது என்னுடைய துன்பங்களையெல்லாம் ஒழித்திருப்பேனோ? (எ-று)

ஏகாந்தம் என்றால் சிவத்தோடிரண்டறக்கலத்தல். இதனையே அத்துவைதமென்று பெரியோர் சொல்வர். (சா)

மந்திக்குருளையொத் தேனில்லைநாயேட் வழக்கறிந்து
சிந்திக்குஞ்சிந்தையை யானெண்செய்வேனெனைத் தீதகற்றி [ப்
புந்திப்பரிவிற் குறளையயேந்திய பூசையைப்போ
லெந்தைக்குறியவன் காணத்தனேகயி லாயத்தனே.

(பொ-ரை) சிவாநந்தச்செல்வனே! திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! நான் குரங்குக்குட்டியைப் போன்றவனல்லேன் ஆகையால் என்னுடைய வழக்கத்தை உணர்ந்தும் பலவியவகாரங்களை நினைக்கின்ற மனத்தை நான் என்னசெய்யக்கடவேன் ஒன்றுமில்லை, ஆகையால் நீயே என்னுடைய தீமைகளை நீக்கி மனவிருப்பத்தோடு தன்னுடைய குட்டியை யணைத்து ஏந்திக்கொள்ளும் பூனையைப்போல என்னை யணைத்து உன்னுடைய திருத்தொண்டிற் குரியவனாக்கிக் கொள்ளல்வேண்டும். (எ-று) (எ)

வருந்தேன்பிறந்து மிறந்துமயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற் புகுகின்றிலேன் புகழ்வாரிடத்தி
லிருந்தேனினியர் கூட்டம்விடேனிய லஞ்செழுத்தா
மருந்தேனருந்துவ னின்னருளாற்கயி லாயத்தனே.

(பொ-ரை) திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! உன்னுடைய திருவருளைமேற்கொண்டு இருப்பதால் நான் யாதொன்றாலும் வருத்தத்தை யடையேன், பிறப்புக்களுக்கு காரணமாயுள்ள ஐம்புலன் வழியிற்போகேன், நகரத்தையடையமாட்டேன், உன்னைச்சதா துதிசெய்கின்றவரிடத்திலிருந்தேன் இனிமேல் அவர்களுடைய கூட்டத்தைவிட்டுப் பிரியேன். (அன்றியும்) பஞ்சாட்சரமாகிய அரிய தேனைப் புசித்துக் கொண்டேயிருப்பேன். (எ-று)

இவையனைத்தும் உன்னுடைய திருவருட்டுணையாலே யாகையால் என்னை என்றும் அவ்வருளானது பிரியாதிருக்கும்படி கருணை செய்யவேண்டும் என்பது குறிப்பு. (அ)

## மதுரை.

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியே தினமேயலையக்

கடப்படுமோவற்பர் வாயிலிற்சென்று கண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்க நாதாசவுந்தர பாண்டியனே.

(பொ - ரை) சொக்கநாதக்கடவுளே! சோமசுந்தர பாண்டியனுய் வந்து அரசு செலுத்தினவனே உன்னுடைய திருவருள் மேலிட்டா லல்லாமல் இந்த உலகவாழ்வைவிடுவதற்குக்கூடுமோ? அங்ஙனம்விட் டாலும் மனமானது திடத்தை யடையுமோ? இல்லை. (ஆகையால்) நின்னுடைய அருளைப்பெற விரும்புகின்ற யான் தினமும் அலைந்து திரிந்து அற்பர்கள் வீட்டினிடமாகச் சென்று கண்ணீர் விட்டழுது துன்பத்தை யடையப்படுமோ? (ஆகையால்) இத்துன்பங்களை நீக்கி என்னையும் ஆட்கொள்ளவேண்டும் என்பது குறிப்பு. (க)

## பொது.

உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண் டருந்துணைக்கே
விடையேறுமீசர் திருநாமமுண்டிந்தமேதினியில் [றைக்கே.
வடகோடுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பி

(பொ-ரை) இந்த உலகத்தின்கண்ணே எனக்கு உடுக்கும் வஸ்திர மாகக் கோவணமிருக்கின்றது; நித்திரைசெய்யவோ வெளியில் திண ணையிருக்கின்றது; ஆகாரமாக இலை, காய் முதலியவைகள் இருக்கி ன்றன; குடிப்பதற்குத் தண்ணீருமிருக்கின்றது; அரிய இறையாயிரு ப்பதற்கு ரிஷபவாகனருடனை சிவபெருமானது பஞ்சாட்சரமிருக் கின்றது; (ஆகையால்) உயர்ந்த சந்திரனுக்கு வடதுமுனை உயர்ந்தா லென்னபயன்? தென்பக்க முனைசாய்ந்தாலென்ன நஷ்டம்? (ஒன்று மில்லை என்றபடி.)

* வடகோடுயர்தல் தென்கோடுசாய்தல் உலகக்ஷேமஹிம்சாகரமங் களைப் பற்றியதாகையால் அது எப்படி யிருந்தாலும் மேற்சொல்லிய

அங்கங்கள் என்று முள்ளனவாகையால் எனக்கு ஒரு குறைவுமில்லை என்பது கருத்து. (எ-று) (க)

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர்தந்த
வோடுநமக்குண்டு வற்றுதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாநதர நன்னெஞ்சமே
யீடுநமக்குச் சொலவேயொருவரு மிங்கில்லையே.

(பொ - ரை) நமக்கு வீடானது திருவாலங்காடாம், என்றும் அழியாத பாத்திரமாகவுள்ளது. சிவபெருமானால் கொடுக்கப்பட்ட ஓடாம்; செல்வம் மிகுந்த ஓர் நாடும் நமக்குள்ளது; அதுவன்றி, யார் எதைக்கேட்டாலும் அதைககொடுக்க நல்ல நெஞ்சமுமிருக்கிறது. ஆகையால் இவ்வுலகத்தின் கண்ணே நமக்கு ஒப்பானவர்கள் வேறொருவரும் இல்லை. (எ-று) (உ)

நாடிக்கொண்டீசரை நாட்டமுற்றுயிலை நாதரடி
தேடிக்கொண்டாடித்தெளிந்தாயிலை செகமாயைவந்து [றும்
மூடிக்கொணடோமென் றுங் காமாயுதங்கண்முனிந்தவென்
பீடிப்பையோநெஞ்சமே யுனைப்போலிலைப் பித்தர்களே.

(பொ - ரை) மனமே! சிவபெருமானை யடுத்துச் சேர்ந்தாயில்லை. அன்றி அவரை உள்ளபடி விசாரித்துத்தெளிந்ததுமில்லை (நீ இப்படியிருப்பதால்) செகமாயை வந்து மூடிக்கொண்டதேயென்றும், காமத்தைச் செலுத்தும்படியான கருவிகள் கோபித்தனவே யென்றும் துன்பப்படுத்துகின்றாய். ஆகையால் உன்னைப்போன்ற பித்தர்கள் ஒருவருமில்லை. (எ-று) (ங)

கையொன்றுசெய்ய விழியொன்றுநாடக்கருத்தொன்றெண
பொய்யொன்றுவஞ்சகநாவொன்று பேசப்புலால்கமழு [ண
மெய்யொன்றுசாரச் செவியொன்றுகேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள்வாய்வினை தீர்த்தவனே.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்


(பொ - ரை) அன்பர்க்குள்ள வினையைத்தீர்த்து அடிமைகொள் ளும் சிவபெருமானே! என்னுடையகையானது ஒன்றைச்செய்யவும், கண்கள் ஒன்றைப்பார்க்கவும், மனம் ஒன்றைஎண்ணவும், நாக்கு ஒன் றைப்பேசவும், தேகம் ஒன்றைப் பரிசிக்கவும், காதுகள் ஒன்றைக் கேட்கவும் செய்கின்ற என்னுடைய பூசையை நீ எப்படி ஏற்றுக் கொள்வாய். (எ-று)

அங்ஙனம் ஏற்றுக்கொள்ளாவிடினும் என்னை ரக்ஷிக்கவேண்டி யவன் நீயேயாவாய் என்பது குறிப்பு. (௪)

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்பச்சிலையா
லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச னிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோ கெடுவீரிந்த மானிடமே.

(பொ - ரை) இவ்வுலகத்தின்கண்ணுள்ள மனிதர்களே! தரிசிக்கக் கண்களும், சிந்திக்கக் கருத்தும், பாடுவதற்கு இசையும், அவனுடைய புகழைக்கேட்கக் காதுகளும், சாத்துதற்குப் பலவகையான பச்சி லைகளும் இருக்கின்றன வாகையால் இவைகளைப் பெற்று நமக்கு எதிரே வந்து காக்ஷிகொடுத் தருளும்பொருட்டு ஈசனென்னும் சிவ பெருமான் இருக்க. அப்படி அவனைப் பூஜியாமல் விட்டு நீங்கள் அருமையாக எடுத்த தேகத்தை மண்ணுக்கு இரையாக்கிக் கெடுக்கி ன்றீரே. ஈதென்னமோ? அறியேன். (எ-று) (௫)

சொல்லினுஞ்சொல்லின் முடிவினும்வேதச் சுருதியினு
மல்லினுமாசற்ற வாகாயந்தன்னினு மாய்ந்துவிட்டோ
ரில்லினுமன்ப ரிடத்திலுமீச னிருக்குமிடங்
கல்லினுஞ்செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே.

(பொ - ரை) எங்களுடைய நெற்றிக்கண்ணனாகிய சிவபெருமான் -ல்லினும், செம்பிலுமட்டோயிருப்பான் (அப்படியன்று) இவ்விரண்

டிலிருப்பதுந்தவிர, வாசகத்திலும், வாசகாதீதத்திலும், வேதங்களி லும், இருளிலும், வெளிச்சத்திலும், நிர்மலமான ஆகாசத்திலும், அ வனைத் தெளிந்தோருடைய வீட்டிலும், அடியார்களிடத்திலும் கூட விருப்பான் (ஏனென்றால்) சர்வவியாபகன் ஆகையால்,

இப்படிக்கல்லாமல் கல்லிலும் செம்பிலுமில்லையென்று பலரும் பொருள் கொள்கின்றனர் அப்படியிருப்பின் இவர்கள் "அங்கிங்கெ னாதபடி யெங்கும் பிரகாசமாய்" என்னும் ஆன்றோர் வாக்கியத்திற் கும், மார்க்கண்டேய ரிடத்திலும், பிரகலாதாழ்வானிடத்திலும் நிக ழ்ந்த ஒருவகை அதிசயத்திற்கும் வழிதெரிந்து கொள்வாராக.

அன்றி, இப்பட்டினத் தடிகள் பாரமார்த்திகத்தை யடைந்து உண்மைப் பொருளைத் தன்னிடத்தில் அறிந்தமையால் அங்ஙனம் கூறினர் என்னலுமாம். (௬)

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய்வினை தானொழிந்தா
றினைப்போதளவுநில் லாதுகண்டாய்சிவன் பாதநினை [ற்
நினைப்போரைமேவு நினையாரைநீங்கி நெறியினின்று
னைப்போலொருவருண்டோ மனமேயெனக் குற்றவரே.

(பொ - ரை) மனமே! இருவினைகளின் சம்பந்தமே தேகமாகை யால் அவ்வினைகள் ஒழியுமானால் தேகமானது கொஞ்சநேரமும் நில் லாது. (இப்படியிருப்பதால்) நீ சிவனுடைய திருவடிகளை நினைப்பா யாக அன்றியும், அவனை நினைப்பவர்களைச் சினேகி, நினையாதவர் களைச் சினேகியாதை. நான்சொன்ன இந்த வழியில் நீ நிற்பையா னால் எனக்குப்பொருந்திய துணையாவார் உன்னைப்போல் ஒருவரு மில்லை. (எ-று) (எ)

பட்டைக்கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென் மொய்குழலாள்கையில்முன்கொடுத்
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம் [துக்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன் மீண்டதுவே.



காதற்றவூசியைக்கண்ட சுவேதாரணியர் துறவியாய்ப் போதல்.

(பொ-ரை) சிவபெருமான் இவ்விடத்தில் எழுந்தருளிவந்து, பட்டு வஸ்திரத்தில் ஒருஊசியைவைத்துச் சுருட்டி என்மனைவியினிடத்தில் கொடுத்தது மாயாசத்தியால் உண்டாகும் காம மயக்கங்களை யெல்லாம் நீங்கிப் பிரிவதற்கோ? (எ-று) (அ)

சூதுற்றகொங்கையு மானார்கலவியுஞ் சூழ்பொருளும்
போதுற்றபூசலுக் சென்செயலாஞ்செய்த புண்ணியத்தாற்
றீதுற்றமன்னவன் சிந்தையினின்று தெளிவதற்கோ
காதற்றவூசியும் தந்துவிட்டானென்றன் கைதனிலே.

(பொ-ரை) யாதொருகுற்றமும் சாரப்பெறாத சிவபெருமான் சொக்கட்டான் காயைப்போன்ற கொங்கைமுதலிய உறுப்புகளை யுடைய பெண்கள் மயக்கத்தினின்று நீங்கிப் பிழைப்பதற் காகவோ காதில்லாதஊசியை என்னுடையகையில் கொடுத்துவிட்டான். (எ-று) (கூ)

வாதுற்றதிண்புய ரண்ணாமலையர் மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும் புகலுநெஞ்சேயிந்தப் பூதலத்திற்
றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்த திரவியமென்
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

(பொ - ரை) ஓ மனமே! உயிர் நீங்குங்கால் (அவ்வுயிருடன்கூடி) காதறுந்தஊசியும்வாராதாகையால், இவ்வுலகத்தில் பழிப்போடுகூடியசெல்வத்தால் பயனென்னை? சம்பாதித்து புதைத்துவைத்த செல்வத்தால் பயனென்னை? ஒன்றுமில்லை, ஆகையால் திருவண்ணாமலையில்எழுந்தருளியுள்ள அருணாசலக்கடவுளுடையதிருவடித்தாமரைகளை நல்லகாலத்திற்சென்று தரிசித்துத்தியானித்துத்துதிப்பாயாக (எ-று)

வேதத்தினுட்பொருண் மண்ணைசைமங்கையை விட்டுவிடப்
போதித்தவன்மொழி கேட்டிலையோசெய்த புண்ணியத்தா

வாதித்தன் சந்திரன் போலேவெளிச்சம தாம்பொழுது
காதற்றவூசியும் வாராதுகாணுங் கடைவழிக்கே.

(பொ - ரை) அவரவர்கள் செய்த புண்ணியவசத்தால், சூரியசந்திரர்களைப்போல சோதியை உயிர்அடையும்பொழுது (இறக்கும் பொழுது) காதறுந்த ஊசியும் வாராதாகையால் வேதங்களிலே விட்டுவிடும்படி சொல்லுகின்ற பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை, இவைகளைவிட்டு சிவசம்பந்தத்தை விரும்புவாயாக. (எ-று) (கக)

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாசன்மட்டே
யினமானசுற்ற மயானமட்டேவழிக் கேதுதுணை
தினையாமளவெள் ளளவாகினுமுன்பு செய்ததவந்
தனையாளவென்றும் பரலோகஞ்சித்திக்குஞ் சத்தியமே.

(பொ - ரை) பெண்சாதி, பிள்ளைகள், வாழ்வு, செல்வம், ஆகியஇவைகளெல்லாம் தம்முடைய வாசல் மட்டேயாம். சுற்றத்தாரெல்லாரும் சுடுகாட்டினளவேயாவார், (ஆகையால்) உயிரானதுபோகின்ற வழிக்குத்துணையாயுள்ளது எள்ளளவாகவே பூர்வத்தில்செய்த புண்ணியமாம். அப்புண்ணியத்தால் பரலோகம்கைகூடும், இதுசத்தியம், ஆகையால் மனமே! நீ அப்புண்ணியத்தைத் தேடுவாயாக. (எ-று) ()

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலமேல்வைத் தழுமைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப்புண்ணிய பாவமுமே

(பொ - ரை) மனமே! நாம்தேடியசெல்வமும், நாம்வாழ்ந்த வாழ்வும் வீட்டளவேயாம்; கண்களில் நீரொழுக அழுகின்ற மனைவியரும் வீதியளவேயாவார்; இரண்டுகைகளையும் தத்தம் தலைமேல்வைத்தூததேம்பித்தேம்பி யழுகின்றமைந்தர்களும் சுடுகாட்டளவேயாவர்., நம்மைப் பின்பற்றித் தொடர்ந்து வருவனவாயுள்ளபுண்ணியபாவங்களா

கிய இருவினைகளாம். ஆகையால் நீ பெண்பிள்ளைகளைத் துணையாக எண்ணாமல் சிவபெருமானையே சதாசிந்திக்கக் கடவை. (எ-று) (கங)

சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும்புடைவையொன் றில்லாதபோது பகலிரவா
யீயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவுபகன்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே.

(பொ-ரை) மேலேகட்டப்படுகின்ற புடவை யில்லாவிட்டால்சீயும், இரத்தமும், வழும்பும் இழிந்து பாய்ந்து பகலும் இரவும் ஈயும், எறும்பு புகுகின்ற பெண்கள் குறிக்கு ஆசைப்பட்டு அதனால்இறந்துபோகின்ற மனிதர்களை இறவாமல் வைக்க ஒரு மருந்தும் இல்லையே. ()

ஆனால் சிவபெருமான் என்கிற ஒரு மருந்து உண்டு என்பது கருத்து. (கச)

சீதப்பனிக்குண்டு சிக்கெனக்கந்தை தினமிரந்து
நீ துய்க்கச்சோறு மனைதோறுமுண்டு நினைவெழுந்தால்
வீதிக்குணல்ல விலைமாதருண்டிந்த மேதினியி
லேதுக்குநீசலித்தாய் மனமேயென்றும் புண்படவே.

(பொ-ரை) நெஞ்சமே! குளிர்ந்த பனியை நீக்கிக்கொள்ளக் கந்தையிருக்கின்றது; தினமும் பசித்தபோது அதை யடக்கிக்கொள்ள வீடுகள் தோறும் அன்னமிருக்கின்றது; காமத்தில் எண்ணம்வந்தால் தெருக்களில் வேசிகள் இருக்கின்றனர்; ஆகையால் இவ்வுலகின்கண் நீ துன்பப்படுவது எற்றுக்கு? (எ-று)

ஆகையால் இவைகளைச் சுவாதீனமாக வைக்காமல் சதாசிவபெருமானைத் துதிசெய்வாய் என்பது கருத்து. (கரு)

ஆருண்டுதோப்புண் டணிவீதியம்பலந் தானுமுண்டு
நீருண்டுகந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த

மாறுண்டலாவி மயங்குநெஞ்சேமனை தோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பின் சும்மாவிருக்கச் சுகமுமுண்டே.

(பொ - ரை) தினமும் மாறுபட்டுத்திரிந்து மயங்குகின்றமனமே! ஆறு, தோப்பு, அழகிய தெரு, அம்பலம் நீறு, கந்தை, கோவணம், ஆகிய இவைகளெல்லாம் இருக்கின்றன. ஆகையால்வீடுகள்தோறும் சென்று அன்னம் புசித்து நித்திரைசெய்து பின்னர் (சுகாநந்தவெள்ளத்தில் மூழ்கிச்) சும்மா இருந்தால் சுகமும் உண்டு. (எ-று) (கசு)

உடுக்கக்கவிக்கக் குளிர்காற்றுவெய்யி லொடுங்கிவந்தாற்
றடுக்கப்பழைய வொருவேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப்புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்குக் குறைவில்லையே.

(பொ-ரை) மனமே! உடுப்பதற்கும், போர்வை யிடுவதற்கும், குளிர் காற்றிலும், வெய்யிலிலும் வருந்திவந்தால் அவ்வருத்தத்தை நீக்கிக் கொள்வதற்கும் பழமையான ஒருவேட்டியிருக்கின்றது; படுப்பதற்காக உலகமெங்கும் திண்ணையிருக்கின்றது; பசியால் வருந்திவந்தவிடத்தில் பசியை நீக்கிக்கொள்ளும்பொருட்டு அன்னமளிக்கச்சிவன் இருக்கின்றான். ஆகையால் நமக்குஒருகுறைவுமில்லை. (எ-று)

மனமே ஆறுலும் அச்சிவபெருமானையே சதாதுதிசெய்யக் கடவை என்பது கருத்து. (கஎ)

மாடுண்டுகன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமினிக் கேண்மனமே
யோடுண்டுகந்தையுண்டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்டகண்ட னடியார்நமக்குத் துணையுமுண்டே.

(மொ-ரை) மாடு, கன்று, இருக்கின்றன மக்கள், இருக்கின்றார்கள் என்று சொல்லி சந்தோஷிக்கப்படுவன வெல்லாம் கேட்டைய



பததிரகிரியார் சேவகா படடினததாரை திருடனெனக கட்டிபபோதல.

டைகின்றன என்பதை நாம் நம்முடைய காதுகளால் கேட்டோம் ஆகையால் மனமே! இனிமேல் ஒன்று சொல்வேன் கேட்பாயாக. அதுஎன்னவென்றால், ஓடும் கந்தையும் இருக்கின்றன; துதிசெய்யப் பஞ்சாக்ஷரமிருக்கின்றது! கவசகுண்டலமணிந்த திருநீலகண்டருடைய அடியார்கள் நமக்குத்துணையாகவும் இருக்கின்றனர் ஆகையால் நமக்கு ஒருகுறைவுமில்லை. (எ-று) (௧௮)

மாத்தானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு
நீந்தார் தமக்கொரு நிட்டையுண்டோ நித்த னன்புகொண்டு
வேர்த்தாற்குளித்துப் பசித்தாற்புசித்து விழித்துயின்று
பார்த்தா லுலகத் தவர் போலிருப்பர் பற்றற்றவரே.

(பொ-ரை) (ஐந்து) அவஸ்தைகளையும், மாயையின் வியவகாரத்தையும் நீக்கிய பெரியோர்களுக்கு ஒருநிஷ்டைகூட வேண்டுமோ? வேண்டியதில்லை (ஏனென்றால்) அவர்கள் சிவபெருமானிடந்தில்பேரன்புபூண்டு வேர்த்தால் குளித்தும், பசித்தாற்புசித்து ', நித்திரைவந்தால் தூங்கியும் பார்க்கிறவர்களுக்கு உலகத்தார்கள் போலவே இருப்பார்களாகையால். (எ-று)

பெரியோர்கள் உலகத்தார்போல்பலகாரியங்கள் செய்தாலும்பற்றற்றிருப்பார்க ளாகையால் அவர்களுக்கு நிஷ்டை வேண்டாமென்றுகூறினர். (௧௯)

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம்பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி
யென்றென் றிருமனமே யுனக்கேவுப தேசமிதே.

(பொ-ரை) மனமே! ஒருபொருள்உண்டென்றும், அதுவேதெய்வமென்றும், அதுநித்தியவஸ்துவென்றும், நினைத்திருப்பாயாக, உயர்ந்த

திரவியங்களெல்லாம் நிலையில்லாதன வென்றும்இருப்பாயாக, பசித்து வந்தவர்கள் முகத்தைப்பார். நல்லதருமமும், நல்லவாசமும் நல்லதென்று இருப்பாயாக. நடுவுநிலைமையினின்று நீங்காமல் நமக்குவிதித்தபடியே யாகுமென்றும் இருப்பாயாக. இதுவே உனக்குபதேசமாகும் ஆகையால இவ்வுபதேசத்தைக் கைவிடாமல் மேற்கொண்டு நடந்து வருவாயானல் சிவகதிகைகூடும். (எ-று) (உம)

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிரு சுற்றத்தைவாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக் குபதேசமிதே.

(பொ - ரை) ஓமனமே! சற்குருவின் திருவடிகளை நம்பத்தகுந்த திருவருட்குறிப்பென்றும், நமதுதேகத்தைப் பொம்மலாட்டமென்றும், சுற்றத்தாரை சந்தையிற் கூட்டப்படும் கூட்டத்தாரென்றும், வாழ்க்கையைக் குடமானது கவிழ்தலால் ஓடப்படுகின்ற நீரோட்டமென்றும் இருப்பாயாக. இதுவே உனக்குப் பெரிய உபதேசமாகும்.

என்செயலாவ தியாதொன் றுமில்லை யினித்தெய்வமே
யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன் றுமில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்துமூண்டதுவே.

(பொ - ரை) நான், இந்தச்சரீரத்தை எடுத்தபின்னர் ஒருதீவினையையும் செய்ததில்லை, அப்படியிருந்தும், இப்பொழுது வந்துஎன்னை விழுங்கியிருக்கிற தீவினையானது பூர்வஜென்மத்தில்செய்ததாகவிருக்குமென்றுஎண்ணுகின்றேன். (ஆகையால் இதை நீக்கிக்கொள்ள) என்னுடையசெய்கையால் ஒன்றும்ஆகாது. (எனென்றால்) எல்லாம் உன்னுடைய செய்கைகளே யென்று தெரிந்து கொண்டேனாகையால். (எ-று)

எல்லாம் உன்னுடைய செய்கைகளே யாகையால் என்னுடைய தீவினைகளை நீக்கி யருள்பவனும் நீயே என்பது கருத்து. (௨௨)

திருவேடமாகித் தெருவிற்பயன்றனைத் தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றுனைப் பதம்பணிந்தேன்
கருவாருமேதக் கடற்கரைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லோ விங்ஙனேசிவனுற்றதுவே.

(பொ - ரை) மனமே! சந்நியாசி வேடங்கொண்டு தெருவழியாக என்னைத் தேடிக்கொண்டு வந்து பிச்சைகேட்ட ஒருவனுடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்தேன். அவனே! சிவபெருமானாவன். அவன் இங்ஙனம் வந்தது ஏனென்றால் ஜெனனசமுத்திரத்தில் விழும்படி எண்ணியிருந்த அடியேனைத் தன்னடிப் படுத்திக்கொள்ளற்பொருட்டல்லவோ? (எ-று) (௨௩)

விட்டேனுலகம் விரும்பேனிருவினை வீணருடன்
கிட்டேனவருரை கேட்டுமிரேன்மெய் கெடாதநிலை
தொட்டேன்சுகதுக்கமற்றுவிட்டேன்றொல்லைநான்மறைக்கு
மெட்டேனெனும்பர மென்னிடத்தேவந்திங் கெய்தியதே.

(பொ - ரை) மனமே! நான் உலகவாழ்க்கையை வெறுத்தேன், இருவினைகளைச் செய்துகொண்டு திரிகின்ற வீணர்களோடு சேரேன். அவர்கள் சொல்லும்சொற்களையும் கேளேன், என்றும் அழியாத உண்மைநிலையைச் சேர்ந்தேன், ஆகையால் சுகதுக்கங்களையும் நீக்கிக் கொண்டேன். (நான் இப்படி செய்தமையால்) வேதங்களாலும் அறியப்படாத பரமானது என்னிடத்தில் வந்து சேர்ந்துவிட்டது. (எ-று)

அட்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தையைந்தும்
விட்டேறிப்போன வெளிதனிலேவியப் பொன்றுகண்டேன்
வட்டாகிச்செம்மதிப் பாலூரலுண்டு மகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்ப மென்னைவிழுங்கி யிருக்கின்றதே.

(பொ-ரை) எட்டுவகையான போகங்களையும், ஆறுதாரங்களையும் ஐந்தவத்தைகளையும் கடந்துபோன வெட்டவெளியிலே சந்திரனது அமிர்தத்தை உண்டு மகிழ்ச்சி யடைந்திருக்கும்படி ஒருபெரிய இன்பமானது என்னை விழுங்கி மறைத்திருப்பதாகிய அதிசயம் ஒன்றைக் கண்டேன். ஆனால் அது இன்னவென்றுதெரியவில்லை. (எ-று) (உரு)

எரியெனக்கென்னும் புழுவோவெனக்கெனுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கெனுந் தான்புசிக்க
நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னு மிந்நாறுடலைப்
பிரியமுடன்வளர்த்தே னிதனாலென்ன பேறெனக்கே.

(பொ-ரை) நெருப்பும், புழுவும், மண்ணும், பருந்தும், நரியும், அற்பநாயும், தாங்கள் உண்ணுநிமித்தம் எனக்காகும், எனக்காகும் என்றுசொல்ல இருக்கின்ற இந்த நாற்றமடிக்கப்பட்ட உடம்பை நான் ரொம்பவும் அன்போடு வளர்த்தேன். இதனால் எனக்கு லாபம் என்னவோ? ஒன்றுமில்லை என்றபடி. (எ-று) (உசு)

அண்ணாறன்வீதியரசிருப்பாகு மணிபடையோர்
நண்ணொருநாலென்ப தாமவரேவலு நண்ணுமிவ்வூர்
துண்ணெனப்பசிக்கு மடைப்பள்ளியான சுகமுமெல்லா
மெண்ணிலிகால மவமேவிடுத்தன மெண்ணரிதே.

(பொ-ரை) சிவபெருமானுடைய வீதி அரசிருப்பாகும், அவருக்குச் சேனாபதிகள் முப்பத்தாறு பேர்களாம், அவர்களுடைய ஏவலையும் பெறும் இந்த ஊரானது. பசிக்கு மடைப்பள்ளியுமாகவிருக்க, இதை எல்லாம் விட்டு அநேககாலங்களாக வீணாக விருக்கின்றோமே? இது நினைப்பதற்கும் அசங்கதமாயிருக்கின்றதே. (எ-று) (உஎ)

என்பெற்றதாயாருமென்னைப் பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும் போவென்றுசொல்லிப் புலம்பிவிட்டார்.



படடணததார கழுமரம பறறசசெயதல அரசனை புனிதனுககுதல.

பெ-ர்பெற்றமைந்தரும் பின்வலம்வந்துகுடமுடைத்தா
ருன்பற்றொழியவொருபற்று மில்லை யுடையவனே.

(பொ - ரை) நாயினுங்கடைப்பட்ட என்னை அடிமையாக உடைய வனே! என்னைப் பெற்றதாயோ? என்னைப்பிணமென்று சொல்லித் தள்ளிவிட்டாள், மனைவியோ, பின்னிருந்து போய்வாவென்று சொல்லி அழுதுவிட்டாள், பிள்ளைகளோ வென்றால், பின்னர் வலமாகச சுற்றிவந்து குடமுடைத்தார்கள். ஆகையால், இனி உன்னுடைய சம்பந்தமேயொழிய வேறொரு சம்பந்தமுமில்லை, நீயே என்னை ஆட்கொண்டருளவேண்டும். (எ-று) (உ அ)

கறையற்றபல்லுங் கரித்துணியாடையுங் கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும்பொல்லாதவூணும்புறந்திண்ணையுந்
தறையிற்கிடப்பு மிரந்துண்ணுமோடுஞ் சகமறியக்
குறைவற்றசெல்வமென்றே கோலாமமறை கூப்பிடுமே.

(பொ - ரை) விளக்காத பல்லையும், கரித்துணியையும், பொறுமை நீங்கிய மனத்தையும், கொடிய உணவையும், வெளித்திண்ணையையும், தரையிற்படுத் துறங்குவதையும், பிச்சையெடுத்துத் தின்னுதற் குரித்தான ஓட்டையுமே, அழியாத செல்வங்களென்று வேதங்கள் முறையிடாநின்றன. (எ-று) (உகூ)

எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றாய்
முட்டித்ததும்பி முளைத்தோங்கு சோதியைமூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங் கக்கத்தில்வைப்பர் கருத்தில்வையார்
பட்டப்பகலை யிரவென் றுகூறிடும் பாதகரே.

(பொ-ரை) அஷ்டதிக்குகளிலும், பதினாறுகோணங்களிலும், எல்லாம் ஒரேபடித்தாய் இருந்து முளைத் துயர்ந்த தேஜோமயத்தை மூடர்களெல்லாம் கட்டிச்சுருட்டி கக்கத்தில் வைப்பாரே யொழிய தங்கடங்கள் மனத்தின்கண் வைத்துத் தியானிக்க மாட்டார்கள்.

(ஆகையால் இவர்கள்) நல்ல பகற்காலத்தை இருட்டு என்று சொல் லுதற்குரிய பாதகர் போன்றவர்களாவார். (எ-று) (௯0)

வாய்நாறு மூழுன் மயிர்சிக்குநாறிடு மையிடுங்கண்
பீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெறுங்குழிவாய்
சீநாறும்யோனி யழுநாறுமிந்தியச் சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க் கோவிங்கனேமனம் பற்றியதே.

(பொ - ரை) நாறுகின்ற வாயையும், மயிரையும், பீநாற்றம் வீசும் கண்களையும், பிணநாற்றம் வீசும் தேகத்தையும், சீநாற்றம் வீசும் பெரிய குழியையும் உடைய பெண்களுடைய மயக்கத்திலே என்னுடைய மனம் சேர்ந்துவிட்டதே. (எ-று)

ஐயோ! இதற்கு நான் என்னசெய்வேன் என்பதுகுறிப்பு. (௯க)

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண் டுரைப்படியே
செருக்கித்தரிக்கத் திருநீறுமுண்டு தெருகுப்பையிற்
றரிக்கக்கரித்துணி யாடையுமுண்டெந்தச் சாதியிலு
மிரக்கத்துணிந்துகொண்டேன்குறைவேதுமெனக்கில்லையே.

(பொ - ரை) மனமே! தியானஞ்செய்யப் பஞ்சாக்ஷரமிருக்கின்றது, வேதாகமப்படித் தரித்துக்கொள்ளத் திருநீறு இருக்கின்றது, அணிந்துகொள்வதற்கு தெருக்குப்பையில் கரித்துணி இருக்கின்றது, அன்றி, எந்தச்சாதியிலும்போய் ஏற்பதற்கும் துணிந்துவிட்டேன் இனி, எனக்கு ஒரு குறைவுமில்லை. (எ-று)

சிவபெருமான் சாதிசமயங்களைக் கடந்தவராகையால் அவனருள் வழிப்படுவோர்க்கும் அச்சாதி சமயப்பற்று இல்லை என்பார் "எந்தச் சாதியிலு மிரக்கத்துணிந்து கொண்டேன்" என்றார். (௯உ)

ஏதப்பட்டாயினி மேற்படும்பாட்டையி தென்றறிந்து
போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று புல்லறிவால்

வாதைப்படமாட்டாய்மட மாஞர்க்கலவி மயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமே யுனைப்போலில்லை பித்தருமே.

(பொ-ரை) ஓ மனமே! மிகுதியும் குற்றஞ்செய்தாய், பின்னர்படவிருக்கும் துன்பத்தையாராய்ந்து நல்லவர்களிடத்திற்போய் அறிவைப் பெற்றாயில்லை - அஞ்ஞானத்தால் வருத்தப்பட்டாய், பெண்கள் மாய்கையில் அகப்பட்டு அறிவீனனுனாய், (ஆகையால்) உன்னைப்போல் பித்தம் பிடித்தவர்களும் இருரர்? (எ-று) (ருரு)

சுரப்பற்றுவல்வினை சுற்றமுமற்றுத் தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர் கையிணக்கற்றுக் கவலையற்று
வரப்பற்றுநாதனை வாயாரவாழ்த்தி மனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோ பரமாபர மானந்தமே.

(பொ - ரை) என்னுடைய தலைவனே! சுரத்தலும், இருவினைகளும், சாதியும், செய்கைகளும், வஞ்சகமும், பெண்கள் மாய்கையும், துன்பமும் நீங்கிச் சிவபெருமானைத் துதிசெய்து மனமடங்கும்படி இருப்பதல்லவோ மேலான இன்பமானது. (எ-று)

அங்ஙனங் கைகூட்டி யாள்வோன் சிவபெருமானே என்பது குறிப்பு. (ருச)

பேய்போற்றிரிந்துபிணம்போற் கிடந்திட்டபிச்சையெல்லா
நாய்போலருந்தி நரிபோ லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போற்கருதித்தமர்போலனைவர்க்குந்தாழ்மைச்சொல்லி
சேய்போலிருப்பர்கண்டீ ருண்மைஞானந் தெளிந்தவரே.

(பொ-ரை) உலகத்தவர்களே! மெஞ்ஞானிகள் எப்படியிருப்பார்களென்றால் பசாசுபோல் திரிந்து சவத்தைப்போலிருந்து பிச்சைசோற்றைப் புசித்து நரிபோலலைந்து பெண்களை தாய்மார்போல் நினைத்து

மற்றுமுள்ளவர்களைத் தங்கள் சாதியர்கள்போல் நினைத்துப்பிரியமாக வார்த்தைசொல்லித்தாமொருபிள்ளைகள்போல் இருப்பார்கள். (எ-று)

விடக்கேபருந்தின் விருந்தேகமண்டல வீணனிட்ட
முடக்கேபுழுவந் துறையிடமேநல முற்றுயிலாச்
சடக்கேகருவிதளர்ந்துவிட்டார்பெற்ற தாயுந்தொடாத்
தொடக்கேயுனைச்சுமந்தே னின்னினேது சுகமெனக்கே.

(பொ - ரை) விடக்கே! பருந்தினுக்கு விருந்தாக உள்ளதே! பிரமனால் படைக்கப்பட்ட முடக்கே! புழுக்கள் வாசஞ்செய்யும் இடமே நன்மை இல்லாத சடக்கே! செத்தபிறகு பெற்றதாயும் தொடுவதற்கு அருவருக்கத்தக்க தேகமே! நான் இதுகாறும் உன்னைச் சுமந்தேனே உன்னால் எனக்கு என்னசுகம். (எ-று)

ஒன்றுமில்லை என்றபடி. (௬௬)

அழுதாற்பயனென்ன நொந்தார்பயனென்னவாவதில்லை
தொழுதார்பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதார்பயனென்ன னன்மையுந்தீமையும் பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோ சலியாதிரென் னேழைநெஞ்சே.

(பொ - ரை) என்னுடைய அறிவில்லாத மனமே! ஒருவருக்கு நன்மையும், தீமையும், பிரமனால் எழுதப்படாதபடி வந்து கூடுமோ? கூடாது. ஆகையால் அழுதாலும், வருந்தினாலும், தொழுதாலும், ஒருவர் சும்பிடி உன்னை வைத பழுதினாலும் ஒருபயனுமில்லை. (எ-று)

எல்லாம் விதிவசமாகையால் வருந்துவதிற் பயனில்லை என்பது கருத்து. (௬௭)

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறந்தின்னையிற்
சாரீரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகநகைக்க
வேரீருமக்கவர் தாமேதருவ ரிணையடியே.

(பொ-ரை) ஊரிலுள்ளவர்களே! உங்களுக்கு ஒன்று உபதேசிக்கின்றேன் கேளுங்கள். (அது என்ன வென்றால்) நீங்கள் எப்படியாயினும் தேகத்தை விட்டுவிடப்போகிறீர்கள், ஆகையால் சமணர்களைக் கழுவிலிடப்பட்ட திருநீற்றை அணிந்து, சுற்றத்தாரை நீக்கிச் சிவபெருமானைச் சரணாகதியடையுங்கள். அப்படி செய்வீராகில், அவரே மனமிரங்கித் தம்முடைய உபயசரணங்களைக் கொடுத்தடிமை கொள்வார்.

சமணைக் கழுவேற்றியவர் - சம்பந்தர். அவர் நீற்றைக்கொண்டு ஏற்றுவித்ததினால் அதின் மகிமைதோன்ற இங்ஙனம் கூறினார். (ந-அ)

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லை மாமறைநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா
யாற்றிற்கிடந்துந் துறையறியாம லலைகின்றதே.

(பொ - ரை) ஓ மனமே! நீ திருநீற்றைத் தரிப்பதினால் ஒருபிரயோசனமுமில்லை. அன்றி தீர்த்தமாடினும் ஒன்றுமில்லை. (ஏனென்றால்) இச்சென்மத்தை நீக்கிச் சிவசம்பந்தமான ஜென்மத்தையடைய வகையைத் தெரிந்தாயில்லை. ஆகையால் (மறைகளில்) வேதங்களில் முடிவு செய்திருக்கிற ஏழுகோடி மந்திரங்களை யுணர்ந்தும் அவைகளின் வழிதெரியாமல் தவிக்கின்றனையே, இது, (ஒரு ஊருக்குப்போகும்) வழியிலே நின்றும் வழி இதுவோ, எதுவோ? என்று தவிக்கின்ற விதத்தவனானையே? இதுவென்ன விபரீதம். (எ-று) (சய)

ஓங்காரமாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து
பாங்காய்முளைத்த பயனறிந்தாற்பதி னாலுலகு
நீங்காமனீங்கி நிறையாநிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க் கெட்டாக்கனிவந் தமர்ந்திடுமே.

(பொ - ரை) யாதொரு பிரணவமாயிருந்து விளங்கும் ஒரு மந்திராக்ஷரப்பொருளில் ஒருமூலவிதைவந்து பக்குவமாய் முளைத்திருக்கும் வகையைத் தெரிந்து கொண்டால், ஆங்காரத்தைப் பெரும்பேருக வைத்திருக்கும் உலகர்களுக்கு அறியப்படாமல் சர்வவியாபகமாயிருக்கின்ற (ஓர் சிவம் என்னும்) பழமானது வந்து சேர்ந்துவிடும். (எ-று)

விதியார்படைப்பு மரியாரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்புநம் பாலணுகாது பரானந்தமே
கதியாகக்கொண்டுமற் றெல்லாந்துயிலிற் கனவெனநீ
மதியா திருமனமே யிதுகாணன் மருந்துனக்கே.

(பொ-ரை) மனமே! பராநந்தத்தையே நீ அடைதற்குரிய மோக்ஷமாகக்கொண்டு மற்றவைகளையெல்லாம் கனவிற்கண்ட காட்சியாக எண்ணி அவைகளை மதியாமல் இருப்பாயாக, அப்படியிருந்தால் பிரம, விஷ்ணு, ருத்திரர்களால் செய்யப்படும் சிருஷ்டி, திதி, சங்காரங்கள், நம்மிடத்தில் வந்துசேரா. ஆகையால் இதுவே உனக்கு நல்ல மருந்தாகும். (எ-று) (சஉ)

நாய்க்குண்டு தொண்டு நமக்குண்டுபிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திர பஞ்சாட்சரமதியாமல்வரும்
பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின் றபிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகன் றன்னருளேக் கங்களேக்குதற்கே

(பொ - ரை) மனமே! நாய்களுக்கோ தொண்டிருக்கின்றது; நமக்கோ பிச்சை யிருக்கின்றது, வாய்க்கோ எமனை வெல்லுதற்குரிய மந்திர பஞ்சாக்ஷரமிருக்கின்றது, பேய்க்கோ திருநீறு இருக்கின்றது ஜென்மசாகரமான நோய்க்கோ எம்பெருமானுடைய திருவருளேக் கம் இருக்கின்றது, இப்படியிருப்பதினுல் நமக்கென்னகுறை. (சந)

நேமங்கணிட்டைகள் வேதங்களாகமநீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்திர யோகநிலை

நாமங்கள் சந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே.

(பொ - ரை) நியமம், நிட்டை, வேதம், ஆகமம் நீதிநெறி, ஓமம், தர்ப்பணம், சந்தியாவந்தனம், செபம், மந்திரம், யோகம், அர்ச்சனை நாமங்கள், சந்தனம், திருநீறு, இவைகளுடன் சாமங்கடோறும் இவர்கள் செய்யும் சிவபூசை பாவனை மாத்திரமே. (எ-று) (சச)

நானெத்தனை புத்தி சொன்னாலுங் கேட்டிலை நன்னெஞ்சமே
யேனிப்படிக்கெட் டுழலுகின்றாயினி யேதுமிலா
வானத்தின் மீனுக்கு வன்றூண்டிலிட்ட வகையதுபோற்
போனத்தைமீள நினைக்கின்றனையென்ன புத்தியிதே.

(பொ - ரை) மனமே! நான் எவ்வளவு புத்தி சொன்னாலும் கேட்கின்றாயில்லை. ஏன் இப்படி திரிகின்றனை; ஆகாயத்திலுள்ள மீனுக்கு தூண்டில்போட்ட விதத்தைப்போல போன பொருளை மீட்டும் நினைக்கின்றனை, இது என்ன புத்தி. (எ-று) (சரு)

அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கின்ற வித்தையிட்டுப்
புன்செய்க்களைபறித்தேன் வளர்த்தேன்சிவ போகத்தையே

(பொ - ரை) பஞ்சாக்ஷரமென்னுங் கோடரியினால் ஐம்புலன்களாகிய கட்டையை அடியோடு வெட்டிச் சீர்திருத்திச் சதாசிவம் என்கிற விதையைப்போட்டுக் களைகளைந்து சிவபோகமென்னும் பயிரை வளர்த்தேன். (ஆனால்) அப்போகத்தை நான் அநுபவிக்கும் திறம் வருமோ வாராதோ அறியேன். (எ-று) (சசு)

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழ்ந்திடுநா
ணீயாருநானாரெனப்பகர்வாரந்த நேரத்திலே

நோயாரும்வந்து குடிகொள்வரேகொண்ட நோயுமொரு
பாயாருநீயுமல்லாற் பின்னையேதுநட் பாமுடலே.

(பொ - ரை) ஓதேகமே! தாய், சுற்றத்தார், மனைவி இவர்கள் கை விட்டு விடுகின்ற நாளில், நீயார் நான் ஆர், என்று சொல்லிக்கொள்ளுவார்கள். அந்தச்சமயத்தில் மரணநோயானது வந்து குடிகொள்ளும், அக்காலத்தில் அந்தநோயும், ஒருபாயும், நீயுமேயல்லாமல் ஒரு சிநேகர்கள் ஒருவருமில்லை. ஆகையால் சிவபெருமான் திருவடிகளை சதா துதி செய்வாய். (எ-று) (சஎ)

ஆயும்பொழுது மயிர்க்கால்கடோறு மருங்கிருமி
தோயுமலக்குட்டை யாகியகாயத்தைச் சுட்டுவிட்டாற்
பேயுநடன மிடுங்கடமாமென்று பேசுவதை
நீயுமறிந்திலையோ பொருடேட நினைந்தனையே.

(பொ - ரை) விசாரிக்குங்காலத்தில் மயிர்க்கால்களின் வழியெல்லாம் கிருமிகள் நிறைந்திருக்கும் மலக்குட்டையாகிய இந்தத்தேகத்தைச் சுட்டபிறகு பேய்கள் கூடி நடிக்கின்ற இடமாகுமென்று உலகத்தார் பேசுவதை, ஓமனமே! நீயறிந்திலைபோலும். (ஏனெனில், இன்னும் பொருள்தேட நினைந்தாயாகையால். (எ-று) (சஅ)

பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்லநற் காட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச்
சாணும்வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே.

(பொ-ரை) நான் படுகின்ற துன்பம் அணியும் ஆபரணம், பொன், பூமி, மங்கையர், காட்சி, சிவன் திருவடி இவைகளுக்கெல்லாம் என்னுடைய வயிறு வளர்க்கும் நிமித்தமேயாம். (எ-று) (சகூ)

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறையாததீர்த்த மினிமுடிந்து

கட்டாதலிங்கங் கருகாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோ குருநாதன் மொழிந்ததுவே.

(பொ - ரை) என்னுடைய குருசுவாமி உபதேசித்த மொழியானது வெட்டாத சக்கரமும், பேசப்படாத மந்திரமும், வேறெவர்களாலும் எட்டப்படாத புஷ்பமும், இறைக்கப்படாத தீர்த்தமும், முடிபோட்டு கட்டி வைக்காத லிங்கமும் நினைக்காத மனமும் நினைப்பினுள் தட்டுப் படாத பூசையுமல்லவோ? (எ-று)

ஆனால், அந்தப்பூசையை செய்வதற்குப் பாத்திரனாவது என்றோ? என்பது கருத்து. (ருய)

எருமுட்டைபிட்கி னுதிர்ந்திடுஞ் செல்லுக் கெவரழுவார்
கருமுட்டைபுக்குக் கழலகன்றீர்கள துக்கமதாய்ப்
பெருமுட்டுப்பட்டவர் போலழும்பேதையிர் பேத்துகிறீ
ரொருமுட்டும்வீட்டு மரணமென்றைக்கு போதுமினே.

(பொ - ரை) உலகத்தவர்களே! எருமுட்டையைப்பிட்டால் உதிருகின்ற செல்லுகளுக்காக அழுகின்றவர்கள் ஒருவருமில்லை. ஜெனனத்தில் புகுந்து அவன் திருவடியை நீங்கினீர்கள் மிகுந்ததுக்கமுடன்குற்றத்தை யடைந்தவர்கள்போல் அழுகின்ற அறிவிலிகாள்! பிரத்துகிறீர் எப்படிப்பட்ட துன்பத்தையும் நீக்குகின்ற சிவபெருமானுடைய திருவ்பெயர்களை சதா துதி செய்யுங்கள். (எ-று) (ருக)

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ்செந்தீ
யையாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செலவெட்டவெறும்
பொய்யாய்பழங்கதையாய்க்கனவாய் மெல்லப்போனதுவே.

(பொ - ரை) செவந்த திருமேனியையுடைய தலைவனே! மனைவியும், பிள்ளைகளும், வாழ்வும், வீடும், உன்னுடைய மாயாசத்தியின் உருவெளித் தோற்றமேயாகும், ஆனால், அவை, உலகத்தில் மெய்யெ

ன்று சொல்லும்படி யிருந்து நாளேற நாளேற பொய்யாகிக் கனவிற் கண்டகாட்சிபோலாயின. (எ-று) (௫௨)

ஆயாய்பலகலை யாய்ந்திடுந்துய வருந்தவர்பாற்
போயாகிலுமுண்மை தெரிகிறதாயில்லை பூதலத்தில்
வேயார்ந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின் றனைமனமேயென்ன பித்துனக்கே.

(பொ-ரை) மனமே! பலநூல்களையும் ஆராய்ச்சி செய்யமாட்டாய. அங்ஙனம் ஆராய்ச்சி செய்தவரிடத்தில் போயாகிலும் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளமாட்டாய், உலகத்தில் பெண்கள் மாயையில் சிக்கியழுகின்றனை அதனால் பேய்போலவும் விழிக்கின்றனை இப்படிப்பட்ட பயித்தியம் உன்னைப் பிடிப்பதற்குக் காரணம் என்னை. (எ-று)

அடியாருறவு மரன்பூசைநேசமு மன்புமன்றிப்
படிமீதில்வேறு பயனுளதோபங் கயன்வகுத்த
குடியானசுற்றமுந் தாரமும்வாழ்வுங் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்திலரே.

(பொ-ரை) பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட சுற்றத்தாரும், மனைவியும், வாழ்வும், குயவனால் செய்யப்பட்ட பாத்திரங்கள் தடியினால் அடிப்பட்டவைபோலாகும், ஆகையால், உலகத்தின்கண், அடியார்கள் நட்பும், சிவபூசையும், பக்தியும், அல்லாமல் வேறு பிரயோசனம் இருக்கின்றதா? இல்லை. (எ-று) (௫௩)

ஆங்காரப்பொக்கிஷங் கோபக்களஞ்சிய மாணவத்தா
னீங்காவரண்மனை பொய்வைத்த கூடம்வின் னீடிவளர்
தேங்கார் பெருமதிற் காமவிலாசமித் தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம் பலிப்பதுவே.

(பொ-ரை) ஆங்காரப் பொக்கிஷமாகவும், கோபக்களஞ்சியமாகவும், ஆணவம் நீங்காத அரண்மனையாகவும், பொய்யை நிறைத்துவை

த்த கூடமாகவும் காமவிலாசமாகவுமுள்ள இத்தேகமானது கந்தலாகையால், நான் அத்தேகத்திலிருந்து உன்னைப்பணிந்து ஞானம்பலிக்கப்பெறுவது எப்படி. (எ-று) (௫௫)

ஒழியாப்பிரவி யெடுத்தேங்கியேங்கி யுழன்றநெஞ்சே
யழியாப்பதவிக்கவுடதங்கேட்டிய நாதியனை
மழுமான்கரத்தனை மால்விடையானை மனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்தி விம்மியழுநன்மை வேண்டுமென்றே.

(பொ-ரை) நீங்காத ஜென்மத்தை யெடுத்து ஏங்கித்திரிகின்ற மனமே! அழியாத பதவியை யடைவதற் கொருமருந்துகேள். அது என்னவென்றால் அநாதியாயுள்ளவனை, மழு, மான், தரித்தவனை பெரிய ரிஷபவாகனனை மனதில் தியானித்து கணகளில் ஆநந்தபாஷ்பம் பொழிந்து விம்மி, விம்மி, நன்மை வேண்டுமென்று அழுவாயாக. ()

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங் காஞ்சிரங்கா
யாக்குவாரா ரருந்துவாரா ரதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச் செப்புமினே.

(பொ-ரை) உலகத்தவர்களே! நாயினுக்கு ஒருகர்ப்பமும், அதற்குத்தக்கமருத்தவமும் இருக்கின்றதா? பேய்க்கு ஞானம்பிடிக்குமோ? எட்டிக்காயை ஆக்குபவர்கள் யார்? அதைத் தின்பவர்கள் யார்? அது போல இந்த உடம்பானது அக்கினிக்கு இரையாய் விடுவதல்லாமல் வேறு எதற்கு உதவுகின்றது. இதைச்சொல்லுங்கள். (எ-று) (௫௭)

கச்சிற்கிடக்குங்கனதனத்திற்கடைக்கண்கள்பட்டே
யிச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சே யிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடி யுண்ணாமுலைபங்கர்பாதத்திலே
தைச்சுக்கிடமனமே யொருகாலுந் தவறில்லையே.

(பொ-ரை) கசகிட்டுக் கட்டியிருக்கின்ற முலைகளைப்பார்த்து ஆசைப்பட்டிருக்கின்ற மனமே! (அதை விட்டு) பார்வதாதேவியை இடது பாகத்தில் வைத்திருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளில் பொருந்தியிருப்பாயானால் உனக்கு ஒன்றும் கெடுதியில்லை. (எ-று)

மானார்விழியைக் கடந்தேறிவந்தனன்வாழ்குருவுங்
கோனாகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந் தாலுதற்பேறிதுபொய்யன்றுகா
ணானாலுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே.

(பொ-ரை) பெண்கள் மாய்கையை விட்டு நீங்கி வந்தேன், குருவும் என்னை ஆண்டுகொண்டருளினன், ஒருதப்புமில்லை, இவையெல்லாம் மெய்யே பொய்யல்ல, எப்படியிருந்தாலும் இந்த உடம்போடு கூடியிருப்பது மாத்திரம் அவருக்கத் தக்கதேயாம். (எ-று) (ருக)

சற்றாகிலுந்தனைத்தானறியாய்தன்னை யாய்ந்தவரை
யுற்றாகிலுமுரைக்கப்பொருந்தாயுனக் கானநிலை
பற்றாய்குருவைப்பணியாய்பரத்தையர் பாலிற்சென்றென்
பெற்றாய்மடநெஞ்சமே யுனைப்போலில்லை பித்தனுமே.

(பொ-ரை) கொஞ்சமானாலும் தன்னைத் தானறிய மாட்டாய். அப்படி யறிந்தவர்களையும் சேர்ந்து அவர்களிடத்தில் ஒன்றும் தெரிந்து கொள்ளமாட்டாய். நீயடையவேண்டிய உண்மைநிலையைப் பிடிக்க மாட்டாய். உன்னுடைய ஆசாரிய சாமியை நமஸ்காரஞ் செய்யமாட்டாய். பெண்களிடத்தில் போய் என்னசுகத்தை யடைந்தாய் ஒன்றுமில்லை. ஆகையால் மனமே! பயித்தியர்களும் உன்னைப் போலிருக்க மாட்டார்கள். (எ-று) (சுய)

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தையறப்
புளியிட்டசெம்பையும் போற்றுகிலேனுயர்பொன்னெனவே

யொளியிட்டதாளிரண் டுள்ளேயிருந்தவ துண்மையென்று
வெளியிட்டடைத்துவைத்தே னினிமேலொன்றும் வேண்டிலனே.

(பொ-ரை) (இதுகாறும் நான் துதித்து வந்த) சிலாரூபத்தையும் சாந்தையும், செப்புச்சிலையையும், நான் இனி துதிசெய்யேன். (ஏனென்றால்) (என்னுடைய குருசுவாமி உபதேசித்த) தேஜோமயமாகிய இரண்டு திருவடிகளையும் மனத்தினுள்ளே வைப்பதுவே உண்மையாமென்று வெளிப்படுத்தி அவற்றை அடைத்து வைத்தேன். ஆகையால் நான் ஒன்றையும் விரும்பமாட்டேன். (எ-று)

என்னுடைய வியவகாரதிசையில் துதித்து வந்தேன் இப்பொழுது குரு உபதேசத்தால் ஞானங்கள்கூடவே இனிச்செய்யேனென்பது கருத்து. (சுக)

கல்லாலெறியுண்டுங் காலாலுதையுண்டுங் காளைகையில்
வில்லாலடியுண்டு முன்னாள் விடமுண்டு மேலளித்துப்
பல்லாற்புரமெரி யேகம்பவாணர் பதாம்புயத்தின்
சொல்லார்செவினியிற் கேளாதிருந்தென் றொல்வினையே.

(பொ-ரை) ஒருவன் கல்லாலெறிந்ததையும், ஒருவன் காலால் உதைத்ததையும், ஒருவன் வில்லால் அடித்ததையும் ஏற்றுக்கொண்டு, பூர்வத்தில் திருப்பாற்கடலிற்றோன்றிய ஆலகாலவிஷத்தைப் புசித்துத் திரிபுரத்தையும் எரித்தருளிய ஏகாம்பரக்கடவுளுடைய திருவடித்தாமரைகளை நமஸ்காரஞ்செய்யும்போது துதிசெய்யும் சொற்கள் செவியிற் கேளாததற்குக் காரணம் பூர்வவினையேயாகும். (எ-று) ()

ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்குந்
திருநாளுந்தீர்த்தமும் வேறுளதோவத் திசைமுகனால்
வருநாளில்வந்திடு மந்தக்கண்ணாளன் வகுப்பொழியக்
குருநாதனிணைகண்டீர் பின்னையேதிக் குவலயத்தே.

(பொ-ரை) நான்குவகைச் சாதியாருக்கும், தேவர்களுக்கும் திருவி ழாவும் தீர்த்தமாடுதலும் வேறுமோ? இல்லை ஏனென்றால், பிரமனால் வருத்த நாளில் வருவது வரும் அவனால் தீர்மானித்த வருப்பொழிந் தால் நம்முடைய குருசுவாமியால் வருவது வரும், இவ்விரண்டும் த விர இவ்வுலகத்தில் வேறு என்ன இருக்கின்றது. (எ-று) (கூ௨)

## விருத்தம்.

பாரோநீரோதீயோ வளியோ படர்வானோ
ஆரோநானென் றாய்வுறுகின்றே னறிவில்லேன்
பாரோநீரோ தீயோவளியோ படர்வானோ
ஆரோநானென் றாய்வுறுகின்ற வதுநீயே.

(பொ - ரை) அறிவில்லாதவனாகிய நான், பூமியோ? அப்போ? தே யுவோ! வாயுவோ! ஆகாயமோ! என்று ஆராய்கின்றேன், அப்படியா ராய்கின்ற அதுவே நீயாயிருக்கின்றாய். (எ-று)

அவனனம் எல்லாவற்றிலும் கலந்திருப்பதுபோலிருந்து என்னை யும் அடிமைகொள்ளவேண்டும் என்பது குறிப்பு. (எ-று) (கூச)

நாப்பிளக்கப்பொய்யுரைத்து நன்னிதியந்தேடி
நலமொன்றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கவருமேமைப் புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத்தோல்மரத்துளையிற் காலுழைத்துக்கொ
ஆப்பதனையசைத்துவிட்டகுரங்கதனைப்போல[ண்டீர்
வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே.

(பொ-ரை) பலவகையான பொய்வார்த்தைகளைப்பேசிச் செல்வத்தைச சம்பாதித்துப் பெண்களைக்கூடிப் புற்றிலிருந்து வெளிப்படும் ஈசல்போலப் பிள்ளைகளைப் பெறுகின்றீர்களேயொழிய, அப்பிள்ளைகளைக் காப்பாற்றவும் வகையறியமாட்டீர்கள், அவர்களைக் கைவிடவு மாட்டீர்கள். ஒரு மரப்பொந்தில் காலை நுழைத்துக் கொண்டவர்களானீர்கள், அப்பொழுது குரங்கானது வந்து அந்த ஆப்பை அசைத்து அழுந்தி விட்டதுபோல அகப்பட்டுக்கொண்டீர், அதிலிருந்து வருந்தும்படி அகப்பட்டுக்கொண்டீர், இனியேனும் அவைகளை விட்டுச் சிவபெருமானைத் துதிசெய்யக்கடவீர். (எ-று) (௩௰)

மந்தனை தயிருண்டானு மலர்மிசையவனுந்தேடிப்
பிந்தனைகொண்டபோதும் வெளிப்படாப் பிரானேயிங்குச்
செய்த்தனைகூறவந்த சேந்தனைவேந்தனிட்ட
கைத்தளைநீக்கியென்முன் காட்டுவெண்காட்டுளானே.

(பொ-ரை) விஷ்ணுவும், பிரமனும் தேடிக்காணாமல் மயங்கின்ற போதும் வெளிவாராத பெருமானே: திருவெண்காட்டில் எழுந்தருளியிருக்கும் தலைவனே! சேந்தனுக்கு அரசன் இட்டுள்ள கைவிலங்கை நீக்கி அவனை எனக்கு முன்னே கொண்டு வந்து காட்டவேண்டும். (எ-று) (௩௧)

## தாயாருக்குத்
## தகநகிரியை செய்கையிற் பாடிய
## வெண்பா.

ஐயிரண்டு திங்களாவங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச்—செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி.

(பொ-ரை) பத்துமாதமாகத் (தன்னுடைய) உடல் முழுதும்நோக்காடோடு (சுமந்திருந்து பத்தாமாதத்தில் என்னைப்பெற்று (அங்குள்ளவர்) ஆண்பிள்ளை யென்று சொன்னபோதே (முன்னிருந்தநோக்காடு நீங்கி) ஆசையோடு எடுத்து இரண்டு கைகளையும் முதுகில் வைத்துத்தாங்கிக் கனகம்போன்றமுலைப்பால் கொடுத்து (என்னைக் காப்பாற்றிவிட்ட) தாயாரை, நான் இனிமேல் எந்தப்பிறப்பில் பார்ப்பேனோ? (எ-று) (க)

முந்தித்தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனை யாதரித்துத்—தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
வெரியத் தழன்மூட்டுவேன்.

(பொ-ரை) முன்னர் கர்ப்பத்தை வேண்டித் தவஞ்செய்து அந்தத் தவங்காரணமாகக் கர்ப்பந்தங்க (அது தங்கிய) முந்நூறுநாட்களாகிய பத்துமாதம் வரைக்கும் சுமந்து, இரவும் பகலும் எந்நேரமும் சிவபெருமானைத் துதிசெய்து, வயிறு சரியும்படி தாங்கிக் கொண்டிருந்து (அந்த நாட்கள் பூர்த்தியான பிறகு) என்னைப்பெற்ற தாயாருக்கோ நான் எரியும்படி தீமூட்டுவேன்.

அருமையான தவங்களைச்செய்து முந்நூறு நாட்கள் கஷ்டப்பட்டு பெற்ற தாயாருக்கோ இப்பொழுது தீமூட்டும்படி ஆயிற்றே என்பது கருத்து. (உ)

வட்டிலிலுந் தொட்டிலு மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்.

(பொ - ரை) சிறிய படுக்கையிலும், தொட்டிலிலும், மார்பின்மேலும், தோளின்மேலும், கட்டிலிலும், என்னைத்தூங்கப்பண்ணி என்

மேல் ஆசையோடு காவலாக வைத்திருந்து பாதுகாத்துச் சிறப்புப் பாராட்டின தாயாருக்கோ! நான் விறகுவைத்துத் தீமூட்டுவேன்.

என்னைப் பலவகையாகச் சிறப்புச்செய்து காப்பாற்றிய தாயாருக்கே விறகிட்டுத் தீமூட்டும்படி ஆயிற்றே என்பது கருத்து. (௩)

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே—யந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்.

(பொ - ரை) (என்னைப் பெரும்பொழுது) சரீரம் முழுதும் நோக்காடடைந்து சுமந்திருந்து, பெற்றவுடன் நோகாதபடி என்னை எடுத்து முலைப்பால் கொடுத்து வளர்த்து, இரவும் பகலும் ஓயாமல் கையிலேயே எடுத்து வைத்திருந்து காப்பாற்றிவிட்ட தாயாருக்கோ (அவள்) உடம்பில் தீயைமூட்டுவேன். (எ-று)

என்னைக் காப்பாற்றிய உடம்பிலேயே நான் தீயைமூட்டுவது மிகவும் வருத்தத்தைக் கொடுக்கின்றது என்பது கருத்து. (௪)

அரிசியோ நானிடுவே னாத்தா னடக்கு
வரிசையிட்டுப் பார்த்துமகிழாம—லுருசியுள்ள
தேனே யமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே யெனவழைத்த வாய்க்கு.

(பொ - ரை) ருசியோடு கூடியதேனே! எனவும், அமிர்தமே! எனவும், மிகுந்த செல்வத்தையுடைய பூமானே! எனவும், என்னை அழைத்துச் செல்வம் பாராட்டின என்னுடைய தாயினுடைய வாய்க்கு வரிசைசெய்து பார்த்து (அதனால்) சந்தோஷத்தை யடையாமல் என்னால் இடப்படுவது அரிசிதானோ?

*என்னைப் பலவகைப்பட்ட உபசாரவார்த்தைகளால் அழைத்து முத்தமிட்ட வாய்க்கே அரிசியிடும்படி ஆயிற்றே என்பது கருத்து. ()

அள்ளியிடுவதரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல்—மெள்ள
முகமேன் முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனே யெனவழைத்த வாய்க்கு.

(பொ-ரை) என்னுடைய முகத்தின்மேல் தன்னுடைய முகத்தை மெதுவாக வைத்து முத்தமிட்டு, என்மகனே! என்று அழைத்தவாய்க்கு, நான் அள்ளிவைப்பது அரிசிதானே (அல்லாமல்) தாயார் தலையின்மேல் (கொஞ்சமும்) கூசுதலில்லாமல் கொள்ளியை வைப்பேனோ? (எ-று) (சு)

## விருத்தம்.

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையி
லன்னையிட்ட தீ யடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்கமூள்கவே.

(பொ - ரை) (சிவபெருமானால்) பூர்வத்தில் இடப்பட்ட நெருப்ப முப்புரத்திலாகும்; அதன்பிறகு அனுமானால் இடப்பட்ட நெருப்ப இலங்கையிலாகும்; என்தாயார் எனக்கிட்ட நெருப்பு அடிவயிற்றிலாகும். (ஆகையால் மேலேசொன்ன இரண்டிலும் தீமூண்டெரிந்தது போல) இறந்துபோன என்தாயாருக்கு என்னால் வைக்கப்பட்ட நெருப்பும் மூண்டெரியக்கடவது. (எ-று) (எ)

## வெண்பா.

வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்ப
லாகுதே பாவியேனையகோ—மாகக்



பட்டினத்தார் தாயாரின் தகனகிரியைகளை முடித்தல்.

குருவிபறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

(பொ - ரை) பக்ஷிதோஷம் வராதபடி காக்கு நிமித்தம் ஆகாயத்தில் குருவிமுதலிய பக்ஷிகள்பறவாதபடி அவைகளை ஓட்டி, என்னைச் சிராட்டிக் காப்பாற்றி எடுத்துப்பாராட்டும் கைகளானவை, (என்றால் வைக்கப்பட்ட கொள்ளித்) தீயில் வேகின்றனவே! அப்படி வெந்து சாம்பற்றாள் ஆகின்றனவே! ஐயோ! பாவியாகிய நான்பிறந்தது என் தாய்க்குக் கொள்ளிவைத்துக் கொளுத்துவதற்குத்தானோ? (எ-று) (அ)

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோவென்னை மறந்தாளோ—சந்ததமு
முன்னையே நோக்கி யுகந்துவரங் கிடந்தென்
றன்னையே யீன்றெடுத்த தாய்.

(பொ-ரை) திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கின்ற நிர்மலனே! எக்காலத்திலும் உன்னுடைய திருவடிகளையே விரும்பித்தவஞ்செய்திருந்து என்னைப்பெற்றெடுத்த தாயானவள் வெந்துபோய் விட்டாளோ? (அல்லது) உன்னுடைய திருவடியில் வந்து சேர்ந்தாளோ? (குமாரனாகிய) என்னை மறந்தாளோ? (ஒன்றுந்தெரியவில்லையே. எ-று

வீற்றிருந்தாளன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தா ளின்றுவெந்து நீறானாள்—பாற்றெளிக்க
வெல்லீரும் வாருங்க ளேதென் றிரங்காம
லெல்லாஞ் சிவமயமே யாம்.

(பொ - ரை) என்னுடைய தாயானவள் சயனித்திருந்தாள்; (சற்றுச்சென்று பார்த்தபோது) தெருவில்நின்றுகொண்டிருந்தாள்; இப்படியாகநேற்றைய தினமெல்லாம் இருந்தாள் இன்றைய தினத்தில் வெந்து சாம்பலானாள். (ஆகையால்) பால்தெளிப்பதற்காக ஊரிலுள்

ளவர்களே! நீங்கள் எல்லாரும் நேற்று இருந்தாளே இன்றைக்கு நீரு ளுள் என்று சொல்லுகின்ற னேனென்று வியசனப்படாமல் வாருமகள் (ரனென்றல்) இவைகளெல்லாம் சிவன்செயலேயாகையால். (எ-று)

எல்லாஞ் சிவன்செயல் என்பதை;

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றுகு
மன்றியது வரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்"

என்று ஔவையார் சொல்லி யிருப்பதினலறிக. (ம)

வெளிப்பட்டபின் பாடியது.

மென்றுவிழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியுமெனக் கென்கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன் சந்நிதிக்கே வந்து.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நன்மையை நினையாதவரா கிய திரிபுரவாசிகளின் முப்புரத்தையும் நெற்றிக்கண் நெருப்பால் எரி த்த மருதப்பிரான் என்னும் திருப்பெயரையுடையவனே! உன்னு டைய கோவிலுக்குவந்து யாதாயினும் ஒருபொருளை மென்றுதின்று விடாய்கழிக்கும் பொருட்டுச்சலம் தேடுதலாகிய தொழில் எனக்கெ னக்கென்று ஒழியும். (எ-று) (க)

சிற்றம்பலமுஞ் சிவனுமருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே—நித்தம்
பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்
கறந்திடத்தை நாடுதே கண்.

(பொ-ரை) சிதாகாசமும் (அதில் நடனஞ்செய்யும்) சிவபெருமானு ம் சமீபத்திலிருக்க நாம் வெறும் வெளியைத் தேடினோம். (அல்லாம லும்) தினமும் என்னுடைய அறிவில்லாத மனமானது நான்பிறந்த இடத்தையே தேடுகின்றதே. என் கண்ணனது எனக்குப் பால் சுற ந்த இடத்தை விரும்புகின்றதே. இது என்னமாய்கையோ அறி யேன். (எ-று) (உ)

தோடவிழும் பூங்கோதைத் தோகயுனை யிப்போது
தேடினவர் போய்விட்டார் தேரியிரு—நாடிநீ
யென்னை நினைத்தா லிடுப்பி லுதைப்பேனா
னுன்னை நினைத்தா லுதை.

(பொ - ரை) இதழ்கள் மலர்ந்த புஷ்பமாலையைத் தரித்த ஒ பெண ணே நீ என்னை விரும்பி நினைப்பாயானல் உன்னுடைய இடுப்பின் மேல் உதைப்பேன். நானும் உன்னை நினைத்தால் நீ என்னை உதை. ஏனென்றால், உன்னை இப்பொழுதுதேடி அலைந்தவர் போய்விட்டார் ஆகையால், இதை நீ நன்ருய்த்தெரிந்துகொண்டு இருப்பாய். (எ-று)

வாசற்படிகடந்து வாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே—யாசைதனைப்
பட்டிறந்த காலமெல்லாம் போதும்பரமேட்டி
சுட்டிறந்த ஞானத்தைச் சொல்.

(பொ-ரை) பெருமையிற் சிறந்த எம்பெருமானே! நான் வாசற்படி யைத் தாண்டிக் கொண்டு வந்து இடாத பிச்சைக்கு இப்பொழுது ஆசைப்படுவதில்லை. (அப்படி) அந்த பிச்சைக்கு ஆசைப்பட்டிருந்து கழிந்த காலமெல்லாம் போதும். இனி, பரமபுருஷனாகிய நீயே (இப் படிப்பட்ட தென்று) குறித்துச் சொல்லப்படாத ஞானோபதேசத்தை அறிவுறுத் தருளுவாய். (எ-று) (ச)

கண்டங்கரியதாங் கண்மூன் றுடையதா
மண்டலத்தைப்போலே வழகியதாந்—தொண்ட
ரூடலுருகத்தித் திக்கு மோங்குபுக ழொற்றிக்
கடலருகே நிற்குங் கரும்பு.

(பொ-ரை) மிகுந்த சிறப்பினையுடைய திருவொற்றியூரின்கண் சமுத்திரத்தின் சமீபமாக யிருக்கும் ஒரு கரும்பானது கண்டங்கறுப்பானதாம்; கண்கள் மூன்றுடையதாம், ஆகாயத்தைப்போல் அழகினையுடையதாம். அடியார்களுடைய உடம்பானது உருகும்படி தித்திப்பதாம். (அப்படிப்பட்ட கரும்பை நான் இப்பொழுது தான் அடைந்தேன் என்பது குறிப்பு.)

கண்டங்கரியதாம் என்பது நீலகண்டத்தையுடைமையை, கண் மூன்றுடையதாம் என்பது சோம, சூரிய, அக்கினி என்னும் மூவரையும் மூன்றுகண்களாக உடைமையை. இது எந்தக்கரும்பு என்றால் சிவமென்னும் கரும்பு. (ரு)

ஒடுவிழுந்துசீப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்
கிடுமருந்தையானறிந்து கொண்டேன்—கடுவருந்து
தேவாதிதேவன் றிருவொற்றி யூர்த்தெருவிற்
போவாரடியிற் பொடி.

(பொ-ரை) துவாரம் விழுந்து சீழ்வெளிப்படுகின்ற ஒன்பது துவாரத்தையுடைய தேகம் நீங்கும் பொருட்டாக அதற்கு இடப்படும் மருந்தை நான் தெரிந்து கொண்டேன். (அந்த மருந்து எது வென்றால்) ஆலகாலவிஷத்தை அமிர்தமாகச் சாப்பிட்ட தேவர்களுக்குத் தேவனாகிய சுவாமி எழுந்தருளி யிருக்கும் திருவொற்றியூரில் தெருவிற்போகின்றவர்களுடைய கால்களினிடமாக இருந்து பறக்கின்ற தூசுகளாம். (எ-று) (சு)

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர்—பூவுலகி
லீதுசிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதும் திருவொற்றியூர்.

(பொ-ரை) இந்த உலகத்தின்கண் இதுவே சிவலோகமாகு மென்று பெரியோர்களெல்லாம் எக்காலத்திலும் இடைவிடாமல் சொல்லுகின்ற திருவொற்றியூரில், கிணறு குளங்களெல்லாம் புண்ணிய தீர்த்தமாம். அங்குள்ள மணல்களெல்லாம் திருவெண்ணீறும் சோலைகளெல்லாம் கணநாதக் கூட்டங்களாம். (ஆகையால் அப்படிப்பட்ட சிவலோகத்தை நான் இப்பொழுதே அடைந்தேன் என்பதுகுறிப்பு.) (எ)

நச்சரவம் பூண்டானை நன்றாய்த்தொழுவதுவு
மிச்சையிலேதானங் கிருப்பதுவும்—பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும் வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந் தானே சுகம்.

(பொ - ரை) விஷத்தையுடைய பாம்புகளை ஆபரணமாகத் தரித்தவனை, (வேதாகமங்களிற் சொல்லியபடி) பூசிப்பதும், சிவசுதந்தரமாக இருப்பதுவும், பிச்சையெடுத்துத் தின்பதுவும், பிறகு வந்து, திருக்கோயிலின் வாசற்படியில் தூங்குவதுமே சுகமாம். (எ-று)

ஆகையால் இந்தச்சுகத்திற்கு உலகத்திலுள்ளவர்களே நீங்களும் வாருங்கள் என்பது இரக்கவிளி. (எ-று) (அ)

இருக்குமிடந்தேடி யென்பசிக்கே யன்ன
முருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்-பெருக்க
வழைத்தாலும் போகே னரனேயென்றேக
மிளைத்தாலும் போகேனினி.

(பொ-ரை) கடவுளே! நான் இருக்கின்ற இடத்தைத் தேடிக்கொண்டு வந்து என்னுடைய பசிக்கு மிகுந்த பிரியத்துடனே சாப்பாடு கொண்டு வந்தாலே உண்பேன். (அப்படிக்கல்லாமல்) அவர்கள் என்னையே தங்களிடத்திற்கு வரும்படி எவ்வித உபசாரத்தால் அழைத்தாலும் நான் போகமாட்டேன். அப்படி உணவெடுக்காமையினால் என்னுடைய தேகமானது இளைத்துப்போய் விட்டாலும் நான் போகமாட்டேன். (எ-று) (கூ)

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே யுடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேற்றுங்கள் போற்றுங்கள்
சொன்னேனதுவே சுகம்.

(பொ-ரை) இந்தத்தேகத்தை உயிரானது விட்டுவிடப் போகிறது, அப்படி விட்டவுடனே (அவ்வுயிர் இறந்துபோய்விட்ட) உடம்பைச சாதியார்களெல்லாங் கூடி (கூக்குரலிட்டு) சுட்டுவிடப்போகிறார். (இப்படி மானிடப்பிறப்பாகத் தாய் வயற்றிற் பிறந்தும் ஒரு பிரயோசனத்தையும்.) அடையாமல் வீணாகப்போய் விடுவதற்குப் பிறந்தென்ன பலன். ஆகையால் உலகத்தவர்களே! நீங்கள் எவ்வளவு கஷ்டத்தை அநுபவித்தாலும், எப்பொழுதும் இடைவிடாமல்சிவபெருமானை அவனது புகழைச் சொல்லித் துதிசெய்யுங்கள் அவனை வாழ்த்துங்கள் இப்படி நீங்கள் செய்வதே சுகநிலையாகும், நான் சொல்லி விட்டேன். (எ-று) (ய)

ஆவியொடுகாய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தார முங்கடம்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலே திரி.

(பொ - ரை) பேதைமனமே! உலகத்தின்கண் உயிரும் உடம்பும் அழிந்தாலும் பாவியென்கிற பேர்மாத்திரம் எடுக்கவேண்டாம், அல்

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20


லாமறும், பொருந்திய சிறப்பினையுடைய விஸ்தாரமும், பெருமையும் வேண்டியதில்லை, வேறு எப்படியிருக்க வேண்டுமென்று கேட்பாயானால், செத்தவர்களைப்போலத் திரிந்துகொண்டு இருக்கக்கடவாய்.

ஆரூ ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றூரூர்க டோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீதேடுவீர்.

(பொ-ரை) நேராக மனத்தின்கண் உள்ள குறிப்பைத் தேடிப்பிடிக்காத ஊமைகளே! நீங்கள் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் வீதி விடங்கப்பெருமான் இவ்விடத்திலிருக்கவும்; (இவ்விடத்தில் அவனை அறிந்து கொள்ளாமல்) அந்தத் திருவாரூரில் திருவிழா நடக்கிறதென்று அந்த ஊர்முதல் பலவூர்களுக்கும் போய்த்திரிவீர்கள் ஆகையால் நீங்கள் விளக்கு இருக்கவும் நெருப்புத் தேடுகின்றவர்களுக்கு ஒப்பாவீர். (எ-று)

விளக்கிருக்கத் தீதேடுவீர் என்றது ஞானக்கண் இல்லை என்பதை விளக்குதற் பொருட்டேயாம். (எ-று) (கஉ)

எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்க
ளெத்தனைபே ரிட்டழைக்க வென்னென்றே—நித்த
மெனக்குக் களையாற்று யேகம்பா கம்பா
வுனக்குத் திருவிளையாட்டோ.

(பொ-ரை) (நான் முன்னே) ஜென்மங்கள் எடுத்தபோது பிறந்தது எத்தனையூரோ? எத்தனைவீடோ? என்னைப் பெற்றவர்கள் எத்தனை தாய்மார்களோ? அந்தந்த தாய்மார்களெல்லாம் என்னை எத்தனை எத்தனையோ பேர்கள் வைத்துக் கூப்பிடவும் அத்தனைக்கும் ஏன்? ஏன்! என்றேன். ஆகையால் காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும்

ஏகாம்பரக்கடவுளே! அப்படி அந்தச் ஜென்மங்களால் எனக்கு உண்டான இளைப்பை மாற்றுமல் இருக்கின்றனையே, இது உனக்கு ஒரு திருவிளையாட்டோ? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. (எ-று)

எனக்குக் களையாற்றுய் என்றது என்னுடைய ஜென்மத்தை நீக்கியாட்கொள்ள வேண்டும் என்பதாம். அப்படியாட்கொண்டால் என்னுடைய களைநீங்கிப்போய்விடும். (எ-று) (கந)

மண்ணுந் தணலாற வானும்புகையாற
வெண்ணிரிய தாயு மிளைப்பாறப்—பண்ணுமயன்
கையாறவு மடியேன் காலாறவுங் கண்பா
ரையா திருவை யாறு.

(பொ - ரை) என் தந்தையே! திருவையாறு என்னும் க்ஷேத்திரத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருப்பவனே! பிருதிவி பூதமானது (தன்னுடைய) அனல் அடங்கும்படியாகவும், ஆகாயபூதமானது புகையடங்கும்படியாகவும், (என்னைச் சநநங்கள் தோறும் பெற்றெடுத்த) அனேக தாய்மார்கள் இளைப்பாறும்படியாகவும், (முன்சொன்னபிருதிவியாலும் ஆகாயத்தாலும்) சிருஷ்டிசெய்யும் பிரமனுடைய கையாறும்படி யாகவும் அடியேனுகிய என்னுடைய கால்கள் ஆறும்படியாகவும் திருநோக்கம் வைத்தருள்வாய். (எ-று)

இப்படியெல்லாம் சொன்னதினல் எனக்கு இது வரைக்கும் வந்தஜென்மங்களை நீக்கி என்னை நின்னடிக் கன்பனுக்கிக் கொள்ள வேண்டும் என்பதாம். (கச)

## பின்முடுகு வெண்பா.

இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச்-சொப்பனம்போல்

ปแ8L65ч3)



விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தபஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு.

(பொ-ரை) (எப்பொழுதும் என்னைக்கெடுத்துக் கொண்டே யிருக்கிற) மனமே! (ஒருவனுக்கு) மிகுந்த செல்வமும், வாசலோடு கூடிய வீடும் (இன்னும் பெண்டுபிள்ளை முதலாகச்சொல்லப்பட்ட எல்லாம்) இருக்கவும், (அவன் நித்திரையிற்கண்ட) சொர்ப்பனம்போல விக்கலெடுத்துப் பற்கள் கிட்டிக்கொண்டும், கண்கள் பஞ்சடைந்து சலத்தையும், கோழையையும் ககியும்சாக, (அவனுக்குப் பலவகையான வாத்தியங்கள்) அடிப்பதைப் பார்த்தும், (இப்படிப்பட்ட) இந்தச சென்மத்தை (நிலையுள்ளதென்று) நம்பி யிருப்பார்களோ? பெரியோர் நம்பமாட்டார். (எ-று)

ஆகையால் நீயும் இவ்வுலகவாழ்க்கையை விரும்பவேண்டாம் என்பது கருத்து.

இப்பாட்டு மனத்திற்கு அறிவு புததிசொல்லுதல். (கரு)

மேலுமிருக்க விரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந் தில்லையே சிந்தையே-கால்கைக்குக்[ட்டவுடல்
கொட்டையிட்டு மெத்தையிட்டுக்குத்தி மொத்தப்ப
கட்டையிட்டுச் சுட்டுவிடக் கண்டு.

(பொ - ரை) மனமே! கால்களுக்கும் கைகளுக்கும் மெத்தைபோட்டுச் சுகத்திற்காக மற்றவர்களால் காலந்தோறும் குத்தப்பட்ட இந்த உடம்பை, (உயிர்போனபோது சுற்றத்தார்களெல்லாருகூடி) கட்டை (வறட்டி) முதலியவைகளைப் போட்டுத் தீமூட்டிச் சுட்டுவிடுவதைப் பார்த்தும், இன்னும் இவ்வுலகவாழ்க்கையையே விரும்பினையே யொழிய வெள்ளிய இருஷபவாகனருடைரான சிவபெருமானுடைய காருணியத்தை உணர்ந்து அவனைச்சேர்ந்தாயில்லை. (எ-று)

இனியாயினும் இவ்வுலக வாழ்க்கையை விட்டுச் சிவபெருமானுடைய திருவடிக்குப் பாத்திரனுவாய் என்பது கருத்து. (கசு)

ஒன்பதுவாய்த் தோற்பைக் கொருநாளைப் போலவே
யன்புவைத்து நெஞ்சே யலைந்தாயே—வன்கழுக்க
டத்தித்தத் திச்சட்டை தட்டிக்கட்டிப் புட்டுக்
கத்திக்குத் தித்தின்னக்கண்டு.

(பொ - ரை) மனமே! இந்த உடம்பை வலிமையையுடைய கழுகுப் பக்ஷிகள் (ஒன்ரேடொன்று சண்டையிட்டுக்கொண்டு) கூக்குரலிட்டு குதித்துக் குத்திப் பிட்டுத்தின்ன அதனைப் பார்த்திருந்தும் (அந்த ஒன்பது தொளையோடு கூடியதோற்பையாகிய உடம்பைப்) பாதுகாக்கு நிமித்தமே அதனிடத்தில் அன்புவைத்து ஒருநாளைப்போல அலைந்து திரிந்தாயே; இதற்குத்தானே நீ இவ்வுலகத்தில் பிறந்தது? (எ-று)

இந்தக்கழுகு ஒன்றுதானு இந்த உடம்பைப் பிடுங்கித்தின்னுகின்றது வேறுநாய், நரி, பேய், நமன், நோய் இவைகளும் பிடுங்கித்தின்னுகின்றன என்பதைத் தெரிவிப்பதற்காகக்கழுகைமாத்திரம்சொன்னார்.

நாய் நரிகளும் இந்தத்தேகத்தை விரும்புகின்றன என்பதற்குத் திருஷ்டாந்தம்;

"நாய்நமதெென நமதெனப்பிதா
தாம்நம தெனநமன் தனதெனப்பிணி
பேய்நம தெனமன மதிக்கும்பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கையாரதே"

என்று பரஞ்சோதிமுனிவர் சொல்லி யிருப்பதாலறிக. (கஎ)

இன்னம்பிறக்க விசைவையோ நெஞ்சமே
மன்னரிவ றென்றிருந்து வாழ்ந்தவரை—முன்ன

மெரிந்தகட்டைமீது விளக்கோ வணத்தை
யுரிந்துருட்டிப் போட்டது கண்டு.

(பொ - ரை) மனமே! இவர்தாம் அரசர்கள் என்று கண்டோர் சொல்லும்படி (மிகுந்த செல்வத்துடன்) வாழ்ந்திருந்தவர்களையும், முன்னதாகத் தீமூட்டி எரிந்து கொண்டிருக்கும் கட்டையின்மேல் கோவணத்தையும் வைக்காமல் அவிழ்த்துக்கொண்டு உருட்டிப்போட்டு கொளுத்துவதைக் கண்டும், (இவ்வுலகத்தில் இன்னும் ஜெந்மமெடுப்பதற்குச் சம்மதிப்பையோ?) (எ-று)

மனமே அரசர்களாக வாழ்ந்திருந்தவர்களும் செத்தார்களே யொழிய பிழைத்தவர்களில்லை. ஆகையால் இந்தத்தேகம் இருக்கும் பொழுதே சிவபெருமானை அடையும்படியான தவத்தைச்செய் என்பது கருத்து. (கஅ

முதற்சங் கமுதூட்டு மொய்குழலார் தம்மை
நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங்—கடைச்சங்க
மாம்போத தூது மம்மட்டோ விம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம்.

(பொ-ரை) (நாம் பூமியில் தாய் வயிற்றிலிருந்து பிறந்தவுடன்) முதலில் ஒரு சங்கானது பாலைக்குடிப்பிக்கிறது; நமக்கு (விவாகபருவத்தில்) நடுவில் ஒருசங்கானது மனைவி என்கிற விலங்கைப்பூட்டுகிறது; கடைசியில் ஒரு சங்கானது இறந்துபடும்போது ஊதுகின்றது; ஆகையால் நாம் உலகத்தில் பிறந்துவாழ்ந்த லக்ஷணம் அவ்வளவோ? இவ்வளவோ? அதைச் சொல்லக்கூடவில்லை. (எ-று)

* நடுவில் ஒருசங்கு என்றது கலியாணஞ் செய்யுங்காலத்தில் மாங்கலியதாரணம் செய்யும்போது ஊதும் சங்கம். (கக

இப்பொய்யை யொழியாய் புலாலைவிடாய் காளத்தி
யையரே யென்று யறஞ்செய்யாய்—வெய்ய
சினமே யொழியாய் திருவெழுத்தைந் தோதாய்
மனமே யுனக்கென்ன மாண்பு.

(பொ - ரை) மனமே! நீ பொய் பேசுவதை நீக்கமாட்டாய்; ஓருயிரைக்கொன்று தின்னுவதை விடமாட்டாய்; ஸ்ரீகாளத்தியில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் சிவபெருமானைக் காளத்தியப்பரே என்று ஒருகாலத்திலும் வாயார வாழ்த்தமாட்டாய்; தருமஞ்செய்யாய்; கொடிய கோபத்தை நீக்கமாட்டாய்; பஞ்சாக்ஷர தியானமுஞ் செய்யமாட்டாய். ஆகையால் உனக்கு சிவசம்பந்தமான பெருமை என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. (எ-று)

ஒரு காலத்திலாயினும் சிவனஞ்செழுத்தைத் தியானஞ்செய்யாத உனக்கு ஞானமார்க்கத்தா லடையும் சிவப்பேறு இல்லை என்பது கருத்து. (உம)

எருவாய்க் கிருவிரண்டு மேலுறுண் டிருக்குங்
கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்—திருவாரூர்த்
தேரோடும் வீதியிலே செத்துக் கிடக்கின்றாய்
நீரோடும் தாரைக்காநீ.

(பொ-ரை) மலமானது இறங்கும் வழிக்கு இருவிரற்கடைமேலிருக்கும் கருப்பவழிக்கு நீ வியசனப்பட்டு அந்த நீரிறங்கும் வழிக்காகவே நீ திருவாரூர் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் தேரானது எப்பொழுதும் போய்க்கொண்டேயிருக்கும் தெருவினிடமாக இறந்துபட்டிருக்கிறாய் (அந்தோ! அந்தக்குழியின் விருப்பத்தால் நன்மார்க்கத்தையுடைய வந்தவுயிரைத் துறந்து விட்டாயே. இதுவோ உன்னுடைய மானிடப்பிறப்புக்கு அடுத்த செய்கை) (எ-று)

பெண்போகத்தை விரும்பிப் பெரும்போகத்தை யடையும் உயிரை நீங்கினையே, ஆகையால் இனி நீ எக்காலத்தில் கடைத்தேறுவாய் என்பது கருத்து. (உக)

மாதாவுடல்சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்துவிட்டானே—நாதா
விருப்பையூர் வாழ்சிவனே யின்னமோ ரன்னை
கருப்பையூர் வாராமற் கார்.

(பொ - ரை) எனக்குத் தலைவனே! இருப்பையூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானே (என்னைச் ஜென்மந்தோறும் பெற்றெடுத்தமையால்) தாய்மார்கள் சரீரத்தளர்ச்சி யுடைந்தார்கள்; தீவினையுடையவனாகி நான் (பிறந்து பிறந்து) கால்தளர்ந்தேன்; பிரமனோ (என்னைச் சிருஷ்டித்துச் சிருஷ்டித்துக்) கைதளர்ந்தான். ஆகையால் நீ இனிமேலாயினும் வேறொரு தாயின் வயிறாகிய ஊரினிடமாகவிருந்து பிறவாதபடி என்னைக் காத்து ரக்ஷிக்கவேண்டும். (எ-று)

சிவபெருமானே! நீ தாய்வயிற்றிற் பிறவாதவனாகையால் உன்னை நாடிய என்னையும் அப்படியே தாய்வயிற்றில் பிறவாதபடி காக்கவேண்டும் என்பது கருத்து. (உஉ)

அத்திமுத லெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந் தளிக்குந்தேசிகா—மெத்தப்
பசிக்குதையா பாவியென் பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையா காரோணரே.

(பொ - ரை) யானைமுதல் பிபீலிகாந்தமுள்ள எல்லா உயிர்களையும் மனமகிழ்ந்து காப்பாற்றுகின்ற தேவனே! திருக்காரோகணம் என்கிற க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! எனக்கு மிகவும் பசியாயிருக்கிறதே. (அந்தப் பசியானது) பாவியாகிய என்

னுடைய வயிற்றைப்பற்றி யிழுத்து இசிவு என்கிற ரோகத்தை உண்டாக்குகின்றதே. இதற்கு நான் என்னசெய்வேன். (எ-று)

பீலிகம்-எறும்பு. இசிவு என்கிறரோகம்-ஆநாகரோகம். (உ௩)

எத்தனைநாள் கூடியெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பகலற்றிடத்தே
யேலைக் குடியிருப் போமே.

(பொ - ரை) அநேக நாட்கள் சம்போகித்து (அதனால்) உண்டான இந்தச் சரீரங்களை யெல்லாம் மண்ணானது தின்றுவிடுகிற தல்லவோ? ஆம். (ஆகையால் நாம் அப்படி வீணே இறந்து படாமல்) பிராணாதாரமான காற்றை, இரேசக, பூரக, கும்பகங்களால் வசப்படுத்தி அந்தவாயுவின் மூலமாகவே போய் இராப்பகலற்ற மௌனவீட்டில் சதா குடியிருப்போம். (எ-று) (உச)

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதே
யெச்சி லிருக்கு மிடமறியீ—ரெச்சிறனை
யுய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்த நிராமய மாமே.

(பொ - ரை) (வெளியிடத்தில் தீண்டப்படாத ஒருபொருளை) எச்சில்! எச்சில்!! என்றுசொல்லி நன்மை தீமைகளைப் பேசுதலை நீக்குக? ஏனென்றால்; எச்சிலான ஒருபொருள் இருக்கும் வெறு வெளியை நீங்கள் உணரமாட்டீர் ஆகையால் (அப்படி அதை உணர்ந்து கொள்ள வேண்டுமானால்) அந்த எச்சிலிருக்கும் இடத்தை அதிக குறிப்பாக மௌனநிலையிலிருந்துக்கொண்டு பாராமல் பார்த்தால் அதனுடைய உண்மை வெளியாகும். அது வெளிப்பட்டபின் சித்தமானது (அப்பொருளின் மயமான) வெறு வெளியாய் நிற்கும். (எ-று)

உலகத்தில் எச்சில் என்று சொல்லப்படுகின்ற பொருள்களெல்லாம் எச்சில் அல்ல, பரம்பொருளே எச்சில். ஆகையால் அப்பொருள் உங்களுக்குக் கைகூடும்படி முயற்சியுங்கள் என்பது கருத்து. (உரு)

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்றா ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

(பொ - ரை) ஓ மனமே! எமனானவன் வந்து உயிரைக்கொண்டு போவதற்கு முன்னே; கண்கள் பஞ்சடைவதற்கு முன்னே; பாலைக் குடிக்கும்படியான வாயானது திறவாதபடி போகா முன்னே; உடம்பின்மேல் சுற்றத்தார்களெல்லாங் கூடி விழுந்து அழுவதற்கு முன்னமே; ஊரார்களெல்லாங்கூடி சுட்டுவிடுவதற்கு முன்னமே; நீ திருக்குற்றாலம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் துதிசெய்யக்கடவாய். (எ-று)

மனமே! வீணே இறந்து விட்டால் மறுபடியும் இச்சென்மம் வருமோ? எச்சென்மம் வருமோ? தெரியவில்லை. ஆகையால் உனக்கு எமவாதை வந்தடையாத முன்னமே சிவபெருமானைத் துதிசெய்யக்கடவை என்பது கருத்து. (உசா)

எத்தனைபேர் நட்டகுழி யெத்தனைபேர் தொட்டமுலை
யெத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்.

(பொ-ரை) தினந்தோறும் எத்தனை பேர்களாலே நடப்பட்டகுழியையும், எத்தனைபேர்களாலோ தொடப்பட்டமுலையையும், எத்தனை பேர்களாலோ பிடித்திழுக்கப்பட்ட இதழையுமுடைய பொய்பேசுந்

தொழிலில் திறமுள்ள இவ்வுலகப்பெண்களை விரும்பி அவர்களுக்குப் பின் செல்லும் பேதைமையை விட்டு பிழைப்பாயாக. (எ-று) (உஎ)

இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்க் கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

(பொ - ரை) மனமே! பெரிதாகிய வயிற்றை நம்முடைய தென்று நாம் நினைத்திருக்க, நாய், நரி, பேய், கழுகுமுதலிய வைகளெல்லாம் தம்முடைய தென்று நினைத்திருக்கும். ஆகையால், நம்முடைய தேக மானது இருப்பது பொய்யாம். இறந்துபடுவது மெய்யாம். என்று நன்றுயாராய்ந்தறிந்து நீ யாவருக்கும கெடுதியைச செய்ய நினைக்க வேண்டாம். (எ-று)

தேகம் நிலையில்லாததாகையால் அதைநம்பி ஒருவருக்கும் கெடுதி செய்ய நினைக்கவேண்டாம் என்பது கருத்து. (உஅ)

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தை பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்
காதிவிளையாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

(பொ-ரை) தாதியானவள் தலைமேல் நீர்க்குடம் வைத்து வேறு ஒன்றையும் மனத்தில் எண்ணுமல் விளையாடிக்கொண்டு கைவீசி வந் தாலும் மனம்மாத்திரம் நீர்க்குடத்தின் பேரிலேயே இருப்பதுபோல் எந்த வேலையைச் செய்தாலும், எப்படிப்பட்ட அவஸ்தைகளை அடைந் தாலும் சீவன்முத்தர்களுடைய மனமானது மௌன நெறியின் கண் ணே பதிந்திருக்கும். (எ-று)

ஜீவன் முத்தர்கள் சதா நிஷ்டையில் இருப்பார்கள் என்பது கருத்து. (உகூ)

மாலைப் பொழுதினலு மஞ்சளரைத்தே குளித்து
வேலை மினுக்கிட்டு விழித்திருந்து சூலாகிப்
பெற்ருள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தாளு லென்செய்வாள் பின்.

(பொ-ரை) ஒருத்தி சாயங்காலவேளையில் நல்லமஞ்சளை அரைத்துப் பூசிக்குளித்துத் தூங்காமல் கூடி சுகித்திருந்து கர்ப்பத்தையடைந்து பெரும்பிள்ளையைப் பெற்று வளர்த்துப் பெயரிட்டாள். அப்படி அவள் பெற்றபிள்ளை பித்தனுனல் பிறகு என்னசெய்வாள்.

இச்செய்யுள் தான் பித்தானதையும் தன் தாய்பட்ட துக்கத்தையும் வெளிப்படை யாக்குகின்றது. (௩௰)

## விருத்தம்.

வான்றேடுமறையேயோ மறைதேடும்பொருளேயோ
ஊன்றேடுமுயிரேயோ வுயிர்தேடுமுணர்வேயோ
தான்றேடநான்றேடச் சகமெலாந்தனைத்தேட
நான்றேடிநான்காண நானேரோ நானேரோ.

(பொ - ரை) உலகத்தார்களெல்லாம் தேடப்பட்டு நின்ற ஒருபொருளானது என்னைத்தேட நானும் அதைத்தேடிக்கண்டு பிடித்தேன் பிடித்தபிறகு நானென்கிற ஒருதன்மையானது என்னிடத்தில் இல்லாமற்போகப் பண்ணிவிட்டது. அப்படிச்செய்த அந்தப் பொருளானது தேவர்களால் தேடப்படும் வேதப்பொருளோ? அவ்வேதங்களால் தேடப்படும் மேலான பொருளோ! உடம்பாற் றேடப்படும் உயிரோ அவ்வுயிராற் றேடப்படும் அறிவோ? ஒன்றும் அறிகிலேன் (ஈதென்ன ஆச்சரியம்) (எ-று)

## பட்டணத்துப் பிள்ளையார்பாடல்
### மூலமும் - பொழிப்புரையும்
### முற்றுப்பெற்றது.

## உடற்கூற்றுவண்ணம்.

தனதனதான தனதனதான
　　தந்ததனந்தன தானதனந்த
தனனதனந்த தனனதனந்த
　　தானனதானன தானனதந்த—
　　தந்ததனதான தனதானனெ.

ஒருமடமாது ஒருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
　　ஊறுசுரோணித மீதுகலந்து—

(பொ-ரை) ஒரு இளம்பெண்ணும், ஒரு வாலிபனும் சுகத்தைக் கொடுக்கின்ற புணர்ச்சியிற்கூடப், புத்திகலங்கி வெளிப்பட்ட இந்திரியமானது அந்தப் பெண்ணின் இரக்தா சயத்தில் கலந்து;

பனியிலோர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்துதிரண்டு பதுமவரும்பு கபடமிதென்று
　　பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

(பொ-ரை) (அந்த இந்திரியமும், இரத்தமும் சேர்ந்து) ஒருபனித் துளியினும் பாதியளவாகி (அந்த ஆசயத்திலிருந்து புறப்பட்டு) அந்தப் பெண்ணின் கருப்பாசயத்தில் புகுந்து அவ்விடத்திலிருந்து திரண்டு தாமரை மொக்கின் பொருட்டைப்போல் கண்களும், உடம்பும், வாயும், காதும், கால்களும், கைகளும், என்று;

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்று
நிறைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
　　யோகமும்வாரமு நாளுமறிந்து—

(பொ-ரை) சொல்லப்பட்ட ரூபங்களோடு கூடி உயிரானது விருத்தி யடைவதற்குத் தகுந்த பத்துமாதமும் சென்றவுடன் அந்தப்

பெண்ணின் வயிற்றைவிட்டு பூமியில் விழ, அப்பெண்ணைச் சேர்ந்தவர்கள் யோகவார நட்சத்திரங்களை விசாரித்தறிந்து;

மகளிர்கள் சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து—

(பொ - ரை) அப்பெண்வீட்டார் அணையாடையிலிட்டுத்துயிற்ற மெல்லத் தரையில் வந்து கவிழ்ந்து தவழ்ந்து தன்தாயின் முலைப் பாலுண்டு ஒவ்வோரறிவாக விருத்தியடையப் பெற்றுவளர்ந்தும்;

ஒளிநகையூற விதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப—

(பொ-ரை) பலபெண்களும் கூடி முத்தங்கொடுக்கும் பொருட்டு அழைக்கத் தவழ்ந்து வந்து மடியிலிருந்து கொண்டு குதலைச்சொற்களிற் சிலபேசி, வாவா, போபோ என்கிற பேர்களைச் சொல்லவும்;

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர் தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து—

அஞ்சுவயதாகி விளையாடியே.

(பொ-ரை) வஸ்திரமும், இரத்தனங்களாற் செய்யப்பட்ட கயிறுகளும் இடுப்பிலிருந்து அசையும்படி போஜனஞ் செய்பவர்களுடனும், யாதாமொரு பொருளைத் தின்கிறவர்களுடனும் கூடியிருந்து அவைகளைத் தின்று, தெருவினிடமாகச்சென்று மண்ணிலிருந்து விளையாடி அம்மண்ணை உடம்பிற் பூசிக்கொண்டும், தன்னைத்தேடி வரும் பிள்ளைகளுடன் ஓடியும் நடந்தும், செய்கின்றவிளையாட்டை அஞ்சுவயதில் விளையாடியும், (4)

உயர்தருஞான குருவுபதேச முத்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—

(பொ-ரை) பின்னர் நல்ல ஞானாசிரியனை யடைந்து குருபதேசம் பெற்றுத் தமிழ்ச்சாஸ்திரங்களில் தேர்ச்சி யடைந்து இவன் வளர்கின்ற சந்திரனாவானென்று யாவரும் சொல்லும்படி (யிருந்து) பதினாறாவது வயதையும் வரப்பெற்று;

மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர்தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—

(பொ-ரை) தன்தலைக் குடுமியை நன்றாகச் சிக்கறுத்துக் கோதி முடிந்து ஆறு கால்களையுடைய வண்டுகள் மொய்க்காநின்ற நல்ல புஷ்பமாலைகளைத்தரித்து, இரத்தினங்களாலும், பொன்னாலும் செய்யப்பட்டு விளங்காநின்ற ஆபரணங்களைத் தரித்து, மாகதர்போகதர் என்னும் டம்பர்களெல்லாம் கூடிவணங்கும்படியாய், (போக)

மதனசொரூப னிவனென மோக மங்கையர்கண்டு
மருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

(பொ-ரை) இவனைக்கண்ட மோகப்பெண்களெல்லாம் இவனே மன்மதனாவானென்று மயங்கி ஒன்றாகச் சேர்ந்து தங்கள் கண்களால் சாடைகாட்டி மயிலைப்போல் அவர்கள் போகின்றதைப் பார்த்து;

மனதுபொறாம லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

(பொ-ரை) மனம் தாளாதவராகி, அந்தப்பெண்களுக்குப் பிறகே ஓடிப்போய் அவர்களுடைய அழகிய ஸ்தனங்கள் தம்முடைய புஜங்

களில் பொருந்தும்படி மயக்கி, அதரபானஞ்செய்து, மாம்பழம் முதலிய பொருள்களை அவர்களுக்குக் கொடுத்து;

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
மும்பிவிழுந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

(பொ-ரை) முதற்பொருளாகவும், மிருதியாகவு மிருந்த திரவியங்களை யெல்லாம் தீயமார்க்கத்தில் செலவிட்டு மதனலீலா வியசனம் இதுவேயாகு மென்பதற்கு (அறிகுறியாக) வாலிப லக்ஷணமானது மாறுபட்டு;

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோத குரோதமடைந்து—

(பொ-ரை) ஆயுளின் வண்மையும், இளம்பிராயமும் நீங்கி, வலிமையுடைய பற்கள் விழுந்து இரண்டு கண்களும் யிருள் சூழ்ந்து, வயது முதிர்ச்சி யடைந்து, நரை, திரைகள் வந்து கடையில் வருவதாகிய வாதரோக மீடிப்பை யடைந்து செவந்த கையினிடமாக ஒரு தடியைப் பிடித்து; (½)

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமழிந்து செவிடும்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

(பொ-ரை) வருவது போவதாகிய, ஒருகிழக்கூன் குரங்கைப்போலக் குந்திக் குந்தி நடந்து அறிவழிந்து, காதுகேளாமல் எந்நேரமும் இடைவிடாமல் பேசிக்கொண்டிருந்து;

துயில்வருநேர மிருமல்பொறுது தொண்டயுநெஞ்சு
முலர்ந்துவறண்டு துகிலுமிழுந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு—

(பொ-ரை) தூங்குங்காலத்தில் வரும் இருமலைச் சகிக்க முடியாமையால் தொண்டையும், மார்பும் வறண்டு உலர்ந்து, யிடுப்பில் வஸ்

திரத்தைப் போக்கி சுணைகெட்டு, பெண்சாதி, பிள்ளை
வியசனத்தை யடைந்திருக்கும்படியாக;

கலியுகபீதி யிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்சு சகலமென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து—

(பொ - ரை) யிக்கலியுகத்தின்கண் யிவருடைய யில
மாருங்கள் என்று சொல்லிப் பேசிக் கொள்பவர்களுக்கு
அதிகரிக்கும்படியாகத் திடீரென்று மலமும், சலமும யிப்
வழியாகவும், மேல்வழியாகவும், ஓடி;

தெளிவுபிராம னுரைதடுமாறி சிந்தையுநெஞ்சு
லைந்துமருண்டு திடமுமலைந்து மிகவுமலைந்து
தேறிநலாதர வேதனைநொந்து—

(பொ - ரை) மனத்தில் தெளிவில்லாமல் பேச்சதடு
றும், சிந்தையும் கெட்டுத் தன்னுடைய திடசித்தம்
அலைந்து ஆராய்ந்து நல்ல துணையாவது யின்னும்
மனம் வருந்தி;

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்ட
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியென
மேதினி வாழ்[illegible]லாதினி நின்ற—

(பொ-ரை) ஆனால் வேதங்களுக்குரிய பிரமன் எழுதி
மும் வந்து விட்டது என்று தெளிந்து, யினிமேல் வே
இருக்கின்றதா? வேறு தொந்தமும் யிருக்கின்றதா? (
பால்) யிவ்வுலக வாழ்க்கையானது நிற்கமாட்டாது.
வாழ்க்கையானது நிலையாயிருந்த;

உடன்பிறைபேசு மெனவுரைநாவு றங்கிவிழுந்து
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சியாழுகிட
பூதமுநாலுசு வாசமுநின்று—

நெஞ்சுதடுமாறி வருநேரமே

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY